151

Approved by the Text-book Committee.

சூளாமணி

(ஐஞ் சிறு காப்பியங்களி லொன்று)

OF THE REGISTRAR
No.
4-JUN 1929
MADRAS

சென்னை, புரசைப்பாக்கம்
கலவல
இராமாநுஜம் செட்டியார் உயர்தரப் பாடசாலை
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

வ. கி. திருமலாசாரியார்

எழுதியது

இரண்டாம் பதிப்பு

தி. ஸ்ரீசைலம் அண்டு கம்பெனி
புஸ்தகம் பிரசுரிப்பவர்கள்
வேப்பேரி—சென்னை
1929 [விலை அணா 10

0-, 1D7H,C.

சூளாமணி

(ஐஞ் சிறு காப்பியங்களி லொன்று)

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
No.
4-JUN 1929

2221
8948111

சென்னை, புரசைப்பாக்கம்
கலவல இராமாநுஜம் செட்டியார் உயர்தரப் பாடசாலை
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

வ. கி. திருமலாசாரியார்

எழுதியது.

இரண்டாம் பதிப்பு

தி. ஸ்ரீசைலம் அண்டு கம்பெனி

புஸ்தகம் பிரசுரிப்பவர்கள்

வேப்பேரி-சென்னை.

1929.

காபி ரயிட்]

[விலை அணா 10.

O-1D7M1C
N29

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம
1.	குமாரகாலச் சருக்கம்	1
2.	இரதநூபுரச் சருக்கம்	8
3.	மந்தரசாலைச் சருக்கம்	14
4.	தூதுவிடு சருக்கம்	26
5.	சீயவதைச் சருக்கம்	39
6.	கலியாணச் சருக்கம்	56
7.	அரசியற் சருக்கம்	71
8.	சுயம்வரச் சருக்கம்	104
9.	துறவுச் சருக்கம்	119
10.	முத்திச் சருக்கம்	131

ஸ்ரீ

முகவுரை

தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்றி யமையாதனவாகக் கருதி வெளியிடப்பெறும் உரைநடைப் புத்தகங்கள் பல, சில வருடங்க ளாகத் தோன்றி யுலவுகின்றன. பழைய இலக்கிய நூற்களிற் சிறந் தனவற்றை அம் முதனூல்களுள் நிறைந்து விளங்கும் சுவை யாவும் பொருந்த உரைநடையில் பேர்த்தமைத்தல் கலாசாலைகளிற் பயிலும் தமிழ் மாணவர்க்குப் பெரிதும் பயனளிக்கு மென்பது உண்மை. உரைநடை வாயிலாகப் பழைய நூலிற் காணப்பெறும் கதைப் போக்கினையும் சொல் நயத்தையும் பொருள் நயத்தையும் இடை யிடையே தோன்றும் நீதிகளையும் அறிந்த மாணவன் இத்துணைச் சிறப்பினைத் தன்னுட்கொண்ட முதனூலினை நாளடைவில் கற்க ஆசை கொள்கின்றனன். ஆகையா லித்தகைய வசன நூற்கள் அவ னுக்கு இலக்கியச் சுவையை யூட்டி, பண்டைய நூல்களைக் கற்றற்குச் சிறந்த சாதனங்களாகின்றன. அன்றியும் கதை மூலமாகப் பூர்வீகரது நாகரீக மேன்மையையும், அரசியற் சிறப்பையும், கல்வியி னுயர் வையும், தெய்வ வழிபாட்டினையும் அளந்தறிதல் கூடும். ஆகையால் சரித்திர ஆராய்ச்சிக்குரிய பல விஷயங்களை யறிதற்கும் இம்முறை யி லியற்றப்படும் உரைநடை நூல்கள் மிக்க பயன்படுகின்றன.

ஸ்ரீபுராண மென்னும் வடநூலினை யாதாரமாகக் கொண்டு ஜைனமுனிவராகிய **தோலாமொழித்தேவர்** என்பவர் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்தைஞ்ஞூறு வருடங்களுக்கு முன் செந்தமிழ்ச் செய்யுட்களில் இச் **சூளாமணி**யைப் பாடினர். இந்நூல் ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று. இச்சூளாமணியினின்றும் அநேக செய்யுட் கள் யாப்பருங்கல விருத்தியிலும் குணசாகரர் இயற்றிய காரிகை விரி

வுரையிலும் மேற்கோள்களாக எடுத்தாளப்பட் டிருக்கின்றமையின் இதன் பழமையும் பெருமையும் நன்கறியக் கிடக்கின்றது.

இத்தகைப் பெருமை வாய்ந்த நூலினைப் பாடசாலையிற் பயிலும் மாணவர் உரைநடை வாயிலால் அறிதல் பின்னர் மூதனூலைக் கற்ப தற்குத் துணையாகு மென்னும் துணிவுடன் இவ் வுரைநடை நூலைத் தற்போது வெளியிடலானேன். மாணவர் இளம்பிராயத்தில் அறிய வேண்டுவனவற்றை விரித்தும், வேண்டாதனவற்றை விலக்கியும், இயன்றவரை மூதனூலின் அழகு குறையாமலும் கதையை விடாமலும் எழுதியுள்ளேன். மாணவர்கள் சிரமமின்றித் தாமே கற்கப் பிரசுரிக்கப்படும் உப பாட புத்தகங்கள் எழுதப்பட வேண்டிய முறைமைப்படி தெள்ளிய நடையில் இது வரையப் பெற்றுள்ளது. ஆதலின் தமிழபிமானிகள் இச்சிறு நூலை அபிமானித்து மேன்மேலும் இதுபோன்ற மற்றும் சில நூல்களை வெளியிடுவதற்குப் போதிய ஆதரவளிப்பார்களென்று நம்புகிறேன்.

புரசைப்பாக்கம்,
13-4-1929.

வ. கி. தி.

ஸ்ரீ

சூளாமணி

1. குமார காலச் சருக்கம்

புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்தின் வட பாகத்தில் **சுரமை** என்னும் நாடு ஒன்றிருந்தது. அது மாத மும்மாரி பெய்து, நீர்வளம், நிலவளம், குடி வளம் முதலிய பல வளங்களும் குறைவின்றி நிறைந்து எந்நாளும் செழித்திருக்கும். அந்நாட்டுக்குச் சிரோரத்தினம் போன்று சகல செல்வங்களையும் பெற்றுத் தலைநகராய் விளங்கியது **போதனமா நகரம்.** அது இந்திரனது அமராவதி நகரத்தையும் இழிவுபடுத்தும் பேரழகு வாய்ந்தது. அந்நகரைச் சுற்றிலும் வானையளாவிய மதில்கள் சூழ்ந்திருக்கும். அம்மதில்களைச் சூழ்ந்து, வெளியில் பகைவர் உட்புகாவண்ணம் மிக்க ஆழமுடையதாய், எப்போதும் நீர் வற்றாததாய், முதலை, சுறா முதலிய கொடிய பிராணிகளுக் கிருப்பிடமானதாய், தாமரை முதலிய நீர்க்கொடிகள் படர்ந்து மலரப்பெற்றதாய் ஓர் அகழி யுண்டு. இவ்வகழியும், கோட்டை மதிலும் வலிய அரண்களா யிருந்து அந்நகரைப் பாதுகாத்து வந்தன. அவ்வூரில் பல பண்டங்களும் நிறைந்துள்ள பண்டசாலைகளும், ஆவண வீதிகளும், அந்தணர் முதலிய நான்கு வருணத்தார் வசித்து வரும் பல தெருக்களும், மாடமாளிகைகளுடன் எங்கும் நிறைந்திருந்தன. இடையிடையே பல தருமசாலைகளும்,

பாடசாலைகளும், நாடகமேடைகளும் காணப்படும். ஆங்காங்குக் கோபுரங்களோடு கூடிய கோவில்களும், தீர்த்த வாவிகளும், நந்தவனங்களும் விளங்கும். இவைகளால் அந் நகரவாசிகள் கல்விச் செல்வத்திலும் பொருட் செல்வத்திலும் மிகுந்து, தெய்வ பக்தியிற் சிறந்து, நல்லொழுக்கமும் தரும சிந்தையும் நிறைந்து இனிது வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு சகல செல்வங்களுக்கும் உறைவிடமாயிருக்கும் அப் போதனமா நகரைப் பயாபதி என்னு மரசன் ஆண்டுவந்தான். அவன் மன்னுயிரைத் தன்னுயிர்போற் காக்குந் தயாநிதி. அவன் கல்வி கேள்விக் கடலின் கரை கண்டு கற்றோர் மதிப்பைப்பெற்ற கல்வியாளன். விற்போரிலும், மற்போரிலும், மற்றைப்போரிலும் மிக்க சாமர்த்தியம் வாய்ந்து, பகையரசர் நடுங்கும்படி ஆண் சிங்கம் போன்று அஞ்சா நெஞ்சம் படைத்த அதிசூரன். இத் தன்மை வாய்ந்த பயாபதி அரசன் காட்சிக்கெளியனுயிருந்து, தனது குடிகளின் முறையீடுகளைக் கேட்டு, துலாக் கோலை நிகர்த்து நீதிசெலுத்தி வந்தான். மேலும் அவனது நாட்டில் தன்னாலும், தனது பரிசனத்தாலும், பகைவர்களாலும், கள்வர்களாலும், கொடிய மிருகங்களாலும் நேருகின்ற ஐவகைப் பயங்களும் ஒரு சிறிதும் உண்டாவதில்லை. ஆகையால் நிறை மனத்தோடுங் கூடி வாழ்கின்ற அவனது குடிகள் தாமாகவே ஆறிலொரு கடமை கொடுத்து வருவதை யன்றி, அரசன் அவர்களிடத்தில் வேறொரு வரியை வருத்தி வாங்குவதில்லை.

மனுநீதி தவறாமல் செங்கோல் செலுத்தி வந்த பயாபதியரசன் பிறநாட்டுப் பகையரசரை வென்று அடிமைப் படுத்துவதிலும், தனது நாட்டுக் குடிகளைக் காத்துவருவதிலும் தன் மனம் முழுவதும் செலுத்தியிருந்தான். அத

ஞல் தனக்கு மணப்பருவம் வாய்ந்தும் அதைக் கவனியாது மறந்திருந்தான். இதை யறிந்த அரசகுல முதல்வர்களும், அமைச்சர்களும் ஒருங்கு கூடி, அரச சமுகத்தை யணுகி இவ்விஷயத்தைக் குறிப்பாக உணர்த்தினர். அரசன் கேட்டுப் புன்னகை புரிந்து மணம் புரியச் சம்மதித்தான். உடனே அமைச்சர்கள் குலம் குடி முதலியவைகளில் சிறிதும் தாழ்வின்றித் தங்களரசனுக்குச் சமமான குலத்துதித்த கன்னிகைகளைத் தேடும்பொருட்டுத் தூதர்களை யனுப்பினர். அவர்கள் பல நாடுகளுஞ் சென்று ஆங்காங்குத் தேடி, இராஜகுலத்திற் பிறந்து கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து, திருமகள்போலும் அழகு வாய்ந்துள்ள இரண்டு கன்னிகைகளைத் தெரிந்து வந்தனர். அரசன் அக்கன்னியரை மணம்புரிய விரும்பியதை யுணர்ந்து, குலவழக்கத்தின்படி அரசன் சுற்றத்தாரிற் பெரியோர் சிலர் ஆங்குச் சென்று, அக்கன்னியரின் பெற்ருேரைக் கண்டு மணம்பேசி, ஒரு நன்ஞளையுங் குறித்து வந்தனர். பின்னர் பயாபதி யரசன் நால்வகைச் சேனை சூழ, மந்திரி பிரதானியர் சுற்றத்தார் பரிவாரங்களுடன் அவ்வூர்க்குச் சென்று, **மிகாபதி தேவி**யை முதல் மனைவியாகவும், அவளின் தங்கை **சசிதேவி**யை இரண்டாம் மனைவியாகவும் மணம்புரிந்தான். சிலநாள் அங்குத் தங்கியிருந்த பின் அங்குள்ளாரிடம் விடை கொண்டு தன்னூரை யடைந்தான்.

வசந்த காலத்தில் நந்தவனத்தில் அசோகந் துளிரும், மாந்துளிரும், மற்ற மரங்களின் துளிர்களைக் காட்டிலும் அழகுபெறத் தோன்றுவது போல அரசனது அரண்மனையில் இவ்விரு தேவியரும் சிறப்புடன் விளங்கினர். அரசன் உயிரும், மணமகளிருவரும் உடலுமாகி, பூவும் மணமும்போல் பிரியாது ஒருமனப்பட்டிருந்தனர். அக்காவ

லன் கற்பக தருவாகவும், தேவியர் அத்தருவைப் பற்றிப் படரும் காமவல்லிக் கொடிகளாகவுமிருந்து, இல்லற தருமத்தைக் கைக்கொண்டு இன்புற்றுச் செவ்வனே வாழ்ந்திருந்தனர்.

இவ்வாறு வாழ்ந்திருக்கையில் பயாபதி யரசன் முன் செய்த புண்ணியத்தின் பயனாக அவனது மனைவியர் கர்ப்பந்தரித்து, உரிய நாளில் வானையாளும் தேவர்களின் அம்சமாக இரண்டு புதல்வர்களைப் பெற்றனர். அவர்களில் மிகாபதி பெற்ற புதல்வன் சந்திரன்போன்ற வெண்ணிறமுடையவனாய்ப் பலபத்திர சொரூபனாயும், இளையவளாகிய சசிதேவி பெற்ற புத்திரன் காயா மலர்போன்ற நீல நிறமுடையவனாய்க் கிருஷ்ண சொரூபனாயும் விளங்கினார்கள். இவர்கள் பிறந்தபொழுது தேவர்கள் மிக்க ஆரவாரத்துடன் துந்துபி முழக்கிப் பூமாரி பொழிந்து வாழ்த்தினர். பூமண்டலத்துள்ளார் யாவரும் தம்மை யறியாமலே சந்தோஷமும் உற்சாகமு மடைந்தனர். ஒரு சுப முகூர்த்தத்தில் பெரியோர்கள் அக்குழந்தைகளுக்கு வேத விதிப்படி மங்கலச் சடங்குகளியற்றி, அவர்களில் மூத்தவனுக்கு **விஜயன்** என்றும் இளையவனுக்குத் **திவிட்டன்** என்றும் நாமகரணம் சூட்டினர். அப்புதல்வர்கள் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து வந்து, ஐந்தாம் வயதில் வித்யாரம்பம் செய்யப்பெற்றனர். அவர்கள் குருகுல வாசம் செய்து கற்கவேண்டிய நூல்களை யெல்லாம் ஐயந் திரிபறக் கற்றுணர்ந்தனர். பிறகு அவர்கள் அரசர்க்கின்றியமையாதனவாகிய யானையேற்றம், குதிரை யேற்றம், மற்போர், வாள், வில், வேல் முதலிய மற்றப் படைக்கலப்போரும் பயின்று, தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றித் தேசமெங்கும் புகழ் பெற்றிருந்தனர்.

ஒருநாள் வழக்கம்போலப் பயாபதி வேந்தன் மங்கல வாத்தியங்கள் முழங்கத் தனது பரிவாரத்தார் சூழ்ந்துவர, புதல்வர்களுடன் கொலுமண்டபத்தை யடைந்து அங்குச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். அப்போது அங்கு அமைச்சர், சேனைத்தலைவர் முதலானவர்களும், திறை கொணர்ந்த சிற்றரசர்களும் அரசனை வணங்கித் தத்தமக் குரிய ஆசனங்களி லிருந்தனர். இளவரசர்களாகிய விஜய திவிட்ட குமாரர்களிருவரும் அரசனுக் கிருபுறமும் அரு கில் வீற்றிருந்தனர். அரசன் சிறிது நேரம் அமைச்சர்க ளுடனிருந்து இராஜ்ய விசாரணைகளைச் செய்த பின்னர், வாயிற் காவலனை யழைத்து, "ஏழுநாழிகை யளவும் நமது கொலுவை நாடி யாவர் வரினும் அவர்களைத் தடையின்றி யுள்ளே வர விடுவாயாக" எனக் கட்டளையிட்டனுப்பினான். அதன் பிறகு பாவலர்கள் சொற்சுவை பொருட்சுவை தோன்ற இசைக்கும் கவிகளையும், பாடகர்கள் இன்னிசை யுடன் பாடும் மதுர கீதங்களையும் கேட்டுக் களித்திருந் தான்.

அப்போது ஜோதிட சாஸ்திரம் முழுவதும் நன்கு கற்றவனும், திரிகால சம்பவங்களை உணர வல்லவனுமாகிய ஒரு நிமித்திகன் அங்கு வந்து காவலாளரை நோக்கி, "இப் போது அரசனைக் காணச் சமயம் உண்டோ?" என வினு வினன். துவாரபாலகர்களும் அரசனிட்ட ஆணையை நினைந்து, அவனைத் தடை செய்யாது உள்ளே புக விடுத் தனர். கொலுமண்டபத்தை யடைந்து, நிமித்திகன் அர சன் எதிரிற்சென்று, "வேந்தே! உனது கொற்றம் நீடு வாழ்க" என வாழ்த்தி வணங்கி நின்றான். அரசன் அவனை வரவேற்று, கையசைத்து ஓர் ஆசனம் காட்ட அவன் அதில் வீற்றிருந்து, தான் கற்ற ஜோதிடத்தின்

திறமையையும் மேம்பாட்டையும் காட்டக் கருதிச் சமயம் பார்த்திருந்தான்.

சிறு பொழுது சென்றதும், அரசன் தன் முக நோக்கிய குறிப்பினை யுணர்ந்து, நிமித்திகன் எழுந்து நின்று, "வேந்தர் வேந்தே! நேற்றிரவு வைகறை யாமத்தில் எனது கனவில், மலைபோலும் பெரிய யானையொன்று விசும்பினின்றும் இறங்கி வந்து, தங்கள் இளைய புதல்வனாகிய திவிட்ட குமாரனுக்கு வெண் மலர்களால் தொடுத்த மாலையொன்றைச் சூட்டி, அவனைத் தன் பிடரியிலே தாங்கி, விண்ணுலகிற்கு எடுத்துப்போனதைக் கண்டேன். அதன் பயனையும் சொல்லுகின்றேன். கேட்டருளும். ஒரு வித்யாதர வேந்தன் தன் செல்வப் புதல்வியை இங்கழைத்து வந்து, தங்களிளைய குமாரனுக்கு மணம் செய்வித்துச் செல்லுவான். அது உண்மைப்படும் பொருட்டு இனி நிகழும் ஒரு சம்பவம் உரைக்கின்றேன். இன்று முதல் ஏழு நாட்கள் சென்ற பின், ஒரு விஞ்சயத் தூதன் திருமுகம் ஒன்று கொண்டுவந்து தங்களுடைய சிங்கார வனமாகிய புட்பமா காண்டத்தில் வந்திறங்குவான். இதை நீங்கள் யாவரும் காண்பீர்கள்" என்று கூறினான்.

இவ்வாறு நிமித்திகன் கூறியதைக் கேட்டு, அச்சபையிலுள்ளார் அனைவரும் மிக்க அதிசயமடைந்தனர். அமைச்சர்கள் அரசனை நோக்கி, "வேந்தர் பெருமானே! நிமித்திகன் கூறிய இத்தகைய மேம்பாடடையத் தங்கள் இளைய குமாரன் உரியவனே யாவான். இதில் சிறிதும் தவறில்லை" எனப் புகழ்ந்து பேசினர். பின்னர் அரசன் அந் நிமித்திகனுக்குப் பலவித சன்மானங்களைச் செய்து அனுப்பினன். சிறிது நேரம் சபையும் பேச்சரவமின்றி அமைதியாயிருந்தது. பின்னர் பொழுதைக் குறிப்பிடும் நாழிகை முரசு அறைவது கேட்டு, பயாபதி யரசன் சபையினின்றும்

எழுந்து, அனைவர்க்கும் விடையளித்து அமைச்சர் சூழ அரண்மனை சென்றான்.

அரசன் அங்கு அமைச்சர்களுடன் ஒரு தனியிடத்தி லிருந்து அவர்களை நோக்கி, "அமாத்தியர்காள்! இன்று நிமித்திகனுரைத்தது சம்பவமோ அல்லது அசம்பவமோ? யோசித்துச் சொல்லுங்கள்" என வினவினன். அதற்கு மந்திரி முதல்வன், "வேந்தே! நிமித்திகன் கூறியது முற்றும் சம்பவமேயாகும். தங்களிளைய குமாரன் இப்பூமண்டல முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளுவான் என்று அக்குழந்தை பிறந்தபொழுதே ஜோதிடர்கள் கணித்துக் கூறியிருக்கின்றனர். அதுவுமன்றி அக்குமாரனது கரத்தில் சங்க ரேகை, சக்கர ரேகைகளும் இருக்கின்றன. ஆதலால் அவன் சக்கரத்தைக் கையில் கொள்வான் என்பதற்குச் சந்தேகமில்லை. மேலும், அந்நிமித்திகன் திரிகாலமும் உணர்த்தும் சாஸ்திர ஞானத்தாற் சொன்னானேயன்றி, உங்களது முகோல்லாசத்தின் பொருட்டுத் தோத்திரம் செய்தானில்லை. இவைகள் உண்மையென்று நம்புவதற்குச் சமீபத்தில் நடக்கப்போகும் சம்பவம் ஒன்றையும் கூறியுள்ளான். ஆகையால் அதிற் சந்தேகப்படக் காரணம் ஒன்றுமில்லை. அதன்பொருட்டு நாம் இப்போது நிமித்திகன் கூறியுள்ள புட்பமா காண்டப் பொழிலையும், அதிலுள்ள பளிங்குக்கல் மண்டபத்தையும் அலங்கரித்து, அவன் குறித்திட்ட நாட்கள் வரையும் அங்குத் துருமகாந்தனைக் காவலாக வைக்கவேண்டும்" எனக் கூறினான். அரசனும் அந்த யோசனையை ஏற்றுக்கொண்டு, துருமகாந்தனைச் சிங்காரவனத்திற் காவலிருக்கக் கட்டளையிட்டுப் பின் தன் அந்தப்புரம் சேர்ந்தான். துருமகாந்தனும் அங்குப் பூங்காவிற் காவல் செய்திருந்தான்.

2. இரத நூபுரச் சருக்கம்

இந் நிலவுலகத்தைப் போலவே மிக்க இடமகன்றதாய், தேவ ஜாதியர் பதினெண்மரில் ஒருவராகிய விஞ்சையர்கள் வசிக்கும் பர்வதம் ஒன்றுண்டு. அதை விஞ்சையர் உலகம் எனக் கூறுவர். மேகங்கள் வந்து தங்கியிருக்கும்படி வானளாவி உயர்ந்திருக்கும் அம்மலையின் தென் பாகத்தில் **இரத நூபுரச் சக்கரவாளம்** என்னும் பெயரையுடைய அழகிய நகரம் ஒன்றுண்டு. எவ்வளவும் ஒரு சிறிதும் குறையாத அப்பொன்னகரை **சுவலனசடி** என்னும் வித்யாதர வேந்தன் ஆண்டு வந்தான். அவன் அரசாக்கிருக்கவேண்டிய ஆண்மை, தயை, கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலிய சகலநற்குணங்களும் வாய்ந்தவன். ஆகையால் அவன் மூவுலகத்தாரும் கொண்டாடும் பெருமை பெற்றிருந்தான். அவ்வேந்தனுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களே உடலாகவும், கற்பே உயிராகவும் அமைந்ததென்னும்படி பிறந்த உத்தம குணசாலியாகிய **வாயுவேகை** என்பாள் மனைவியாயினள். இவ்விருவருக்கும் நெடுநாள் புத்திரப்பேறின்றி, பின்னர் தெய்வ வழிபாட்டினால் முதலில் ஒரு புத்திரனும், பின்னர் சில காலஞ்சென்று ஒரு புத்திரியும் பிறந்தனர். அவர்களில் புதல்வனுக்கு **அருக்ககீர்த்தி** யென்றும், புத்திரிக்கு **சுயம்பிரபை** என்றும் பெயர்களிட்டு, சீரும் சிறப்புமாய் வளர்த்து வந்தனர். இச்சுயம்பிரபை சுவலனசடி அரசனுக்கு மகளாகத் தோன்றிய பின்பே அவனுக்குப் பலவித செல்வப் பெருக்கும், வேற்றரசர் வந்து பணியும் பெருமையும் உண்டாயின. அழகில் திருமகளும் கல்வியில் சரஸ்வதியும்போன்று, உலகிலுள்ள பெண்களுக்கெல்லாம்

தலைவியாய் வளர்ந்து வந்து பேதைப் பருவம் நீங்கி, விவாகத்துக்குரிய பாலப் பருவமடைந்தாள்.

இப்படி யிருக்கும்போது வசந்தகாலம் தோன்றியது. அக்கால வழக்கத்தின்படி சுயம்பிரபையின் செவிலித்தாயாகிய **வசந்தமாதிலகை** என்பவள் அரசனை யணுகிப் பணிந்து, "சுவாமி! வசந்த காலம் வந்துற்றது. இக்காலத்தில் சில நாள் நமது உத்தியான வனத்தில் தங்கி, அதன் அழகைத் தங்களுடனிருந்து அநுபவிக்க விரும்புவதாக இராணியார் தங்களிடம் விண்ணப்பம் செய்துகொண்டார்" என்று பணிவாய்ச் சொன்னாள். அதைக் கேட்டு அரசன், "அவ்வாறே அரசியின் விருப்பத்தை நிறைவேற்றக் கடவோம்" எனச் சொல்லி, தாங்கள் எல்லோரும் அங்குச் சென்று தங்கி யிருப்பதற்கேற்ற வசதிகளைச் செய்யும்படி பணியாளர்க்குக் கட்டளையிட்டு உபவனத்தை அலங்கரிக்கச் செய்தனன். பின்னர் ஒரு நாள் சடி அரசன் தன் மனைவி மக்கள் அவரவர்களுக்குரிய தோழியர் பரிவாரங்களுடன் யானைகள் மீதும், தேர்களின் மீதும், சிவிகைகள் மீதும் இவர்ந்து தன்னைச் சூழ்ந்துவர, நகரை நீங்கி **மனோவனமென்னும்** தனது சிங்கார வனத்தை யடைந்தான். அங்குத் தங்களது இருக்கையிற் சிற்றுண்டி முதலியன அருந்தி, சற்று இளைப்பாறிய பின்னர் அவ் வனத்தின் அழகைப் பார்க்கச் சென்றனர். வனத்தைச் சுற்றிப் பார்த்து வந்த அவர்கள் வசந்தத்திற்குப் பெருமையைத் தருகின்ற அசோகு, மா இவைகளின் இந்திர நீலப்பட்டைப்போற் பிரகாசிக்கின்ற இளந் தளிர்களின் அழகையும், மல்லிகை, முல்லை, குருக்கத்தி முதலிய கொடிகள் தங்களைக் குறுநகையுடன் வரவேற்பதுபோல மலர்ந்து நிற்பதையும், வானரங்களும் ஏறியறியாத வானளாவிய மரங்களிலிருந்து கோகிலம், கிளி, நாகணவாய் முதலிய

பறவைகள் இனிமையாகப் பாடுவதையும், நீர் நிறைந்த தடாகங்களில் தாமரை முதலிய நீர்க்கொடிகள் படர்ந்து மலர்ந்து, அவைகளில் அன்னம் முதலிய பறவைகள் தங்கி விளையாடுவதையும் கண்டு, ஒருவரோடொருவர் அங்குள்ள சிறப்புக்களைப் பலவிதமாக வர்ணித்துக்கொண்டு, சந் தோஷமாகப் பொழுது போக்கினர். பின்னர் அவர்கள் நீர்விளையாடல் செய்து, தூய வஸ்திரங்களை யுடுத்து, மலர்ப் பறித்தல், மாலை தொடுத்தல் முதலிய பொழில் விளையாடலையும் செய்து, மிக்க களிப்புடையவர்களாய்த் தங்களுக்குரிய இடங்களைச் சேர்ந்தனர்.

உடனே அரசன் தன் தேவியும், மக்களும் மற்றப் பரிவாரங்களும் தன்னைச் சூழ்ந்துவர, அங்குள்ள அருகக் கடவுள் சினகரத்துக்கு பூப்பலியுடன் சென்று, கோயிலை வலம் வந்து வாயிலில் சென்று நின்றான். உடனே சினகரத் தின் கதவு திறக்கப்பட்டது. உள்ளே எழுந்தருளியிருக் கும் அருகமூர்த்தி பேரொளி வடிவமாய்க் காட்சியளித் தார். அரசன் அத்தெய்வ வடிவத்தைத் தரிசித்து, மெய் யன்பினால் உடல் புளகித்து, கண்களில் நீர் சோரக் கர மிரண்டும் சிரமேற் குவித்து, அக்கடவுளின் கீர்த்தியைச் சொல்லித் துதித்தான். தோத்திரம் முடிந்ததும், அர சன் அப்பெருமானின் திருவடிகளிலிட்ட மலர்களைத் தனது சிரசிற் சூடிக்கொண்டு, கோவிலைவிட்டு வாயிலில் வந்தான்.

அப்போது அருக சாரணர்களாகிய **சகதபிநந்தனர்** என் னும் இரு சாரணர்கள் விசும்பினின்றும் இறங்கி வந்து, சின கரத்தைப் பிரதக்ஷணம் செய்து, வாயிலில் நின்றுகொண்டு அருகக் கடவுளைக் கேட்பார் மனமுருகும்படி இனிய குர லெடுத்துப் பாடித் துதித்தனர். பின்னர் துதி முடிந்த

தும் பெருமானை வலங்கொண்டு, அங்கு அசோக விருக்ஷத்தினடியில் அமைத்திருக்கும் ஒரு சிலாதலத்தில் அமர்ந்திருந்தனர். அரசன் அங்கு வந்து அச்சாரணர்களின் பதும பாதங்களை வணங்கினான். அவர்களும் மிக்க அன்புடன் அரசனை ஆசீர்வதித்து ஆதனத்தி லிருக்க வேண்டிக்கொண்டனர். அரசனும் தன் சுற்றத்தாருடன் அங்கிருந்து அம் முனிவரில் முதல்வன் முகத்தினை நோக்கி, "அடியேனுக்கோர் விண்ணப்பமுளது" என்று கூறினன். அங்கெழுந்தருளிய சாரணர்கள் முக்காலமும் உணரும் முதியோராகையால் அரசன் கருத்தை யுணர்ந்து கொண்டு, அவர்களின் முன்னோன் அரசனை நோக்கி, "வேந்தே! நின்மனதில் பிறவித் துன்பத்திற் கேதுவாகிய தீவினைகளை யொழித்து முத்தி பெறுதற்கு வழியாகிய நல்லுபதேசங் கேட்க விரும்பினை" எனச் சொன்னான். அரசனும், "ஆம், அதுவே என் விண்ணப்பம்" எனக் கூறித் தலை வணங்கினன். அப்போது அச்சாரணர் வினையினது திறத்தையும் அவ்வினையின் வேறுபாடுகளையும் விளக்கிக் கூறி, அவ்வினையைப் போக்கும் வழி அருகனுடைய திருவடித் தியானமே யல்லாமல் வேறொன்றுமன்று எனப் போதித்தனர்.

இவ்வுபதேச மொழிகளைக் கேட்ட அரசனுள்ளத்தில் ஞான ஒளி விளங்கியது. அவனது சுற்றத்தாரும் அவ்வுபதேசத்தின் பயனாக அறிவுடையவர்க ளானார்கள். அப்போது அந்நற்போதனையை மிக்க கவனத்துடன் கேட்டுணர்ந்த அரச கன்னிகையாகிய சுயம்பிரபை பக்தி வெள்ளம் பெருக, அச்சாரணர் முன்னிலையில் சக்கிரவாள மென்னும் ஒரு விரதம் அனுஷ்டிக்கத் தீர்மானித்துக் கொண்டனள். பிறகு அச்சாரணர்கள் அரசனுக்கும் மற்றையோர்க்

கும் ஆசி வழங்கி, தம்வழிச் சென்றனர். வேந்தனும் அவர்களை வணங்கி, சினகரத்தை வலம் வந்து தன்னிருக்கையடைந்தான். இவ்வாறு சில நாள் அவ்வனத்தில் தங்கியிருந்து பின்னர் யாவரும் இரதநூபுரத்தை யடைந்தனர்.

ஆங்குக் கன்னிமாடத்தில் சுயம்பிரபை தான் எடுத்த நோன்பை நோற்று முடித்து, மூவுலகினும் தனக்கிணையில்லை யென்று சொல்லும்படி பெருஞ் சிறப்படைந்தாள். அருகக்கடவுள்மீது தான் கொண்ட பக்தி மேம்பாட்டினுல் சுயம்பிரபை என்பாள் தான் வசித்துவரும் பர்வத முகட்டில் அருகக் கடவுளுக்கோர் கோயில் அமைத்து, அங்குச் சென்று அப்பெருமானை வழிபட்டுத் தினமும் துதித்து வருபவளாயினள். வழக்கம்போலொருநாள் சுயம்பிரபை அருகக் கடவுளின் ஆலயம் சென்று, குழலினு மினிய குரலினுல் கடவுளைத் துதித்து, அவரடிக் கீழ்ப்பட்ட பூப்பலியிற் சிலவற்றைத் தன் சிரத்திற்சூடி, மற்றதைத் தன் தந்தைக்களித்து அவனை வணங்கினள். வணங்கிய மகளை வாரியெடுத்து முத்தமிட்டு மகிழ்ந்து, சில வார்த்தைகளைச் சொல்வானுயினன். "என் செல்வமே! வனத்தில் பல மரங்கள் துளிர்களை விடினும், வசந்த காலத்திற் கழகைச் செய்து பெருமை பெறுவது மாந்தளிரன்றே? அதுபோல உலகத்தில் புதல்விகளாகப் பலர் பிறக்கினும் உன்னைப் போன்று பெருமை யடைந்தவர் யாருளர்? கங்கை நீர் பாய்ந்து கடலும் புண்ணிய தீர்த்தமானது போல, நீ தோன்றிய பின்பே எங்கள் குடியும் மேன்மையுற்றது. வானகத்து இளம்பிறை வளர வளர வையகத்தில் இருளொழிந்து ஒளி மிகுதல் போல, நீ எங்கள் இல்லத்திற் பிறந்து வளர வளர, பல செல்வங்களு மோங்கிப் பெருகி, பிற வேந்தர் வந்து பணியும் பெருமை வாய்ந்துள்ளேன்" எனப் பல இனிய வார்த்தைகளைப் புகன்று, அவளை

மகிழ்வித்து, அன்னை மாளிகையிற் சென்று அமுதுண்ணும்படி யனுப்பினன்.

சயம்பிரபை விடைகொண்டு அன்னமும் பின்னிடும்படி சென்ற பின்னர், சடியரசன் தன் புதல்வியின் பேரழகையும், நற்குண நற் செய்கைகளையும், அவள் மணப் பருவம் வாய்ந்திருத்தலையும் மனத்தில் நினைந்து, இக் கன்னிகைக்கேற்ற கணவன் யாவனோ எனச் சிந்தித்தான். அதன் பொருட்டு அவ்விஞ்சையர் உலகிலுள்ள அரச குமாரர்களை ஒவ்வொருவராய் நினைவிற் கொண்டுவந்து, அவரது ஏற்றத் தாழ்வினை ஆராயத் தொடங்கினன். அவர்களில் ஒருவனாயினும் தன் மகளுக்குப் பொருத்தமுடையனாய்த் தோன்றினனில்லை. பெறுதற்கரிய மாணிக்க மணியை மாற்றுயர்ந்த செம்பொன்னிற் பதியாமல் ஈயத்திலே பதித்திடினும் அம்மணி வேண்டாமெனச் சொல்லுமோ? ஆகையால் பதிப்போர் அதன் அருமை பெருமைகளை யுணர்ந்து தக்க விடத்தி லிழைத்தால் அம்மணி அழகுடைத்தாகும். அது போலப் புதல்வியைப் பெற்ற தாய் தந்தையர் அக் கன்னிகைக்கு ஏற்ற கணவனைத் தேடாது ஒரு குரூபியை மணமகனாக்கிடினும் அப்பெண் தனது விதியை நொந்து கொள்வதல்லாது பிறரறிய அவனை மணக்க மறுப்பளோ? ஆகையால் பெற்றோர்கள் தம் புதல்வியின் ரூப லாவண்யத்திற் கேற்றபடி கல்வியும் அழகும் வாய்ந்த ஒரு காதலனைத் தேடி மணம் முடித்தால் அத் தம்பதிகள் ஒருமனப்பட்டு, அவர்களின் இல்லறம் நல்லறமாகும். இல்லையேல், அவரது இல்வாழ்க்கை துன்பவாழ்க்கை யாகிவிடும். இது உலகானுபவம். மணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிராகையால் ஆலோசனையின்றித் திடீரென விவாகம் செய்விக்கலாகாது. இவ்வாறு சடியரசன் நீள நினைந்தும் தனக்கொன்றும் புலப்படாமையால்,

'அந்தண ரொழுக்கமு மரசர் வாழ்க்கையும்
மந்திர மில்லையேல் மலரு மாண்பில'

என்ற நீதியின்படி இவ் விஷயத்தை மந்திரிகளோடு ஆலோசிக்க வேண்டுமெனத் தீர்மானித்தான். அதன் பொருட்டு ஒரு ஏவலாளனை யனுப்பி, அமைச்சர்களை யழைத்து வரக் கட்டளையிட்டு, அவர்களின் வரவை எதிர்பார்த்திருந்தனன்.

---

3. மந்தரசாலைச் சருக்கம்.

ஏவலாளர்கள் அதி விரைவில் அமைச்சரிடம் சென்று வேந்தனது கட்டளையைத் தெரிவித்தனர். உடனே யோசனைத் தலைவர்கள் ஒன்றுகூடிச் சிறிதும் காலம் தாழ்த்தாது அரசனை வந்து பணிந்தனர். வேந்தன் அவர்களை வரவேற்று, உள்ளிருந்து ஒலி வெளியிற் புறப்படாததும், உள்ளே செல்ல யாருக்கும் அரியதும், பொன் வெள்ளித் தகட்டினால் விளிம்பிட்டு விளங்கும் மேடைகளையுடையது மாகிய ஆலோசனை மண்டபத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கு அரசன் தனது ஆசனத்தி லமர்ந்து அவர்களையும் உரிய ஆசனங்களிலிருக்கச் செய்து, பின்னர் அமைச்சர்களின் பெருமைகளைச் சிறிது கூறத்தொடங்கினான். "அறிவிற்சிறந்த பெரியோர்களே! அரசர்கள் நெடிய கடல் சூழ்ந்த பெரிய நிலத்தின் காவலரா யிருப்பினும் மந்திரிகளால் எடுத்துரைக்கப்பட்டா லன்றி, நுட்பமாகிய நூலறிவினரல்லர். அவர்கள் எத்துணை வலியரா யிருப்பினும், மேல் விளையும் பழி பாவங்களை விலக்கிக் காப்பவர் நூல்களை நன்குணர்ந்த பெரியோர்க ளல்லரோ! ஒளி வீசுகின்ற செம்பொன்னில் நவமணிக ளிழைத்துச் செய்த கிரீடம் தரித்து, வெண் கொற்றக்குடை நிழலில் வேந்தர் வீற்

றிருப்பினும், அவர்களுக்கு மனமும், கண்ணும், வாழ்க்கையும், வலிமையும், புகழும், கோலுமாவர் உங்களைப்போன்ற அரசியலில் அநுபவம் பெற்ற அமைச்சர்களே யன்றி மற்றோர் யாருமல்லர். இராஜ்ய பாரமாகிய சகடத்திற் பொருத்திய நுகத்தை ஒருபக்கம் பற்றி அரசன் தனியாக நின்றிழுப்பானாயின் அது சிறிதும் நகராது. ஒரு புறம் அரசனும் மற்றோர் புறம் அமைச்சர்களும் தாங்கி ஈர்ப்பாராயின் அச்சகடம் வெகு சுலபமாக உருண்டு செல்லும். ஆதலால் அரசன் எப்போதும் மந்திரிகளுடன் ஆலோசித்தே ஒரு காரியத்தைச் செய்யக் கடவன். இராஜ தந்திரங்களில் தெளிந்த அறிவுடைய அமைச்சர்கள் ஆராய்ந்து ஒரு விஷயத்தைச் சொல்வாராயின் அதை மனத்திற் கொண்டு சிந்தித்துச் செய்யும் அமைதியுடையவனே அரசனாவான். அவ்வாறே முன்னும் பின்னும் ஆலோசித்துச் செய்யத்தக்க விஷயங்களைக் கூறி, அவைகளை முற்றுவிக்கும் ஆற்றலுடையவனே அமைச்சனாவான். வேந்தன் உலகம் காக்கும் வாயில் தோள்வலியும் சூழ்ச்சியும் என இருவகைத்தாம். அவற்றில் தோள்வலி அரசர்க்கு மிக்க சிறப்பே யாயினும், சூழ்ச்சியே மிக்க குணம் பயப்பதாம். ஆகையால் ஆற்றல் மிக்க அமைச்சர்களை வேந்தன் ஒருவன் பெறுவானானால் அவனிவ்வுலகில் அடையக் கூடாத தொன்று மில்லை. உத்தமமான மந்திரிகளின் உபதேச மொழிகளுக்குச் செவிகொடாது, தனக்குத் தோன்றியவாறு அரசுபுரிகின்ற மன்னவன் வாழ்க்கையானது மதவெறி கொண்டு பாகனின்றித் திரியும் வலிய களிற்றின் முதுகின் மீதிருக்கும் மூடனுடைய நிலைமைபோலாகும். ஒரு பளிங்கானது மிக்க பளபளப்புட னிருப்பினும் அதற்கு நிற மின்மையால் எதிரிலிருக்கும் வஸ்துவின் நிறத்தையே தானடைந்து விளங்குவதுபோல, அரசன்

எவ்வளவு கீர்த்திமானுயினும் தன்னைச் சூழ்ந்த அறிவிற் சிறந்த அமைச்சர்களின் குணமே தனக்குக் குணமாகக் கொண்டு மேம்பாடடைகின்றான். சுருங்கக் கூறின், நீங்களே என்னை இறைவனுக்கி, இரவும் பகலும் எனது ஆணை எங்கும் செல்லும்படி செய்வதனு லன்றோ யான் இத்துணைச் சிறப்படைந்துள்ளேன். இது நிற்க. உங்களுடன் ஆலோசிக்க வேண்டிய முக்கிய விஷயமொன் றுளது. பர்வத முகட்டிலிட்ட தீபம் போன்று நமது குடியை விளக்க வந்த நம் புதல்வி சுயம்பிரபையின் குணத்திற்கும் அழகிற்கும் ஏற்ற மணமகன் யாண்டுளன் என்பதை யோசித்துக் கூறுங்கள்" எனக் கூறினன்.

இறைவ னிவ்வாறு மொழியக் கேட்ட அமைச்சர்கள் வேந்தனைப் பணிந்து, "அரசே! உமது கொற்றம் என்றும் விளங்குவதாக" என வாழ்த்திச் சில வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினர். அவர்களில் முதல்வனுகிய சுச்சுதன் என்னும் மந்திரி அரசனை நோக்கி, "வேந்தே! எங்கள் மீது கொண்ட அன்பின் பெருக்கினுல் இவ்வாறு எங்களை யுயர்த்திப் பேசினீர்களே யன்றி வேறொன்று மன்று. சூரிய காந்தக்கல் தீயை உமிழ்வதும், சந்திரகாந்தக்கல் குளிர்ந்த நீரைச் சொரிவதும் சூரிய சந்திரர்களின் சன்னிதியிலன்றித் தனித்தியலாது. அதைப்போன்று உங்களைச் சூழ்ந்திருக்கும் உறுதிச் சுற்றமாகிய நாங்களும் உங்கள் சமுகத்திலிருந்து எல்லாச் சிறப்பையும் பெறுதலன்றி, எங்களாலாவதொன்றுமில்லை. மத களிறுனது தனது உடலினுல் உராயச் சந்தன மரம் தன் மணம் மிகுந்து வீசுதல் போல அரசரும் தங்கீழமைந்த மந்திரி முதலியோர் செய்யும் பிழைகளைப் பொறுத்துத் தழுவி வாழ்தலால் அவ்வமைச்சர்களுக்குக் கீர்த்தி பெருகுகின்றது. உலகத்திற்குக்

கண்களாக அமைந்திருப்பன மூன்று. அவை அரசர், கல்வி, சூரியன் எனப்படும். இவைகளில் ஒன்றில்லையாயின் உலகம் இடர்ப்படும். அதனினும் அரசனாகிய கண் இல்லாவிடில் துன்பமாகிய இருள் உலகத்தினின்றும் ஒருபோது மொழியாது. கல்வியறிவோடு கூடிய வேந்தன் இரு கண்களை யுடையவனாகையால் அவன் சூரியனைக் காட்டிலும் மேம்பாடுடையவன். உலகிற் செயற்கரிய செய்கைகள் இரண்டு. அவைகள் அருந்தவம், அரசாட்சி என்பனவாம். இவையிரண்டும் உடலை வருத்தியும், உயிரையோம்பியும், மனத்தை யடக்கியும் செய்தல் வேண்டும். மேம்பட்ட இவ்விரண்டும் செய்யும் முறைகளில் பிறழுமானால் தனக்கும் மற்றோர்க்கும் பெருந் துயர் விளைக்கும். ஆகையால், இராஜ பாரத்தை வகிப்பது சாமான்யமன்று. இக்காரணங்கள் பற்றியே அரசனைத் தெய்வமெனக் கூறுகின்றனர் பெரியோர். இன்னும் இதை விவரிக்காமல் சுருங்கச் சொல்ல வேண்டுமாயின் வெற்றி வேந்தற்குரிய நற்குணங்கள் யாவும் ஒருங்குகூடி ஒருருவாய்த் தோன்றிய தங்கள் முன்னிலையில் யாம் அரசநீதி கூறப் புகுவது நூல்களைக் கற்றுக் கரைகண்ட பெரியோர்களின் முன், கல்லாக் கசடன் கூறுவது போலாகும்" என்று கூறினான்.

இவ்வாறு பல உபசார வார்த்தைகளைக் கூறிய பின்னர் சடியரசனை நோக்கி, "மன்ன! உமது அருமைப் புதல்விக்கேற்ற மணமகனை யான் அறிவேன். கூறுகின்றேன், கேட்டருளும். இவ்விஞ்சையர் நாட்டின் வடபாகத்தில் இரத்தினபல்லவம் என்னும் ஒரு நகரமுண்டு. அப்பொன்னகரை அரசு புரிந்திருந்த மயூரகண்டன் புதல்வன் அச்சுவக்கிரீவன். அவனே இப்போது அந்நாட்டினை யாண்டு வருகின்றான். அவ்வேந்தனே நின்மகளுக் குரியவனாவான்.

அவன் அறிவாலும், ஆற்றலாலும், ஆணையாலும் இவ்வுலகம் எல்லாவற்றையும் தன்னடிப்படுத்தி, மிக்க புகழுடன் வாழ்ந்து வருகின்றான். தன்னைச் சூழ்ந்த சுற்றத்தின் மாட்சியாலும், வெண்கொற்றக் குடைநிழலிலிருந்து ஆணை செலுத்தும் நேர்மையாலும், குலத்துப் பெருமையாலும், தான் கற்ற விஞ்சையின் வலிமையாலும், கருதியது முடிக்கும் மனவுறுதியாலும் விளங்குகின்ற அவ்வேந்தனோடொப்பாவார் வேறெவருமிலர். அவனுக்குப் பல நூல்களைக் கற்றுணர்ந்து, சகல உபாயங்களும் நன்கறிந்த **அரிமஞ்சன்** என்னும் மேதாவி அமைச்சனாக அமைந்துள்ளான். அரச தந்திரங்களில் அவனை வெல்லுபவர் இவ்வுலகில் எவருமிலர். மேலும், திரிகாலமு முணர்ந்து சொல்லும் கணிதவல்லானாகிய **சதபிந்து** நிமித்திகனும் அவன் வசமிருக்கிறான். ஆகையால், வேற்றரசர் பணிந்து நிற்கப் பெருவேந்தாய் விளங்குகின்றான். நமது சுயம்பிரபை தங்கட்குப் புத்திரியாகப் பிறந்த பின்னரே அவன் நம்மிடத்துத் திறைகொள்ளாதிருக்கின்றனன். இதைத் தாங்களு மறிவீர்கள். ஆகையால், அளவற்ற பெருமையினையுடைய அச்சுவக்கிரீவனுக்கே நமது கன்னிகையை மணமுடித்தல் உத்தமமென்று நான் உறுதியாகக் கூறுகின்றேன். மேலும் அவன் பொருட்டு மற்றைய விஞ்சைய வேந்தர்களும் நம்மைப் பணிந்திடுவர். இச்சம்பந்தம் தங்கட்கு அங்கீகாரமாயிருப்பின் செய்வது நலம்" என்றான்.

இவைகளைக் கேட்ட மற்றோர் மந்திரியாகிய **பவச்சுதன்** என்பான் எழுந்து, அரசனை நோக்கி, "வேந்தே! நின் கொற்றம் வாழ்க. சகல கல்வி கேள்விகளை யுடையவனும், வரும் பொருள் உரைக்கும் மதிநுட்பமும், சொல்வன்மையுமுள்ள **சுச்சுத** முதல்வன் கூறியது முற்றும் பொருத்த

முடையதே. ஆயினும் அவ்வச்சுவக்கிரீவனது திறத்தை யானும் நன்கறிவேன். அவன் மீதுள்ள குற்றமும் யானறிவேன். அதைக் குற்றம் அன்றென்று யார் சொல்லினும் நான்கேளேன். அக்குற்றமாவது அவ்வரசன் பல நூறாண்டு வாழ்ந்து இப்போது அடைந்துள்ள முதுமைப் பருவமே யாகும். மேலும் அவனுக்குக் **கனகசித்திரை** என்பாள் பட்ட மகிஷியா யிருப்பதுமன்றி, அவன் பெற்ற அனேக மக்களில் **இரத்தின கண்டன்** என்பவன் இளவரசுப்பட்ட மெய்தி, யாவரும் மதிக்க வளர்ந்து வருகின்றான். தங்கள் புதல்வியாகிய சுயம்பிரபை பிறந்த நாளிற்குரிய கோள்களை யாராய்ந்து, எழுதிய ஜாதக வோலையில் இக்கன்னிகை ஒரு வேந்தன் மகனை மணந்து, அவனுக்குப் பட்டத்தரசியாய் விளங்குவள் என்றும், இவள் வயிற்றுதிக்கும் புதல்வன் உலகெலாம் ஏக சக்கராதிபத்யம் செலுத்துவானென்றும் குறிக்கப்பட்டுள்ளது. ஆகையால் அச்சுவகண்டன் சுயம் பிரபைக்கு ஒருக்காலும் மணாளனுகான்; இது உண்மை" எனக் கூறினான்.

சடியரசன் இவ்வுண்மையை யறிந்து, பின்னும் பவச்சுதனையே நோக்கி, "அச்சுவகண்ட னில்லையாயின் நமது கன்னிகைக்குரிய நாயகன் வேறு யாவன்?" எனக்கேட்டனன். பவச்சுதன் அதற்கு விடையாக, ஆங்காங்குள்ள சில இளவரசர்களின் பெயர்களைக் கூறித் தனது ஆசனத்திலமர்ந்தான்.

அவ்வேளையில் **சுதசாகரன்** என்னும் மற்றோர் மந்திரி யெழுந்து, "வேந்தே! உமது கொற்றம் என்றும் பெருகுக. மேற்கூறிய இருமுது குரவர் மொழிகளையும் கேட்டீர்கள். எனது சிற்றுரையையும் கேட்பீராக. பவச்சுதன் அசுவகண்டனுக்குக் கூறிய குற்றமாகிய வயோதிகம் உண்மையே

யாயினும் அவனைப் பகைத்து, நம் புதல்வியை மணக்க யாருந் துணியார். அச்சுவக்கிரீவனை ஒரு பொருளாக மதியாது சுயம்பிரபையை மணக்க வல்லவன் சுரேந்திர காந்த அரசன் **மேகவாகனன்** செய்த தவத்தின் பயனாக இயமனும் அஞ்சத் தக்க பெருவலி படைத்த **விச்சுவன்** என்பவன் பிறந்துள்ளான். அவன் தேவருலகை யரசாண்டு பூமண்டலத்தோர்க்கு உஜ்ஜீவிக்கும் வழியை யுணர்த்தும் பொருட்டு இங்கே தோன்றியுள்ளான். அவனால்தா னிவ்வுலகம் துன்பம் நீங்கி வாழ்கின்றது. அவனைப் பகைத்தவர் இதுகாறும் யாருமில்லை. அழகிற் சிறந்த நம் பொற்கொடியை அவ்விச்சுவன் மணம் செய்வானானால் அத்தம்பதிகள் மணியும் ஒளியுமாய் விளங்குவார்கள். அவ்விளவரசனுக்குப் பெண்களுக்குரிய நற்குணங்கள் யாவுமமைந்த **ஜோதிமாலை** என்னுமோர் தங்கை யிருக்கின்றாள். அவளது கல்வியையும் அழகையும் புகழாதார் இல்லை. விச்சுவ குமாரனுக்கு சுயம்பிரபையையும், அவன் தங்கை ஜோதிமாலையை நமதிளவரசன் **அருக்ககீர்த்திக்கும்** மணமுடித்தல் சாலப் பொருந்தும்'' எனக் கூறி அமர்ந்தான்.

இவ்வாறு சுதசாகரன் மொழிந்ததின் பின்னர் அரசனின் தோழர்களின் தலைவனான **சுமந்திரி** சொல்லத் தொடங்கினான். "அரசே! வெற்றி என்றும் விளங்குவதாக. அச்சுவகண்டன் முதுமைப் பருவத்தி லுள்ளவனாகையால் அவனைப்பற்றிச் சிந்திப்பதால் யாதும் பயனில்லை. பவச்சுதன் கூறியுள்ள மற்ற அரசர்களும் அவன் ஆணைப்படி செல்லுகின்றவர்க ளாகையால் அவர்களும் நங்கன்னிகைக்கு எற்றவர்கள் அல்லர். பொன்னலம் கனிந்த நம் புதல்வி ஒரு யுவராஜனை மணங் கொள்ளாதிருப்பது பெருமையன்று. இவர்கள் யாவரினும் மிக்க மேம்பாடுடையவன்

சுரேந்திர காந்தத் தரசன் புத்திரன். அவன் கடவுளர் தகைமை வாய்ந்தவன். இப்போது அவ் விளவரசன் உலகை வெறுத்திருக்கின்றான். அவன் பிதா தன் மகன் உலக வாழ்க்கையிற் பற்றின்றித் தவத் தொழிற் பூண்டிருப் பதற்கு மிக்க வருந்தி, அதன் காரணம் அறியும்பொருட்டு, சித்திரகூடத்துள்ள அருகதேவன் ஆலயம் சென்று, ஆண் டிருந்த **அசோதர** முனிவனை வணங்கிக் கேட்டனன். அம் முனிவனும் வேந்தனை யாசிர்வதித்துச் சொல்லத் தொடங்கி னான். "வேந்தே! உனது புதல்வன் முற்பிறப்பில் **பவகிரி** மன்னவன் **ஜெயசேனன்** என்பவனுக்கு அவன் மனைவி **பிரீதிமதி** வயிற்றில் ஜனித்தவன். மதம் பொழிகின்ற யானையைக் கொல்லும் சிங்கம்போன்ற பராக்கிரம முடைய வன். அவ்விளவலின் பெயர் **விஜயபத்திரன்.** அப்பேரறி ஞன் அரச செல்வத்தைத் துறந்துத் தவம்புரிந்து **சாசாரம்** என்னும் தேவவுலகம் பெற்று, அங்குப் பல நூற்றாண்டா சிருந்து அதையும் வெறுத்திட்டான். ஆகையால் அவன் உமது அரசை விரும்பானாகித் தவத்தைச் செய்து மேற் கதி பெறுவான்" என அம்முனிவர் மொழிந்திட்டார். ஆகையால் இம்மையை வெறுத்து மறுமையை வேண்டி நிற்கும் அவ்வரச ஞானியும் நமக்குத் தேவையில்லை. இவர் களில் ஒருவரையும் வேண்டாது சுயம்பிரபைக்குச் சுயம் வரம் நாட்டினும் அந்த அசுவகண்டனே சுயம்பிரபையைக் கைப்பற்றுவானே யன்றி, ஏனைய வேந்தர் ஒருவரும் கன்னி கையை விரும்பி அவனுக் கிடையூறு செய்யத் துணியார். ஆகையால் நாம் ஒருகாரியத்தைச் செய்வோமானால் அது நம் விருப்பப்படி நிறைவேறுதல் வேண்டும். அவ்வாறின்றிப் "பிள்ளையார் பிடிக்கக் குரங்கானது போல்" ஆகுமானால் என் செய்வது"? "நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்" என்னும் முதுரைக் கிலக்காக எடுத்த காரியம்

எவ்வாறாகுமென்பதை யாமறியோம். ஆகையா லிவ்வாறு யோசனை புரிவதை விட்டுவிட்டு, இப்போது ஒரு காரியம் செய்தல் வேண்டும். அது யாதெனில் நமது குலத்தார்க் கெல்லாம் நீண்ட காலமாய் மேல்வருவனவற்றை ஆராய்ந்து சொல்லுகின்ற சதவிந்து நிமித்திகனிடம் சென்று வினவு தல் வேண்டும். அவ்வாறு கேட்போமானால், அவ்வறிவின் மிக்கான் சுயம்பிரபையின் மணத்தைப்பற்றிய சகல விஷ யங்களையும் விளங்கக் கூறுவான்" என்றான். இதைக் கேட்ட அங்குள்ளார் யாவரும் அவ்வாறே செய்யத்தக்கது என ஒப்புக்கொண்டனர். அரசனும் அதை மனத்திற் கொண்டு அவர்களுக்கு விடையளித்து, தன் அந்தப்புர மடைந்தான்.

நாழிகை யறிவிப்போர் அறைந்த முரசொலி கேட்டு, தாம் போக நினைந்த நேரம் நேர்ந்தமை யுணர்ந்து, அரசன் சதபிந்து நிமித்திகன் இல்லத்தை நோக்கி, மலர்கள் தூவி மணங்கமழும் வீதி வழியாய், வாளையேந்திய மெய்க்காப் பாளர் சூழ்ந்துவரப் பாதசாரியாய் நடந்துசென்றான். சிறிது நேரத்தில் அரசன் நிமித்திகன் கிரகத்தையடைய அவன் வரவை யுணர்ந்த நிமித்திகன் எதிரே சென்று வணங்கி, "என்னை ஒரு பொருட்டாக மதித்து இங்கு எழுந்தருளி, எனது குலத்தையும் இக்குடிலையையும் பெரு மைப் படுத்திய வேந்தர் வேந்தே! என்றும் நீவிர் கொற்றம் கொள்வீராக" என வாழ்த்தி, உயரியதோர் ஆசனத் திருத்தி, அவர் கட்டளையை எதிர்பார்த்திருந்தான். சடி யரசன் தான்வந்த காரியத்தை நிமித்திகனுடன் சொல்லும் பொருட்டு அவனுட னங்கோர் தனி மண்டபம் எய்தினன். அக்குறிப்பினை யுணர்ந்து உடன்வந்த பரிவாரத்தார் அரச னைத் தொடராது பின் தங்கினார்கள். அரசனும் நிமித்திக

னும் தங்கட்குரிய ஆசனங்களிலமர்ந்த பின்னர், நிருபன் தன் கன்னிகையின் விவாகத்தைப் பற்றிக் கேட்க நினைத் தான்.

உடனே நிமித்திகன் தனதுகணிதஞானத்தின் வலிமை யால் அரசனது உள்ளத்தில் நிகழ்வதை யுணர்ந்துகொண்டு அரசனை நோக்கிச் சொல்வானுனன். "வேந்தே! தாங்களிப் போது மனதிற் கருதிய விஷயம் தங்கள் தவப்புதல்வி யின் மணத்தைப் பற்றியதாகும். தாங்களிங்கு வரும் பொழுது வீதியில் தங்களை யெதிர்கொண்டு ஒரு பெண் வலம் வந்தனளே, அப்பொற்கொடியை, நீவிர் உணரமாட் டீர். அவளே இலக்குமிதேவி யாவள். இனி நடக்கும் மங் கள காரியங்கட்கு முன் நிகழ்வாகத் தோன்றிக் காட்சி யளித்தனள். உமது கன்னிகை இனி யடையப்போகின்ற பெரும் நலம் எம்மாலளவிட்டுச் சொல்லமுடியுமா? முன் னளில் அருகக்கடவுள் உயிர்கள் உய்யும் பொருட்டு உரைத் தருளிய புராண சரிதையில் இவளுக்கு மணவாளனுகவரும் இராஜகுமாரனது வரலாறு கூறியிருக்கின்றது" என்றான். அதைக் கேட்டு அரசன் மிகவுமதிசயித்து, "என் மகளின் நாயகன் யாவன்? அவன் சரித்திரம் அப்புராணத்தில் எவ் வாறு கூறப்பட்டுள்ளது?" என வினவினான்.

"அரசனே! போகபூமியாகிய இப் பரதகண்டம் தோன்றி மூன்று ஊழிக்காலம் கழிந்த முடிவில், உலகத் தார் பிறவித் துன்பம் ஒழிக்கும்படி ஜோதி வடிவாகிய அரு கக்கடவுள் அவதரித்தனர். அப்போது அவர் திருவடி களுக்கு அடிமைபூண்டு ஆண்டிருந்த அரசன் பரத னென்ப வன் அவரை வழிபட்டுத் தனக்குப் பின்வரும் சம்பவங்களை யுணர்த்தும் பொருட்டு வேண்டிக் கொண்டான். அதற்குத் தருமசொரூபியாக அருகமூர்த்தி, "பரத! உனது புதல்வ

ணுகிய மரீசி என்பவன் போதனமா நகர்க்கு அரசனுவான். பின்னர் அவன் மரபில் ஒப்பற்ற பராக்கிரமங்களுடன் ஒரு குமாரன் தோன்றுவான். அவன் ஒரு கன்னிகையின் பொருட்டு அச்சுவக்கிரீவன் என்னும் விஞ்சையர் வேந்தனை மாய்த்து அவனது அரசையுங் கைக்கொள்ளுவான். அவன் கேசவாம்சம் பெற்றவன். அவன் காயாம்பூ வண்ணமா யுள்ளவன். **திவிட்டகுமாரன்** என்னும் பெயரை யுடைய வன்" என அரசன் மனமகிழும்படி சொல்லியருளினர். இவ்வாறு அப்புராணத்திற் கூறியுள்ளது. அக்குமார னிப் போது சுவர்க்கலோகத்தை நீத்துப் பூவுலகில் போதனமா நகரத் தரசனுக்கு இளைய புதல்வனுக மேற்கூறிய பெய ருடன் தோன்றி யுள்ளான். அவ்வரசிளங் குமாரனுக்கு மாலை சூட்டற் குரியவள் உமது கன்னிகையே யாவள். அத் திவிட்டகுமாரனே நமது சுயம்பிரபையை மணப்ப துந் தவிர அசுவகண்டனைப் போரிலழித்து, அவனது நாட்டை யரசாளும் பொருட்டு உமக்கே தந்திடுவான்" என நிமித்திகன் கூறினுன்.

பின்னும் நிமித்திகன் தான் கூறியவற்றை உறுதிப் படுத்தும் பொருட்டு வேந்தனை நோக்கி, "மன்ன! நான் கூறிய யாவும் உண்மையெனத் தேர்தற்கு அறிகுறியாக இனிச் சமீபத்தில் நிகழும் ஒரு சம்பவம் கூறுகின்றேன். இன்று முதல் ஒரு மாதத்தில் அத் திவிட்டகுமாரன் காட் டரசாகிய வலிய சிங்கமொன்றின் வாயைப் பிளந்து அதி னுயிரைப் போக்குவன். இதனை நீவிர் சீக்கிரமே யறி வீர்" என்று மொழிந்திட்டான். இதைக்கேட்ட அரசன் பின்னும் மகிழ்ந்து, அந்நிமித்திகனுக்கு நீர்வளம் நிறைந்த **ஜோதிமாலை** என்னும் நாட்டினை மானியமாகக் கொடுத்துத்

தன் மெய்க் காவலர்களுடன் அரண்மனை யடைந்து அந்தப்புரம் சென்றனன்.

அங்குத் தன்னை யெதிர்கொண்டு வணங்கிய வாயுவேகை யாகிய தர்ம பத்தினியை மிக்க அன்புடன் நோக்கி, அரசன் தான் சதபிந்து இல்லம் சென்றதையும், அங்கு அவன் சுயம்பிரபையைக் குறித்துச் சொல்லிய அனைத்தையும் கூறினன். பின்னர் தன் காதலியைப் பார்த்து, "யான் பெற்ற இப்பேறனைத்தும் சுயம்பிரபையை யீன்றளித்த உன்னால் கிடைத்தது" எனக் கூறிப் பெரிதும் கொண்டாடினன். அச்சொற்களைக் கேட்ட அரசி அகமும் முகமும் ஒருங்கு மலர்ந்து, இளநகைதோன்ற அரசனைவணங்கி, "எனது ஆருயிர்த் தலைவ! இக்கன்னிகை தேவரீருக்கு மகளாகத் தோன்றிய பெருமையினாலும் அருகக் கடவுளின் அருளைப் பெற்றதினாலும் இத்தகைய மேம்பாடடைந்தனள். தந்தையரின் பெருமையே மக்களுக்கு வருவதன்றித் தாயால் வரும் பயன் ஏதேனு முண்டோ" என்று கூறி அரசனை மகிழ்வித்தாள்.

மறுநாட் காலை அரசன் கொலு மண்டபம் சென்று, தன் புதல்வனாகிய அருக்க கீர்த்தியையும் அமைச்சர்களையும் வரவழைத்து, முன்னாளில் தான் நிமித்திகனிடம் சென்று கேட்டறிந்த யாவற்றையும் விளங்கக்கூறி, தன் புதல்வி இனிப்பெறும் பெருந்திருவையும் அவட்கு மணாளனாகவரும் திவிட்ட குமாரனுடைய அருமை பெருமையையும் சிறப்பித்துச் சொன்னான். இவைகளை மிக்கவியப்புடன் கேட்டிருந்த அமைச்சர் முதலானோர், "எமது தலைவ! நமது கன்னிகை தெய்வ நங்கை என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இனிக் காலம் தாழ்த்தாது, பகைவர்கட்கு இடியேறு போன்றவனும் திவிட்ட குமாரன் தந்தையுமாகிய பயாபதி

யரசன்பால் ஒரு தூதனை விடுத்தருளும். அதுவே நாம் இப்போது செய்யத்தக்க முதற்காரியம். அது நிறை வேறும்பொருட்டு சகல சாஸ்திர பண்டிதனும், கற்றோர் முன்சிறிதும் இடர்ப்பாடின்றி அவர்கள் வினவியவற்றிற்கு உரிய விடையை உடனே யளிப்பவனும், சந்தர்ப்பத்திற் கேற்பத் தக்கவாறு பேசும் வாக்கு வல்லவனும், எடுத்த காரியத்தை இனிது முடிக்கும் மதிநுட்பமுடையவனும், நமது குலமுறையை நன்குணர்ந்தவனுமாகிய மரீசி என் னும் பெரியோனை அங்குத் தூதாக அனுப்புதல் வேண்டும். அவ்வாறு செய்வீராயின் காரியம் விரைவிற் கைகூடும்" என்று ஒருமனதாய்ச் சொல்லினர்.

உடனே சடியரசன் மரீசியை வரவழைத்து, தன் கையாலொரு திருமுகம் வரைந்து, அதில் தனது இலச் சினையிட்டு, அதை அவன் கையிற் கொடுத்து வேண்டிய வற்றையு முரைத்து விடுத்தனன். மரீசியும் நிருபம் பெற்று நிருபனிடம் விடைகொண்டு, பல நாடுகளைக் கடந்து சென்று, அதிவிரைவில் சுரமை நாட்டின் போதனமா நகரையடைந்து, அங்குள்ள நறுமணங் கமழும் மலர்கள் நிறைந்த புட்ப மாகாண்டமென்னும் பூம்பொழிலில் இறங் கினன்.

---

4. தூது விடு சருக்கம்.

மரீசி அரச வனமாகிய புட்ப மாகாண்டமென்னும் பொழிலிலிறங்கி, அங்கு ஆகாயத்தையளாவி வளர்ந் தோங்கிய மா, பலா, சந்தனம், சம்பகம், அகில், தென்னை, கமுகு முதலிய பல விருக்ஷங்களும், நறுமணம் கமழும் மல்லிகை, முல்லை, மாதவி, குருக்கத்தி, அனிச்சம், பன்னீர் முதலிய மலர்தரு கொடி செடிகளும் கண்டு மகிழ்ந்து,

அங்குள்ள பளிங்குபோலும் தெள்ளிய நீரையுடைய பொய்கையை யடைந்து, அதன் அழகை நோக்கி வியந்து நின்றான். அப்பொய்கையானது அருகிலுள்ள மரங்களிலிருந்து இனிமையாய்க் கூவுகின்ற குயிலால் அவனை வருகவென வரவேற்று, அழகிய படிக்கட்டுகளின்மீது மோதி எழுகின்ற திவலைப் பனிநீரைத் தனது அலைகளாகிய கரங்களினால் அவன்மீது தெளித்து, அங்குள்ள மரக்கிளைகளால் இதழ் விரிந்த மலர்களை அவன்மேல் தூவி, சுரும்பினங்களினால் இன்னிசைப் பண்பாடி, மலர்களின் மணத்தைக் கவர்ந்துவரும் இளந்தென்றலை உள்ளங்களிக்க அவன்மீது மெதுவாக வீசி மரீசியை உபசரித்தது. சில நிமிடம் அத்தடாகக் கரையில் நின்றிருந்து, பின்னர் மரீசி ஆங்குச்செழித்து மரகதக் கற்களுக்கிடையில் மாணிக்கத்தைப் பதித்தாற்போல, பசிய இலைகளுக்கிடையே நெருப்பைப்போன்ற மலர்கள் நிறையப் பூத்து நிற்கின்ற அசோகம் ஒன்றைக் கண்டு, அதன் நிழலில் தங்கினான்.

அப்போது பயாபதி யரசனால் அங்குக் காவலாக இருக்கவைத்த துருமகாந்தன் என்பவன் மரீசியின் வரவை யறிந்து, அங்கெய்தி அவன் பாதங்களில் மலர்களைத்தூவிப் பணிந்தான். பின்னர் துருமகாந்தன் மரீசியை அங்கு அலங்கரிக்கப்பெற்ற மண்டபத்திற் கழைத்துச் சென்று, அதிலிருக்க வேண்டிக்கொண்டான். அம்மண்டபத்தின் வனப்பைக் கண்டு ஆச்சரியங்கொண்டு, மரீசி “இது மனிதர்கள் தங்குவதற்குரிய இடமென்று நான் நினைக்கவில்லை. அறவாழி அந்தணனாகிய அருகமூர்த்தி வீற்றிருத்தற்கு யோக்கியமான சிலாதலமென்றே நான் நம்புகிறேன்” என்றான்.

திருமகாந்தன், "ஐயனே! நீர் சந்தேகித்தபடி இதில் வீற்றிருக்கும் தெய்வம் வேறொன்றுமன்று. இதில் தங்குவதற்குரியர் நீரே யாவீர். அதற்குள்ள காரணமும் கூறுகின்றேன். கேட்பீராக. ஒருநாள் எமதரசன் சபையில் **அங்கதன்** என்னும் நிமித்திகன் தோன்றி, விஞ்சைய வேந்தன் ஒருவன் தன் மகளை எங்கள் அரசனது இளைய குமாரனாகிய திவிட்டனுக்கு மணம் பேசித் திருமுகம் ஒன்று அனுப்புவன். அதைக்கொண்டு ஒரு தூதன் இன்னும் ஏழு நாளில் இப்பொழிலில் வந்திறங்குவான் எனச் சொல்லிப் போயினன். அதைக்கேட்ட காவலர் பெருமான் மகிழ்ந்து, அவ்வாறு வருகின்ற தூதனை உபசரிக்கும் பொருட்டு, இம்மண்டபத்தை யலங்கரித்து, அதற்குக் காவலாக என்னையும் நியமித்தனர். இது காறும் தங்களது நல்வரவை நான் எதிர்நோக்கி யிருந்தேன். ஆகையால் இம்மண்டபத்தில் அமர்ந்திருங்கள்" என வேண்டிக் கொண்டான். மரீசியும் மிக்க களிப்புடன் அம் மண்டபத்தில் அமர்ந்திருந்தான்.

மரீசியின் வரவுணர்ந்த வேந்தன் அவன் கொண்ட வழிச்சிரமம் நீங்க உபசரியுங்கள் எனக் கட்டளையிட்டு கணிகையர் நால்வரை யனுப்பினன். பொற்றட்டில் மலர் மாலை, பனிநீர், கலவைச் சந்தனம், சிற்றுண்டி, போஜனம் முதலியவைகளைப் பணிப் பெண்கள் ஏந்திவர, அந்நால்வரும் காலிலணிந்த சிலம்புகள் கலீர் கலீர் எனச் சப்திக்க, இடை துவள, முகம் வேர்வை யரும்ப, அன்னமென மெல்லடி பெயர்த்து வந்தனர். அவர்களது சிருங்காரத்தையும் நடையினது உல்லாசத்தையும் கவனித்த மரீசி இதுவே இந்திரனது கற்பகச் சோலையாகும். இவர்களே அங்குள்ள தேவமாதர்களாவர் எனக் கருதினான். அக்கன்னியர் நால்வரும் தங்கட் கியற்கையாயுள்ள தலைசாய்ந்த

அரைக்கண் விஷம நோக்கும், குறு நகை விளைத்தலும், ஆடையைத் தளர்த்தி யடிக்கடி யொழுங்கு படுத்தலுமாகிய விளையாட்டுச் செய்கைகளை யொழித்திட்டு, அடிமைகள் போன்ற ஒழுக்கத்துடன், மரீசி முன்னின்று அவன் மீது பனிநீர் தெளித்து, சந்தனந் திமிர்த்து, மலர்மாலை சூட்டிச் சிறிது நேரம் ஆடல் பாடல்களால் அவனைச் சந்தோஷிப்பித்தனர். பின்னர் பணிப்பெண்கள் தாம் கொண்டுவந்த பலகார வகையுடன் அறுசுவையுண்டி யருத்தி உபசரித்தனர்.

இவ்வாறு மரீசி இன்புற்றிருக்கும்போது, பயாபதியரசனது கட்டளையினால் விஜய திவிட்டர்களாகிய அரசகுமாரர்களிருவரும் நால்வகைச் சேனை புடைசூழ, மங்கள வாத்யம் முழங்க, பொற்படாம் போர்த்த களிற்றி யானையின்மீது ஆரோகணித்து, வெண் திங்களும் கருங்கொண்டலும் ஒருங்கு சேர்ந்து, செழும் நீல மலைமீது வருவது போல ஊர்ந்துவந்து அச்சோலையிற் பிரவேசித்து, மரீசி தங்கியுள்ள மண்டபத்தை யணுகினர். பின்னர் அவ்விரு வீரரும் யானையினின்றும் கீழிறங்கியதைக் கண்டு, மரீசி யிருக்கை விட்டெழுந்து, மிக்க அமைதியுடன் அஞ்சலித்தடக்கை கூப்பி இறைஞ்சினன். அவ்வாறு வணங்கியது கண்ட சங்க வண்ணன் மரீசியை நோக்கி, “ஐய! நீவிர் எல்லா நற்குணங்களும் படைத்த பெரியோராயும் எங்கட்கு முதுகுரவராயு மிருக்கின்றீர். இவ்வாறிருந்தும் நீவிர் எங்களைப் பணிந்தது யாது காரணம்? இது செய்யத் தகுமோ?” என வினவினன்.

அதற்கு மரீசி முதல்வன் பால்நிறக் கடலும் நீல நிறக் கடலும் போன்ற விஜய திவிட்ட குமாரர்களின் திவ்விய ரூபத்தையும் தேஜஸையும் ஒருமுறைக் கிருமுறை உற்று நோக்கி, அன்பும் ஆதரமும் பெருகச் சொல்வானானன்.

“அற்புத மைந்தர்காள்! நீங்கள் விண்ணுலகை நீத்து மண்ணுலகம் வந்த தேவர்களாவீர்கள். உங்கள் தேக இலக்கணமே இதை வற்புறுத்துகிறது. ஆகையால் உங்கள் செவ்விய திருவடிகளை வணங்கப் பெற்றூரே பெருந்தவம் புரிந்த பெரியோராவர்” எனக் கூறிப் பின்னுமோர் முறை வணங்கினன். அதுகேட்ட அரசிளங் குமரர் மரீசியை நோக்கி, “நீவிர் என் சொல்லினும் நாங்கள் ஒப்புக் கொள்ளோம். இது நிற்க. எமது தந்தையார் உம்மை யழைத்து வரும்படி எங்களை யனுப்பியுள்ளார். ஆதலின் காலம் தாழ்த்தாது இவ் யானையின்மீது ஏறிப் புறப்படுக” என வேண்டினர். மரீசிப் பெரியோனும் தான் வந்த காரியம் அதுவேயாதலால் மிக்க குதூகலத்துடன் யானையின் மீதமர, மூவரும் பரிவாரங்களுடன் அதி விரைவில் அரண்மனையை யடைந்தனர். அவர்கள் வரவை வாயிற் காப்போர் அரசனுக்கு அறிவித்தனர்.

பயாபதி அரசன் பொன் வெள்ளிகளாலும் சித்திரப் பதுமைகளாலும் முத்து மாலைகளாலும் மலர்த் தொங்கல்களாலும் அலங்கரிக்கப்பட்டு, மனோரம்யமான தூபம் கமழும் ஒரு பளிங்கு மண்டபம் சென்று அங்கு வீற்றிருந்து, அம்மூவரையும் உடனே வரும்படி அநுமதியளித்தனன். உள்ளே சென்ற விஜய திவிட்டர்களும் மரீசியும் அரசனை வணங்கியபின், இராஜ குமாரர்கள் அரசனுக் கிருபுறங்களிலும் அருகிலிட்ட ஆசனங்களில் அமர்ந்தனர். மரீசி என்பவன் அரசன் காட்டிய ஆசனத்தில் மந்திரிகளுடன் வீற்றிருந்தான். பின்னர் அரசன் மரீசியுடன் க்ஷேம லாபங்களைப் பொதுவாக விசாரித்திருந்தனன். சிறிது நேரம் சென்றதும், அம்மரீசி எழுந்து, தனது விஞ்சை வேந்தன் மலையிருக்கும் திசைநோக்கித்

தண்டனிட்டு, அரக்கிலச்சினை வைத்த திருமுகத்தை அரசனுக்கு நேரே நீட்டினான். இறைவனது குறிப்பை யுணர்ந்து ஆங்கு நின்ற லிகிதன் ஒருவன் சென்று, அவ் வோலையை வாங்கி, அரக்கு முத்திரையை நீக்கிப் பிரித்த னன். நெரிவடுப்படாத அந்நிருபத்தில் அழகாக மகர வாய்ச் செப்பின் மசி கலந்தெழுதப்பட்ட பதங்களை முத லில் ஒருமுறை தன் மனத்தில் வாசித்துப் பயின்று, பின் அரசனுக்கு எதிர் நின்று வாசித்துக் காட்டினான். அந் நிருபத்திற் பின்வருமாறு வரையப்பட் டிருந்தது.

"போதனமா நகரத்திறைவன் காண்க. விஞ்சைய ருலகத்தில் இரதநூபுரத்தை யாளும் சுவலனசடி யரசன் வரைந்திட்ட நிருபம். வீரக்கழலணிந்த வெற்றி வேந் தர்க்கு எந்நாளும் செல்வமும் புகழும் படைத்திரளும் பெரி தும் பெருகுக. எமது புதல்வி சுயம்பிரபை நமது இளைய புதல்வனாகிய திவிட்ட குமாரனுக்குப் பத்தினியாகும்படி பெரியோர்களால் நியமிக்கப்பட்டனள். ஆகையால் அக் கன்னிகையை யழைத்து உமது புத்திரனுக்கு மணம் செய் வித்திடுக. இன்று முதல் அக்கன்னிகை உமக்கும் உமது தேவியார்க்கும் உரியவளே யன்றி எங்கட்கு உரியவளல் லள். தாங்களும் தேவியரும் மணமகனும் மணமகளும் நீடூழி வாழ்க."

இவ்வாறு வாசிக்கக் கேட்ட பயாபதி யரசன் மிகவும் பிரமைகொண்டு, "வித்யாதரர் நம்மினும் சிறந்தவராயிற்றே! அதை எண்ணாது நம்மிடத்தில் மணம் பேசித் தூது விடுத் தல் பெரும் வியப்பன்றோ?" என்று சிந்தித்துச் சிறிது நேரம் ஒன்றுந் தோன்றாதவனாய்ப் பதிலுரையாதிருந்தான். அதுகண்டு மரீசி நமது அரசன்விட்ட திருமுகத்தைப் பெருமைப் படுத்தாது அவமதித்தானென்று கருதி, அத

ணல் எழுகின்ற கோபம் முகத்திலே விளங்கப் படபடப்புடன் சில வார்த்தைகள் கூறுவாறனன். "பூமண்டலாதிபதியே! யாவராயினும் மனிதரிடம் ஒரு கருமம் விரும்பித் தாமாக வலுவில் மொழிவாராயின் அவர் அம்மனிதரால் இகழப்படுவார் போலும்! இது உலக வழக்கு. அதை யின்று உம்மிடத்து விளங்கக் கண்டேன். தேவர்களா யிருப்பினும் தங்களோடு நட்புக் கொண்டு சில பகல் கழிந்ததானல், அவர்களேயும் மனிதர்கள் கேவலம் இகழ்ந்துரை யாடுவர். இது மனிதரியல்பு. பித்த நோயினல் வருந்திச் சுவைப் புலனே யிழந்திருப்பார்க்கு இனிய பாலைக் கொடுத்தாலும் அவர்கள் அதன் ருசியை அறிவார்களோ? அதுபோன்று தேவ ஜாதியாராகிய விஞ்சையரது செல்வத்தைப் பல குற்றங்கள் நிறைந்த அற்ப யாக்கையையுடைய மனிதர் எவ்வாறு அறியக்கூடும்? தரும வழியிற் செல்லும் மனத்தையுடைய பெரியோர்க்கன்றித் தீவினையில் ஆழ்ந்து கிடப்பார்க்குப் பிறவி நோயை போக்கும் ஞானநெறி கைவசமாமோ? வித்யாதரர் அனுபவிக்கும் பதவியின் உயர்வை எப்போதும் மறதியிலாழ்ந்து கிடக்கும் மனிதர்க்கு நிகழ்த்தலாமோ? மதம் பொழிகின்ற களிற்று யானையின் ஆற்றலை அது முறித்து வீழ்த்திய மரத்தின் தழைகளைத் தின்று திரியும் கன்றுகள் உணரவல்லதோ? ஆகையால் எமது விஞ்சையர் மேம்பாட்டினை அற்ப வாழ்க்கையுடைய நில வுலகத்தார் வரங்கிடந்தாலும் அடையப்பெருர். வெள்ளியங்கிரிக்குத் தலைவனை எமது பெருமான் உமது உறவை விரும்பித் தூதனுப்பியதே காரணமாக, நீர் அவ்வேந்தனை இகழ்ந்து ஒருரையும் வழங்காதிருக்கின்றீர். இவ்வாறு மௌனமா யிருப்பது வேந்தர்க்கு அழகன்று."

இவ்வாறு கூறிய சிறு மொழிகளைக்கேட்ட பயாபதி வேந்தன் அத்தூதனது அறியாமைக்கு மிகவும் வருந்தி, "ஐயனே! கோபம் கொள்ளவேண்டாம். உம்மரசன் வார்த்தையை அலட்சியம் செய்தேனில்லை. பெருமையிற் சிறந்த உமது மன்னன் விட்ட திருமுகத்திற் குரியவாறு உடனே பதில் சொல்லமாட்டாது வாளாயிருந்தேனே யன்றி வேறொன்று மன்று. வித்யாதரர் என்பவர் மிக்க மேன்மையுடையவர். அவர்கள் தேவ ஜாதியர். உலகத்தில் வாழும் மனிதர்களுக்கு அவ்விஞ்சையரது உறவு கிடைத்தல் மிக்க அரிதாகும். உண்மையாகவே பொள்ளல் யாக்கையுடைய மானிடர்கள் அத்தகைய சிறப்பினையடைய எண்ணவும் கூடுமோ? ஆகையால் இரதநூபுரத் தரசன் விடுத்த ஓலை படிக்கக்கேட்டு, யான் கேட்டது கனவோ என மயங்கி இருந்தேன். இது உண்மை. மேலும் ஒருவனுக்கு இன்பமும் துன்பமும், பெருமையும் சிறுமையும், புகழ்வும் இகழ்வும், வேண்டுவனவும் வேண்டாவனவும், அவனது ஊழ்வினைப் பயனால் வருவதேயன்றித் தனது முயற்சியினால் பெறக்கூடுமென்பதில்லை. அது போல மிக்க உயர்ந்த பதவியிலிருக்கும் வித்யாதரர் சம்பந்தம் எம் போன்ற மனிதர்க்குக் கிடைப்பது பூர்வ புண்ய வசமே யொழிய எமது சக்தியாலன்று. ஆதலால் உமது நிருபன் விடுத்த வோலையால் நாங்கள் மிகவும் பெருமையுற்றோம்" எனக் கூறினான்.

"ஐயோ! இதென்ன பாவம். அரசனது கருத்தை ஆராயாமல் சிறிதும் தகாத அற்ப வார்த்தைகளைச் சொல்லி, அவன் மனதைப் புண்படுத்தினோமே! பெருந்தகைமை கொண்ட இவ்வேந்தன் அவைகளைச் சிறிதும் பொருட்படுத்தாது என்னை மன்னித்தருளினன். ஆகையால்

பொறையினுற் பெரியவன் பூபன். அறிவினுற் சிறியவன் யானே" என்று மிகவும் நாணமடைந்து, மரீசி அரசனை நோக்கி, "வேந்தே! உமது விசால புத்தியும் பெருந் தன்மையுமறியாது ஏதோ என் புன்மதியாற் சில கொடூர மொழிகளைப் பிதற்றி விட்டேன். அவைகளை மனத்திற் கொள்ளாது மறந்தருளும்" என வேண்டிக் கொண்டான். அரசன் அவனைக் கையமர்த்தி, "பெரியோய்! சொர்க்க வாசிகளாகிய வித்யாதரரொடு மண்ணுலக வாசிகளாகிய நாங்கள் மணங்கொள்ளுதல் கூடுமோ? இதை எங்கட்கு விளங்கக் கூறுங்கள்" எனக் கேட்டனன்.

அதற்கு விடையாக மரீசி, "வேந்தர் வேந்தே! மேகங்கள் வந்து தங்குகின்ற சோலை சூழ்ந்த மலைச் சிகரங்களில் வாழ்கின்ற வித்யாதரர் தமக்குள்ள விஞ்சையின் வலிமையால் சிறந்தவரேயன்றி, மற்றப்படி அவர்களும் மனிதர்களே. இவ்விரு திறத்தார்க்குள்ளும் யாதும் வேற்றுமையில்லை. அதனைக் கூறுவேன், கேட்டருளும். பல வளங்களும் நிறைந்த **பவபுரம்** என்னும் நகரைப் பரிபாலிக்கும் **பவனவேக** ராஜன் மனைவி **வாயுவேகையும்** யானும் ஒரு தாய் வயிற்றிற் பிறந்தவர்கள். என் பெயர் மரீசி. என் தந்தை பெயர் **அஞ்சுமான்**. அவர் கல்வி கேள்விகளில் சம்பூரணர். என் தாய் பெயர் **அருசிமாலை**. அவளைக் கலைமகளவதாரம் என்றே சொல்லவேண்டும். அப்பெருமகளருளினுல் யான் பல நூல்களையும் கற்றுள்ளேன். அவற்றுள் உலக சரித்திரம் ஒன்று. முன்னுள் தொடங்கி இந்நாள் வரையும் உலகை யரசாளுபவரின் குலமுறைத் தொடர்ச்சியை நான் நன்கு அறிவேன். அதை இங்குச் சுருக்கமாய்க் கூறுகின்றேன் கேட்டருளும்.

ஆதிகாலத்தில் அரசகுலம் ஐந்தையுமுண்டாக்கி அவற்றிற் குரிய ஒழுக்கங்களையும் தொழிலையும் வகுத்தருளிய தீது நீங்கிய அருட் பெருங் கடலாகிய அருகமூர்த்தியின் பதுமவடிகளைத் தியானித்து, நீதி தவறாது செங்கோலோச்சிய காசிவேந்தன் கச்சனென்றொருவ னிருந்தான். அவனுக்குச் சுதஞ்சனை யென்னும் கற்பரசி மனைவியாயினள். இவ்விருவரும் செய்த தவப்பயனால் நமி என்னும் பெயருடன் ஒரு புதல்வன் பிறந்தான். நலத்தின் மிக்க நமி என்பவன் இராஜ வாழ்வில் வெறுப்புற்று அறக் கடவுளின் பாதங்களிற் பற்றுடையவனாய், அப்பெருமானின் சினகரமெய்தி, இனிய பாடல்கள் பல பாடித் துதித்தான். பண்ணோடுங் கூடிய இவ்விசைப்பாட்டினைக் கேட்டுப் பறவைகளும் மிருகங்களும் இரை தேடுதலை யொழித்து, மெய்ம்மறந்து நின்றன. கின்னரர் கந்தர்வர் முதலியவர்கள் தம்முணர்வின்றித் தம்பித்து நின்றனர். அவ்வேளையில் ஆயிரம் பணாமுடிதரித்த ஆதிசேஷனும் அங்குக் கடவுளை வலம் வந்து வணங்கி யிருந்தான். அரவரசன் அவ் விளவரசனது இனிய கானத்தையும் மெய்யன்பினையுங் கண்டு வியந்து, "மைந்தனே! நமது அறக் கடவுளுக்கு இசைத் தொண்டுபுரியும் நீ யார்? யாது வேண்டி இவ்வாறு பக்தி செய்கின்றாய்" என வினவினன். அதற்கு நமி என்பவன், "ஐயனே! வானுலகத்துள்ளார் தாம் வேண்டியது வேண்டியாங்குப் பெறுவதுபோல மண்ணுலகத்தில் யானும் இங்குக் கிட்டுதற் கரிய சொர்க்க போகத்தை விரும்பினேன். எனக்கிதை யளிக்கும் பொருட்டே அறமுதல்வனைத் தினமும் துதிக்கின்றேன்" என்றான். ஆதிசேஷனும் அக்கடவுளரின் ஆணையால் நமிக்குத் தேவனாதற் குரிய மந்திரம் உபதேசித்து, இல்லறம் நடத்த ஒரு

மனைவியையும், இருத்தற்கு வெள்ளி வெற்புங் கொடுத்துத் தன்னுலகம் சென்றான். அந்நமியும் வரம் பெற்று விண்ணுலகிற் சென்று அரசாண்டிருந்தான். அந்த நமி குலத்தில் தோன்றியவன் நமது சடியரசன். ஆகையால் அவனும் மனிதனே. நீரும் குலப் பெருமையாலும், செல்வத்தாலும் ஒப்பற்ற வீரத்தாலும் நம்மன்னனை நிகர்த்திருக்கின்றீர். நீங்களிருவரும் மனம் ஒப்பி மணம் முடிப்பீர்க ளானல் நெய்யும் பாலும் கலந்தது போலமையும்" எனக் கூறி முடித்தான்.

இங்ஙனம் மரீசி தங்க ளரசன் குலமுறையைக் கூறி முடிக்கவும், பயாபதி யரசனின் புரோகிதன் எழுந்து, வித்யாதரனை நோக்கி, "பெரியோய்! உங்களது வேந்தன் குல வழியை விளக்கிக் கூறினீர். அவ்வாறே எங்களரசன் குலமுறையைக் கூறுகின்றேன். கேட்டருளும். யாவனால் உலகமெல்லாம் படைக்கப்பட்டதோ? எவனை நினைந்து உலகமெலாம் பணிகின்றதோ? யாவற்கு உலகெலா முரிமையோ? யாவனால் உலகம் பகுக்கப்பட்டதோ? யாவன் நமக்கு மறுமை யின்பத்தைக் கொடுக்கவல்லானே? அவனது அருட்பிரசாதத்தால் தோன்றியவன் மரகதக் குன்றுபோ லொளிரும் **வாகுவலி** யென்னும் வேந்தன். அவன் இராஜ்ய விசாரணையில் ஒப்புயர்வற்றவன். அவன் உலகத்தை முறைசெய்த நீதிகளையே இன்றளவும் அரசர்கள் கற்றுத் தெளிந்து செங்கோல் செலுத்துகின்றனர். அவ்வரசன் தனக்கு முதுமைப் பருவம் அணுகுவதைக் கண்டு, அரசை மகனுக் கீந்து தவம்செய்யும் பொருட்டுக் கைலை மலைக்குச் சென்றான். அங்கு அவன் மனத்தை யடக்கி, யாதொரு சலனமுமின்றி, நின்ற நிலையிலேயிருந்து கொடிய தவம் புரிந்திருந்தான். அவனது அடிகளிற் பற்றியெழுந்த

புற்றுக்களில் பெரும் பாம்புகள் குடி புகுந்தன. கொடிகள் அவனை மரமாகக்கொண்டு அவன்மீது படர்ந்தன. புதர் போன்று வளர்ந்த அவனது குடுமியில் குருவிகள் கூடுகட்டி வாழ்ந்தன. நினைத்தற்கரிய இப்பெருந் தவத்தின் பயனாக வாகுவலி மன்னன் தேவர்க்கு அதிபதியாயினன். அவனது குலத்தி லுற்பவித்தவன் நமது பயாபதி வேந்தன்" எனக்கூறி ஆசனத்தமர்ந்தான்.

அப்போது சபையிலிருந்தோர் யாவரும் இரு குல வழியையும் கேட்டு, மெய்சிலிர்த்துக் கண்களில் நீர்தளும்ப, ஆனந்த பரவசராய் அரசனைப் புகழ்ந்து, மரீசியையும் கொண்டாடினர். இது இவ்வாறாக, மரீசி அரசன் உரை செய்யா முன்னம் எழுந்து, "வேந்தே! ஒரு வார்த்தை கூறுவேன். இவ்வாறு அரிய தவம்செய்து தேவாதிபத்யம் பெற்ற வாகுவலி யென்னும் உமது குல முதல்வன் எங்குல வேந்தனாகிய கச்சன் என்பானுக்கு மருக னென்று புராண நூலிற் கூறியுள்ளதை நானறிவேன். ஆகையா லிரு குலமும் ஒத்திருப்பதனால் இருவர் உறவும் பின்னும் உறுதியாயிற்று" எனப் புகன்றான்.

அப்போது அரசன் தன்மனத்தில் அரும்பெரும் கடவுளின் அருள்திறத்தை வியந்து வணங்கி, மரீசியை நோக்கி, "பெரியோய்! உலக நூல்களும் குலங்களும் அவைகளின் முறைமையும் இவைபோன்ற மற்ற விஷயங்களையும் அறிந்தோர் உம்மை ஒப்பார் ஒருவருமில்லை.

'மந்திரக் கிழவர் கண்ணா மக்கள்தன் தாள்களாகச்
சுந்தர வயிரத்திண்தோள் தோழராச் செவிகள் ஒற்றா
அந்தர வுணர்வுநூலர் அரசெனு முருவுகொண்ட
எந்திர மிதற்கு வாயாத் தூதுவ ரியற்றப் பட்டார்'

என்றபடி அரசு என்பது ஓர் யந்திரம் போன்றது. அதன்

கண்கள் அமைச்சர்கள். பாதங்கள் புதல்வர்கள். அழகிய மலைபோலும் வலிய இருதோள்கள் தோழர்கள். செவிகள் பல தேயங்களின் இரகசியங்களை யறிவிக்கும் ஒற்றர்கள். உணர்ச்சி பல நூல்கள். வாய் தூதுவர். அதில் அமைச்சர்க்கு இருக்கவேண்டிய நூலாராய்ச்சியும், நுட்ப மதியும் அமைந்துள்ள ஒருவன் தூதனாயின் அவன் எடுத்துரைக்கக் கூடாத சூழ்ச்சியில்லை. அரசனுக்கு எச்சமயத்தில் எது உற்றபோதிலும் அதற்கேற்ற உபாயம் தெரிந்து, அரசனைத் தேற்றிக் காரியத்தை நிர்வகித்தல் இன்னோர்க்கன்றி ஏனையோர்க்கியலுமோ? சகல குணங்களும் நிறைந்த உம்மைத் தூதனாகப் பெற்ற மன்னர் மன்னன் தான் விரும்பியடையக் கூடாத பொருளுமுண்டோ? இது நிற்க. எம்மைச் சுற்றமாகக்கொண்டு எம்பாலும்மைத் தூதாக விடுத்துச்செய்த பெருமை யாம் இப்பிறப்பிற் பெறுதற்கரிய பெரும்பயனாகும். இனி இதைக்குறித்துப் பல வார்த்தை சொல்வதிற் பயனில்லை. விஞ்சைய வேந்தனோடு உறவுகொண்டு வாழ்வதையே பெரிதும் விரும்புகின்றேன். கொற்றவன் கருத்து இதுவாயின், இன்று முதல் எனது சிறுவர்களைத் தனக்குக் குற்றேவலராகக் கொண்டு தன் விருப்பப்படி ஆண்டுகொள்ளக் கடவன். அதில் எனக்கு யாதும் தடையில்லை" என்றனன்.

மரீசி தான் தூதுவந்த காரியம் இனிது முடிந்ததெனக் களிப்புற்று, அரசனை வணங்கி விடை தரும்படி வேண்டி நின்றான். பயாபதி மன்னன் அவனை அன்று தங்கியிருக்கச் செய்து, தன் நகரிலுள்ள பல அழகுகளைக் காட்டி, நடன கீதங்களால் அவனை மகிழ்வூட்டி, மற்றைநாள் விலையுயர்ந்த பல ஆடையாபரணங்களைச் சன்மானமாகக் கொடுத்துப் பெருஞ் சிறப்புடன் பெரியோருடன் கூட்டி, வழியனுப்பி வைத்தனன். மரீசியும் சடியரசன் வாழும் பொன்னகர் நோக்கிப் புறப்பட்டனன்.

5. சீயவதைச் சருக்கம்

மரீசி போதனமா நகரைவிட்டுப் புறப்பட்டுப் பல நாடுகளையுங் காடுகளையுங் கடந்து, இரதநூபுரத்தையடைந்து, அங்கு அரசனது அரண்மனையின் காவல்பூண்ட வாயில்கள் மூன்றையுங் கடந்து உள்ளே சென்று சடியரசனைக் கண்டு வணங்கினான். அரசனும் அவனை வரவேற்று ஓர் ஆசனங் காட்ட மரீசி அதிலிருந்தான். சந்தோஷம் விளங்குகின்ற அவனது முகக்குறியினைக் கண்டு, அரசன் தான் அனுப்பிய தூது முற்றும் நிறைவேறியதென ஊகித்தறிந்து கொண்டான். மரீசி அரசனை நோக்கி, "வேந்தே! உமது கொற்றம் என்றும் பெருகுக" என வாழ்த்தி, "நான் போய்வந்த தூது இனிது முடிந்தது. அதன் வரலாறு கேட்பீராக" எனச்சொல்லி, தான் திருமுகம் பெற்றுப் போதனமா நகரம் சென்று அங்கு அரசனது புட்பமாகாண்டத்தில் இறங்கியதும், அரசனாணையால் கணிகையர் முதலோர் வந்து தன்னை உபசரித்ததும், பின்னர் அரசகுமாரர் தன்னை வந்து வரவேற்று அரண்மனைக் கழைத்துச் சென்றதும், அங்கு அரசனைக் கண்டு வணங்கித் திருமுகம் அளித்ததும், அதையேற்று அவன் விடை கூறுதிருந்தமையாற் சினந்து தான் கூறியதும், அதற்கரசன் சமாதானமாக உற்றது கூறக்கேட்டுத் தான் வெட்கி மன்னிப்புக் கேட்டதும், இருவர் குலமுறையும் விளக்கி மணமுடிக்க இசைந்ததும், பின்னர் தான் அரசனால் பல வரிசைகளைப் பெற்று விடை கொண்டு வந்ததும் முதலியவற்றை விரிவாகக் கூறினான்.

பின்னும் அரசனை நோக்கி, "வேந்தே! அப்பயாபதியரசனின் பெருமைகளை ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேஷன் சொல்ல முடியுமேயன்றி என்னால் சொல்ல முடி

யாது. ஆகையால் அதைத் தவிர்த்து அவனது புதல்வர்களைப்பற்றிச் சிறிது கூறுகின்றேன். கேட்டருளும்.

அவனுடைய புதல்வர்கள் வீரத்தால் மற்றைய வேந்தர்களாகிய யானைகளுக்குச் சிங்கம் போன்றவர். அவர்களது அழகோவெனின் மன்மதன் இரண்டு வடிவமெடுத்து அவர்களாக வெளிப்பட்டிருக்கின்றான் என்று சொல்வதே முற்றும் தகுதியாகும். அவர்களுக்குள் இளையவனாகிய திவிட்ட குமாரனை மணமகனாகப் பெறுதற்கு நமது சுயம்பிரபை என்ன தவம் செய்துள்ளாளோ யாம் அறியோம். நங்கைக்கேற்ற நாயகனும், நாயகனுக்கேற்ற நங்கையும் அவர்களிருவர்களே யன்றி வேறொருவரும் ஆகார். இவ்வாறு பொருந்தியது இரு குலமும் செய்த பூர்வ புண்ணியமாகும்" எனக் கூறினன். இவைகளைச் சந்தோஷத்துடன் கேட்டுச் சடியரசன் மரீசிக்கு மிகுந்த திரவியத்தைச் சன்மானமாகக் கொடுத்து, பல உபசார வார்த்தைகளைக் கூறி அனுப்பி வைத்தான்.

பின்னர் அரசன் அமைச்சர்களை வரவழைத்து, அவர்களுடன் தூது இனிது முடிந்தமையைக் கூறி, "இனிச் செய்வதை யோசித்துக் கூறுங்கள்" என வினவினான். அவர்கள், "மன்ன! நமது நிமித்திகன் இன்னும் ஒரு திங்களில் அத்திவிட்ட குமாரன் வலிய சிங்கத்தின் வாயைப் பிளந்து கொல்வன் எனக் கூறி யிருக்கின்றான். அதனுண்மையை அறியும் பொருட்டு ஒரு தூதுவனை மண்ணுலகிற்கனுப்பி, அவ்வொரு மாதம் வரை அங்குத் தங்கியிருந்து, அதைக் கவனிக்கும்படி செய்யவேண்டும். இச் சீயவதை நேரிடுமானால் நிமித்திகன் சொன்ன மற்றவைகளும் நடக்குமென்பதிற் சிறிதும் தடையில்லை" என்றார்கள். அரசன் அந்த யோசனை சரியென ஒப்புக்கொண்டு, போதனமா நக

ரத்திற்கோர் தூதனை யனுப்பினன். இங்கிவ்வாறாக, அச்சுவகண்டனைப்பற்றி இனிக் கூறுவோம்.

அச்சுவகண்டன் தன் பேரைக் கேட்கினும் இடியோசை கேட்ட நாகம்போ லொடுங்குகின்ற பகையரசர்களை யடக்கி, அனேக கன்னியரை மணம் செய்து இன்புற்றிருக்குங் காலத்தில் பூமகள் அவனை விட்டு நீங்குங்காலம் பார்த்திருந்தாள். ஒரு நாள் சதபிந்து என்னும் நிமித்திகன் அரசனை யணுகி வணங்கி, வாழ்த்தி, "எம்பெருமானே! அரசர்கள் தங்களுக்குள்ளே நிகழ்கின்ற காமக்குரோத முதலிய அறுவகைப் பகைகளையும் வெல்ல வேண்டும். அப்படி வெல்வாராயின் அவர்களை ஜெயிக்கக் கூடிய விரோதிகள் புறத்தில் ஒருவருமில்லை. அவர்களாளும் நாட்டில் எப்போதும் பொன்மாரி பொழிந்திருக்கும். அவ்வாறின்றி, மேற்கூறிய அறுபகையையும் அடக்காது அவைகளின் வசப்பட்டுக் கொடுங்கோல் செலுத்துவானானால் அவனைப் பூமகள் சீக்கிரமே விட்டகலுவாள். ஒருவன் இக்குற்றங்களுக்கு ஆட்பட்டு நடப்பானாயின், அவன் உய்யும் பொருட்டு, முன்னாளில் இவற்றால் சிறப்பிழந்தவர்களை யெண்ணி மனம் திருந்தக்கடவன் என்று அற நூல்கள் போதிக்கின்றன. நீங்களோ நீதி செலுத்தும் முறையினை நன்குணர்வீர்கள். ஆயினும் தங்களுக்குச் சொல்லவேண்டியதொன்றுண்டு. அது உங்கள் செவிக்கினிமை யில்லாமையால் நீவிர் என்னை வெறுக்க நேரிடும். ஆயினும் அதைச் சொல்லித் தீரவேண்டுவது எனது கடமை யாகையால் சொல்லத் துணிந்தேன். வேந்தனே! பூமண்டலத்தில் சுரமை நாட்டில் போதனமா நகரம் ஒன்றுண்டு. அந்நகரத்தை யாளும் பயாபதி வேந்தனுக்கு இரு குமாரர்களிருக்கின்றனர். அவர்களில் இளையவனும் காயாம்பூ வண்ணனுமான திவிட்ட குமாரன் உமக்குக் கொடிய பகைஞனாய்

ஏற்பட்டுள்ளான் என்பதை எனது நிமித்திக சக்தியா லறிந்து கொண்டேன். அது என் மனதை மிக்க வருத்துகிறது. ஆகையால் அதற்குத் தக்கவைகளை விரைவில் யோசித்துச் செய்திடுக" என்று கூறினன்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அசுவகண்டன், நச்சரவம்போற் சீறி, "வெகு நேர்த்தி! நன்றாகச் சொன்னீர்! பூமியிற் கேவலம் புழுக்களைப்போல நெளிந்து திரியும் மனிதர்களா என்னைப் பகைத்துத் துன்பம் செய்ய வல்லவர்கள்?" என்று கையோடு கைதட்டிச் சிரித்துச் சொல்லத் தொடங்கினன். "சிறிய ஆலவட்டத்தா லெழுங் காற்று மகாமேரு மலையை அசைத்திடுமோ? அதுபோல இம்மானிடப் பேதைகளால் எனது தோள்களை யசைக்க முடியுமோ? கொடிய களிற்றியானையின் மலைகளையும் பிளக்கக்கூடிய கொம்புகள் வாழைத்தண்டி லூன்றினால் முறியுமோ? அரக்கர்களுடன் பொருது அவர்களை வென்ற எனது தோள்கள் கேவலம் மனிதர்களுக்குப் பணிந்திடுமோ? பிரசண்டமாருதம் மிக்க வேகத்துடன் வீசி மோதுங்கால் சிறு மேகக் கூட்டங்கள் சிதறி யழியாது அதை யெதிர்த்து நிற்குமோ? நான் கோபத்தோடு போருக்குச் செல்வேனாகில் மானிடர்களா என்னை எதிர்த்து நிற்கக் கூடியவர்கள்? இவ்விஷயத்தில் உமது நிமித்த நூல் உம்மை ஏமாற்றிவிட்டது. அது பொய்மை நூலென்று நான் கருதுகின்றேன். ஆயினும் புரோகிதன் சொல்லைப் போற்றவில்லை என்னுமோர் அபவாதத்திற்கு ஆளாவேன் என்றஞ்சுகிறேன். ஆகையால் நீவிர் அமைச்சரிடம் சென்று, இதை யுரைத்து வேண்டியவற்றை யாலோசிக்குமாறு செய்வீராக" எனக் கூறி, நிமித்திகனை அனுப்பி வைத்தனன். நிமித்திகனும் அமைச்சர்க்கு இதை யறிவித்துச் சென்றனன்.

அதன் பொருட்டு மந்திரிகள் உடனே ஒன்று கூடி அரசனுடனிருந்து ஆலோசித்தனர். அப்போது "வேந்தே!

'எரியுந் தீத்திரள் எட்டுணைத் தாயினும்
ஊரியச் சுட்டிடும் காந்திக் கனலுமேல்
தெரியிற் றெல்பகை தான்சிறி தாயினும்
விரியப் பெற்றபின் வென்றிடு கிற்குமே'

எரிகின்ற நெருப்பானது எவ்வளவு சிறியதா யிருப்பினும் அதற்கொரு ஆதரவு உண்டாகிக் கனலுமானல் பெரிய ஊரையும் சுட்டெரிக்கும். அதுபோன்று பகை அற்பமா யினும் காலமும் இடமும் கொண்டு, அது விரிந்து பெருகு மாஞல் அதை வெல்லுதல் எளிதன்று. மேலும்,

'முட்கொள் நச்சு மரமுளை யாகவே
யுட்கி நீக்கி னுகிரினுங் கொல்லலாம்
வட்கி நீண்டதற் பின்மழு வுந்தறு
கட்கு டாரமுந் தாங்களை கிற்பவோ'

முட்களோடுங் கூடிய நச்சு மரமொன்றை அது முளையா யிருக்கும்போது நகத்திற் கிள்ளி எறியலாம். பிறகு அது வளர்ந்து வயிர முற்றியபோது அதைக் கோடரி கொண்டும் தறிக்க முடியாமற்போகும். "சிறிய பகையெனினும் ஓம்புதல் தேற்றூர் பெரிதும் பிழைபா டுடையார்" என்னும் நீதியை நாம் மறக்கலாமோ? ஆகை யால் இப்பகையை அதன் இளமைக் காலத்தேயே ஒழி த்து விடல் வேண்டும்" என ஒருவர் எடுத்துக் கூறினர்.

அப்போது முதன் மந்திரியாகிய அரிமஞ்சுப் பெரி யோன் அரசனை நோக்கி, "வேந்தே! நின்கொற்றம் வாழ்வ தாக. முற்கூறிய இப்பெரியோரின் வாசக முழுவதும் போற்றற் குறியதே. சிறிய பகையாயினும் அதை வேரோடு களைய வேண்டுவது நமது கடமை. ஆயினும்

அப்போதனைத் திறைவன் நமக்குப் பகைஞ னென்பதை முதலில் அறிந்துகொண்டு பின்னர் அதற்குரியது செய்வதுதான் நல்லயோசனை யாகும்.

‘பகைய லாதவரைப் பகை யாக்கலும்
நகையில் தீமனத்தாரை நண்பெண் ணலும்
முகையின் வேய்ந்தமென் மொய்ம்மலர்க் கண்ணியாய்!
மிகையின் மற்றவை பின்னை வெதுப்புமே’

என்ற செய்யுளின் கருத்தின்படி அரும்புகளாற் றொடுக்கப்பெற்று வண்டுகள் மொய்க்கின்ற மாலையணிந்த வேந்தனே! பகைவ ரல்லாதாரைப் பகைவரென்று கொள்ளுதலும், பகைமையுள்ளாரை நண்பரெனக் கருதுதலும், பின்னர் நம்மை வெதுப்பிப் பெரியதோர் துன்பத்துள்ளாக்கும். ஆதலால் நாம் இப்போது செய்யத் தக்கது யாதெனில் சுரமை நாட்டரசன் பயாபதியினிடம் திறை வாங்கி வரும்படி தூதுவரை யனுப்புவதாகும். அவ் வேந்தன் நமது விருப்பப்படி அவர்களை வரவேற்று, திறைகொடுத்து முகமன் கூறி யனுப்புவானானால் அவனைக் குற்றமில்லாத நண்பனாகக் கொள்ளுவோம். அதுவன்றித் திறைகொடாது மறுப்பானாயின் அவனைப் பகைவனாக மதித்துப் பின் செய்வது செய்வோம்” எனக் கூறினான். வேந்தனும் இதை நன்றென மனத்திற்கொண்டு சில தூதுவரை யழைத்து, “பயாதிபதியிடம் சென்று திறை வாங்கி வாருங்கள்” எனக் கட்டளை கொடுத்தனுப்பினான்.

செவ்வரக்கு ஊட்டிய கோலினராய், அரசனது முத்திரை பொறிக்கப்பட்ட திருமுகம் பிடித்த கையினராய், நால்வர் விஞ்சையர் இரத்தின பல்லவத்தை விட்டுப் புறப்பட்டு உத்தர தக்ஷண சேடிகளையுங் கடந்து, உயர்ந்த கோபுரங்களுடன் விளங்குகின்ற மதிலையுடைய போதனமா

நகரை யடைந்தனர். அங்குக் கோட்டை வாயிலைக் கடந்து, மாட மாளிகைகள் நிறைந்த தெருக்களையும், பல பொருள்கள் நிறைந்த ஆவண வீதிகளையும், யானைக் கூடங்கள், குதிரைப் பந்திகள், தேர்நிலைகள், பதாதியரின் இருக்கைகள் முதலிய இடங்களையும் பார்த்து, விஞ்சையர் செல்வமும் ஒரு செல்வமெனப் படுமோ என நினைத்து, அரண்மனையை அடைந்தனர். அங்குக் காவல்புரிகின் றுரை நோக்கி, "விஞ்சை வேந்தன் அசுவகண்டனிட மிருந்து தூதுவர்கள் வந்து அரசனது சேவைக்குக் காத் திருக்கின்றனர்" என அரசர்க்கு உரைக்குமாறு வேண்டிக் கொண்டனர்.

வேந்தனுணையால் உள்ளே சென்ற நால்வர் தூதுவரும் அரசனைப் பணிந்து வாழ்த்தித் தங்களது இறைவனாகிய அச்சுவக்கிரீவன் விடுத்த திருமுகத்தைக் கொடுத்தனர். அருகிலிருந்த எழுத்தாளன் ஒருவன் அவ் வோலையை வாங்கிப் பிரித்து அரசனுக்கு வாசித்துக் காட்டினன். அவ் வாசகத்துக் கொப்ப அத் தூதுவரும் சில வார்த்தைகள் கூறினர். "ஆயிரங்கோடி ஆடகப்பொன்னும், பொன் வளை யல்கள் முதலிய ஆபாரணங்களணிந்து நடிக்க வல்ல நாடகக் கணிகையர் ஆயிரவரும், கடலில் முழுகி எடுக்கப்படுகின்ற உத்தமமான வெண் சங்கராசிகளும், அவைகளீன்ற நிலவு போலும் ஒளி வீசுகின்ற முத்துக் குவியல்களும், பவளத் திரள்களும், முற்றிய அகிலும், சந்தனமும், பீதாம்பரம் முதலிய ஆடைவகைகளும், பருத்த யானை மருப்புகளும், வெண்சாமரமும், அங்குள்ள மற்ற நூதன வஸ்துக்களும் நமக்குத் திறையாகக் கொடுத்தனுப்புக. இஃது எங்கள் உரையன்று. எங்கள் வேந்தனிட்ட கட்டளையாகும்" என்றனர்.

திறையின் பொருட்டு விடுத்த திருமுகத்தைக் கண்ட பயாபதி நிருபன் வேறொருவன் தன்மீது எறிந்த கல்லைப் புறத்தே நீக்காது, அதைத் தன் கதுப்பினுள் ளடக்கி வைக்கும் யானையைப் போன்று, அவ்விஷயத்தைத் தன் மனதிலடக்கிக்கொண்டு, பின் வருமாறு ஆலோசிக்கலானான். "கல்வியும் அறிவும் குணமும் கீர்த்தியும் அழகும் ஒருவர்க்கு அமைந்து ஒருவராலும் பழிக்கப்படாத மேம்பாடுடையராயினும், அவர் வேறொருவன் சொற் கேட்டும், அவன் ஏவியது செய்தும், ஜீவிப்பதற்கு விதி அமைத்துள்ளது. அதுவுமன்றித் தனது புத்தி நுட்பத்தினால் அரிய செய்கைகளைச் செய்து, சேகரித்த பொருளைத் தானினி அனுபவிக்கலா மென்றிருக்கும்போழ்தில் அப்பொருளைப் பறித்து வேறொருவன் கரத்தில் சேர்க்கும் விதியினை யாரால் வெல்லமுடியும்? தன்னினும் மேம்பட்ட ஒருவனைச் சந்தோஷப்படுத்தி அவனது தயவினால் உயிர் வாழ விரும்புகின்றோம். இதை யுணர்ந்தும் நம்மால் செய்யத் தக்கதொன்றுமில்லை. முற்பிறப்பிற் செய்த தீவினைப்பயன் இவ்வாறு நேருமானால் அதன் பொருட்டு நாம் கவலைப் படுவதினால் யாது பயன்? மேலும் நமது முன்னோர்கள் இவ்விஞ்சை வேந்தனுக்கு இறைப்பணம் கொடுத்து வந்தனர் என்பதையும் நாம் கேட்டிருக்கின்றோம்."

சிறிதுநேர மிவ்வாறு சிந்தித்திருந்து, அரசன் தன் முன்னிற்கும் தூதுவரை நோக்கி, "நிருபத்திற் கண்ட பொருள்களைத் திறையாகத் தருவோம். பெற்றுக்கொண்டு அவைகளையும் எமது வாயாற் கூறும் நன்மொழிகளையும் உங்களரசனிடம் சேர்ப்பீராக" என்று சொன்னான். மேலும் தான் திறை கொடுத்தனுப்புவதைக் குமாரர்கள் அறிவாராயின், அவர்கள் மிகவும் கனன்று அவ்வாறு செய்

வதைத் தடைப்படுத்தித் தூதுவரை வெறுங்கையுட னோட்டி விடுவர். ஆகையால் மக்கள் அறிவதன்முன் இவர் களை அதிசீக்கிரத்தி லனுப்பக்கருதி, அசுவகண்டன் விரும் பிய பொருளனைத்தும் சேகரித்துக் கொடுத்து, தூதுவர் களை விரைவிற் போம்படி பணித்திட்டான். அவர்கள் தாம் பெற்ற பொருள்களையும் கணிகையர்களையும் விமானங்களி லேற்றித் திரைச்சிலையால் மறைக்கும்போது, தற்செய லாய் அங்கு வந்த விஜய திவிட்டகுமாரர்கள் இதனைக் கண்ணுற்றார்கள். திவிட்டன் விஷயம் அறியாமல் அருகு நின்றாரை நோக்கி இவர்கள் யாவர்? எங்குச் செல்கின்றார் கள்? இவர்களுக்கு இப்பொருள்கள் ஏது? எனக்கேட்க, அங்குள்ளார் அரசனது அச்சத்தால் பதில்சொல்லாதிருந் தனர். அப்போது அங்கிருந்த பூதம்போன்று பருத்த குற மகள் ஒருத்தி, "ஐயா! விஞ்சையர்க்கிறைவனான அசுவ கண்டன் என்பவன் திறை வாங்கி வரவேண்டுமென்று சில தூதுவரை யனுப்ப, அவர்கள் வந்து நம்மரசரைக் கண்டு திருமுகங் கொடுத்துக் கேட்க, நமது அரசன் அவை யாவையும் கொடுத்தருளினர். இத்தூதர் அவைகளைப் பெற்றுச் செல்லுகின்றனர். இதுவே இங்கு நடந்த செய்கை" என்று மிக்க வணக்கத்துடன் பதிலுரைத் தாள்.

திறைக்கடன் என்னும் அத்தீச் சொற்களைக்கேட்ட லும், திவிட்ட குமாரனுக்கு அடங்காக் கோபமுண்டா யிற்று. நெற்றியில் குறுவேர்வை பனிப்ப, கண்கள் சிவப்ப, உதடு துடிக்க, படத்தில் கல் எறியப்பட்ட நாகத்தைப் போலச் சீறி, அத்தூதருடன் பின் வருமாறு கூறினன். "உலகத்தில் ஓரரசனை வழிபட்டு, அவனது பூமியை யுழுது ஜீவிக்கும் ஓர் ஏழைக் குடியைப்போன்று, யாமும்

வேற்றரசன் ஒருவனுக் காட்பட்டு, அவனுக்குத் திறை யீந்து வாழ்வோமானல் அவ்வரச வாழ்க்கை மிக்க அழகி யதே யாகும். மூடர்காள்! நாங்கள் எந்நாளும் உங்கள் வேந்தனுக்குத் திறைகொடுத்து அதனல் உயிர் வாழ்வோம். இல்லையெனில் நல்வாழ்வின்றி யொழிவோம் என்று நினைத் திருப்போமானல், எங்கள் புயவலிமையாலும், கையிற் பிடித்த வாள் வலிமையாலும் யாது பயன் பெறவிருக்கின் ரேம்? உமதரசன் கொடிய விஷத்தோடுங் கூடிய அரவின் படத்துச்சியில் விளங்குகின்ற இரத்தினத்தைக் கைக் கொள்ள ஆசைப்படும் பேதையைப் போன்றவன். இனி இவ்வாறு செருக்கினலும், அதிகாரத்தினலும் பொருள் பெறுவது முடியாது. உமதரசன் சாதுவான எங்கள் முன் னேரிடமிருந்து திறை வாங்கியதுபோல எம்மையும் அச் சுறுத்திக் கப்பம் கொள்ளும் எண்ணத்தை யொழித்து விட்டு, இன்று முதல் உயிர் பிழைக்கும் வழியைத் தேடி வாழக்கடவன். இல்லையாயின், உமது அரசன் தன் குன்றை விட்டு நேரில் இங்கு வருவானயின் அவன் விரும்பிய அளவு கூர்மையான பாணங்களினல் அவனை நன்கு உப சரித்து, வீரர்களுக்குரிய சொர்க்கத்தையும் அளித்திடு வோம். மேலும், ஒருவனில்லா விடத்து அவனைத் தூஷித் தல் கூடாதாகையால் இத்துடன் நிறுத்தினேன். ஆகை யால் நீங்கள் உங்கள் அரசன்பாற் சென்று அவர்கள் இனிக் கப்பந் தரார்களென்றும், அவ்வாறு மறுப்பார்க் குரிய தண்டம் விதித்துப் பெறும் வழியைத் தேடும்படி வேண்டிக் கொண்டார்களென்றும் சொல்லுங்கள். நீங்கள் பெற்ற பொருள்களை யெல்லாம் இங்கேயே வைத்துவிட்டுச் சீக்கிரம் செல்லுங்கள். நீங்கள் தூதுவராகையால் பிழைத் தீர்கள். விரைவிலே வந்த வழி பார்த்துச் செல்லுங்கள், செல்லுங்கள்" என்று அவர்கள் அஞ்சும்படி ஆக்கினை

செய்தான். அவர்களும் பயந்து, திறைப்பொருள் யாவற்றையு மங்கு விட்டிட்டு, இதனல் நம்மரசர்க்குப் பகை முதிர்ந்தது என எண்ணிக்கொண்டு, வெருங்கையராய்த் தம்மூர் நோக்கிச் சென்றனர்.

போதனமா நகரத்தினின்றும் திரும்பிச் சென்ற அத்தூதர்கள் இரத்தினபல்லவத்தை யடைந்து, அச்சுவகண்டனிடம் நடந்தவற்றைக் கூறப் பயந்து, சமயங்களுக் கேற்றவாறு சூழ்ச்சி செய்யவல்ல அறிவிற் பெரிய அரிமஞ்சுவினிடம் சென்று வணங்கி, நடந்தவை யாவும் சொன்னார்கள். அதுகேட்டு அம்மந்திரி, "இதனை நமது வேந்தனறியின் பெரும் பகையாகக் கொண்டு விபரீதம் விளைத்திடுவன். ஆகையால் அவன் அறியுமுன்பே அதை யொழிப்பதற்கோர் உபாயம் தேடல் வேண்டும்" என ஆலோசித்தான். "திவிட்ட குமாரன் மிக்க சிறு பிள்ளை யாகையால் 'இளங் கன்று பயமறியாது' என்பதுபோல இது நன்மை, இது தீமை என்னும் யோசனையின்றிச் சொல்லி யனுப்பினன். அதன்பொருட்டு அவனுக்குத் தண்டனை விதிக்க ஓர் உபாயம் செய்து, அவனை மலைக்குகையிலிருக்கும் சிங்கத்தினிடம் அகப்பட்டு உயிர்மாளும்படி செய்வேன்" என முடிவு நினைந்தான். அதற்கேற்ப அரிகேதுவென்னும் வித்தியாதரனை யழைத்து, நடந்தவற்றை யுரைத்து, ஒரு மாயச் சீய வடிவம் கொள்ளும்படி செய்து, பின் அவன் செய்ய வேண்டுவனவற்றைக் கூறி யனுப்பி வைத்தான்.

அவ்வித்யாதரனும் சுடர்விட் டெரிகின்ற அக்கினிக் கொழுந்தை ஒழுங்கு படுத்திவிட்டது போன்ற பிடரி மயிரும், மலையையும் வகிர்ந்து பிளக்கக்கூடிய வலிய நகங்களும், இளம் பிறைபோலும் இரண்டு கோரைப் பற்களும்,

கனலுமிழுங் கண்களும், இடிமுழக்கம்போலக் கர்ச்சிக்கும் பகுத்த வாயினையும் உடையதாய், பயங்கர சொரூபத்துடன் ஒரு கோளரியாகத் தோன்றி, பூமியையடைந்து சுதர்மை நாட்டிற் புகுந்தான். அக்கோளரி அங்குள்ள மலைச்சாரலை யடைந்து காடுகளில் உலாவி, களிற்றொடு பிடிகளும் மற்ற மிருகங்களும் பயந்து நடுங்கும்படி கர்ஜித்தது. என்றுங் கேட்டிராத அப்பேரொலி செவிகளிற் புகுந்த மாத்திரத்தில் அங்கு வசிக்கும் மனிதர்கள் மிகவும் பயந்து, உடல் நடுக்கமுற்று ஒன்றுந் தோன்றாதவர்களாய்ச் சோர்ந்து மயங்கியிருந்தனர்.

இவ்வாறு அரிகேதுவைச் சிங்கமாக்கி அனுப்பிய பின்னர், அரிமஞ்சுப் பெரியோன் முன்னம் திறையின்பொருட்டுச் சென்ற தூதுவர்களை யழைத்து, நீங்கள் அங்குச் சென்று, திவிட்ட குமாரனிடம் நாம் சீயத்தையனுப்பிய வரலாற்றைக் கூறி வாருங்கள் என அனுப்பினான். அவர்கள் ஆகாய மார்க்கமாய்ச் சென்று போதனத்தையடைந்து, அங்குச் சேனை சூழ மிக்க வைபவத்துடன் பவனி வருகின்ற இராஜகுமாரர்களைக் கண்டு வணங்கி, அவர்களில் திவிட்டனை நோக்கிக் கூறுவாராயினர். "அரசகுமாரனே! உமது தந்தை எமதரசனுக்குத் திறை செலுத்தியதையும், அதை நாங்கள் கொண்டு செல்லாத வண்ணம் நீவிர் தடுத்ததையும் எம்மரசரிடம் விண்ணப்பம் செய்தோம். அதைக் கேட்டதும் அவர் கோபத்தினாற் சிறிது நகைத்து, இச்செய்கை நன்று நன்று எனப் புகன்று, உமதூரைச் சகல குடி, படைகளுடன் நாசஞ் செய்துவிடுவதாகக் கனன்றெழுந்தார். அப்போது நாங்கள், எங்களைத் துரத்திய இராஜகுமாரன் மிகவும் சிறு பிள்ளை. ஆகையாலவன் உங்களது பெருமையையுணராது உரைத்திட்டான். மன்

னிப்பீராக, என வேண்டிக் கொண்டோம். அதைக்கேட்ட அரசன் சிறிது கோபந்தணிந்து, மிக்க பராக்கிரமத்தை யுடைய நாம் கேவலம் ஒரு சிறு பிள்ளையோடு பகைத்துப் போர்க்குச் செல்லுதல் தகுதியன்றென்றும், ஆயினும் அவனுக்கோர் புத்தி கற்பிக்க வேண்டுமெனவுங் கூறி, எம்மையழைத்து நீவிர்போய் நமக்குத் தந்த திறையினைத் தகைந்த சிறுவனைக் கண்டு, உனது நாட்டை யழிக்கும் பொருட்டு ஒரு சிங்கத்தை யனுப்பியுள்ளோம். வலிமை யுள்ளவனாயின் அம்மடங்கலை வதைத்து உயிர் வாழுமாறு சொல்லும்படி எங்களை யனுப்பினர்'' என்று கூறினார்கள்.

மேற்கூறிய சொற்கள் பழுக்கக் காய்ச்சிய இருப்பு நாராசம்போற் காதுகளில் நுழையவும், திவிட்டன் மிக்க வியப்பும் கோபமுங் கொண்டவனாய், தன்னருகிருக்கும் சிலரை நோக்கி, "இவர்கள் கூறுவதுபோல் கொடிய சிங்கம் ஏதாவதொன்று நமது நாட்டில் வந்து சுற்றித் திரிகிறதோ?'' என வினவினான். அவர்களில் ஒருவன் மிக்க வணக்கத்துடன், "ஆண்டவனே! கோளரி ஒன்று யாவர்க்குமடங்காமல் எதிர்ப்படும் மனிதர்களையும், மற்ற மிருகங்களையும் அழித்துக்கொண்டு, நமது மலைக்குகைகளில் தங்கி உலாவி வருகின்றது என்று அப்பிரதேசத்துள்ளவர்கள் நேற்று வந்து சொன்னார்கள்'' என்று கூறினான்.

திவிட்டன் அத்தூதுவர்களை நோக்கி, "இதோ ஒரு நொடியில் சென்று என் கையினால் அக்கேசரியின் வாயைப்பிளந்து கொல்கின்றேன். அவ்வாறு செய்யாமற் போவேனேயாகில் உம்மரசன் சொன்னபடி நான் ஒரு பேய்மகனாவேன்'' எனச்சொல்லி அவர்களை யனுப்பிவிட்டு, தன்னைச் சூழ்ந்து நிற்கும் சேனாவீரர்கள் ஒருவரும் தன்

னோடு வரலாகாதென்று பணித்து, மடங்கலைத் தேடிப் புறப்பட்டான். ஆயினும் திவிட்டனது முன் பிறந்தோனும், சங்கவண்ணனுமான விஜயகுமாரன் திவிட்டன் தனியே செல்வதைக் கண்டு தானுமுடன் செல்ல நினைந்து பின் சென்றான். இருவரும் தந்தை மடியிலும், பஞ்சணை மெத்தையிலும், பட்டத்து யானைத் தவிசிலும் அல்லாது வேறெங்கும் மிதித்தறியாத தமது பாதங்களில் முட் போலும் கூறிய கற்கள் உறுத்த நடந்து, பல காடுகளைக் கடந்து, அரியேறு தங்கியிருக்குங் குகையை யணுகினர். தன்னைத் தேடிவந்த இராஜகுமாரர்களைக் கண்டதும் அம் மாயக்கண்டீரவம் மலையதிரவும், நெடுந்தூரம் எதிரொலி முழங்கவும், கேட்போர் மயங்கி விழவும், அதிர்த்துக் கர்ஜித்தது. இத்தொனியைக் கேட்டதும் திவிட்டன் சிங்கமிருக்கு மிடம் தெரிந்து கொண்டான். மிக்க உற்சாகத்தோடும் அக்குகை வாயிலை யடைந்து, வீரக்கழலை வரிந்து கட்டி, அத்தகடகங்களை மேலே செலுத்தி, கரிய சிகையை இறுகப் பிணித்து, யுத்தத்துக்கு ஆயத்தமாய் நின்று, தோள்தட்டி, தானும் ஒருதரம் அதனினும் பதின்மடங்கு அதிகமாக ஆர்ப்பரித்தான்.

அவ்வொலியைக் கேட்ட மாய மடங்கல் திகிலடைந்து, தேகம் வியர்க்க, உயிர் பிழைத்தாற் போதுமென நினைந்து, குகையினின்றும் வெளிப்போந்து ஓட்டம் கொண்டது. அதைக் கண்ட திவிட்டவீரன் சிங்கத்தின் வலிமைக்கு நகைத்து, அதை விடாது பின் தொடர்ந்து சென்றான். அப் பஞ்சானன வித்யாதரன் திவிட்டன் தன்னைத் தொடர்ந்து வருவதைக் கண்டு பின்னுமதிகம் அஞ்சி, விரைந்து சென்று, உண்மையான வலிய சிங்கம் வசித்திருக்கும் மலைக் குகை ஒன்றிற் புகுந்து; தன் மாயையினால் அங்கு ஒளித்துக்

கொண்டான். திவிட்டனு மங்குச்சென்று உரத்தகுரலில், "பேதைச் சிங்கமே! இருள் நிறைந்த இக்குகையில் ஏன் போய் ஒளித்துக்கொண்டனை? இதனுட் சென்று நீ பதுங்கிக் கொண்டாலும் நான் உன்னை விடேன். இதோ ஒரு நிமிடத்தில் இக்குகையிற் புகுந்து உன்னைக் கொல்லுகிறேன்" என ஆர்ப்பரித்தான். இவனது ஆரவாரத்தாலும், மலையின் அதிர்ச்சியினாலும், குகையிலெழுந்த எதிரொலியாலும் அங்கிருந்த உண்மைச்சீயம் துயில் நீங்கியெழுந்தது. கோபத்தினால் மயிர் சிலிர்க்க, கண்கள் தீப்பொறி பறக்க, வாலினை யுயர்த்தித் தானும் ஒரு முறை கர்ஜித்தது. பின்னர் அச் சிங்கம் நிமிர்ந்து நின்று, தன்னெதிரில் நிற்கும் திவிட்டனது குருதியைக் குடிக்கும் பொருட்டு அவன் மார்பிற் பாய்ந்தது. ஆகாய வீதியில் வேடிக்கை பார்த்திருந்த தேவர்கள் இதைக் கண்டு பயந்தார்கள். திவிட்டன் ஒருசிறிது மஞ்சாமல் தன்மீது பாய்ந்து வருகின்ற சீயத்தை விளையாட்டாகப் பிடித்துக் கீழே தள்ளி, பிடரியிற்றன் காலை யூன்றி யழுத்திக்கொண்டு இரு கடையிலும் முளைத்து வளர்ந்த கோரைப் பற்களோடுங் கூடிய அதன்வாயைக் கைளாற் பிடித்து அகலப் பிளக்கவும், மிருகேந்திரன் அலகு கிழிபட்டுக் கீழே புரண்டு உயிர் துறந்தது. அமரர்கள் இவ்வரிய செயலைக் கண்டு தத்தம் நாசியின்மேல் விரல் வைத்து அதிசயித்தனர்.

திவிட்ட வீரன் சீயத்தை வதைத்த பின்னர்த் தன் தமயனை யணுகி, "எந்தாய்! நமது நாட்டிற் புகுந்து இடரிழைத்து வந்த கண்டீரவத்தை வாய் பிளந்து கொன்றிட்டேன். இனி நாம் போதனமா நகரம் செல்வோம், வருவீர்" எனப் பணிந்தான். விஜயகுமாரன் தன் தம்பியின் பேராற்றலைக் கண்டு வியந்து மகிழ்ந்து, அவனை யழைத்துக்கொண்டு

அங்குள்ள மலைவளங்கள் பலவுங் கண்டு, மனங்களிகொண்டு போதனமா நகரை நோக்கிப் புறப்பட்டான். வரும் வழியில் விஜயகுமாரன் திவிட்டனை நோக்கி, "ஜனங்களுக்கும் மற்றப் பிராணிகட்கும் துன்பம் விளைத்து வந்த இக்கொடிய மடங்கலைக் கொன்றொழித்து அதனால் இவ் வுலகிற்குப் பெரியதோருதவியைச் செய்தனை. தேவர்களாலேயும் இத்தகைய அதி வீரச்செயலைச் செய்ய முடியுமோ? நீ மலைமுழையின் எதிரிலிருந்து ஆரவாரித்தபோது, அங்கு இத்தகைய பெரிய சிங்கம் இருக்கின்றதோ எனச் சந்தேகித்தேன். பின்னர் அச்சியம் நின்றுற் கிழிபட்டு, அதின் உதிரவெள்ளம் பெருகி யோடியதைக் கண்டு, அத னுண்மையை யறிந்து மிக்க வியப்படைந்தேன். இனி இவ்வுலகத்தார் யாதொரு கவலையுமின்றி இனிது வாழ்வார்கள். உலகத்தில் வாழு முயிர்களுக்குத் துன்பம் உண்டாமாயின் அதைக் களைவது நம் போன்ற அரச குமாரர்களின் கடமையாகும். அச்செய்கையைக் காட்டிலும் அறம் பிறிதொன்றுமில்லை. மேலும்,

'கற்றவர் கடவுட்டானஞ் சேர்ந்தவர் களைக ணில்லார்
அற்றவ ரந்தணாளர் அன்றியு மனைய ரோர்க்
குற்றதோ ரிடுக்கண் வந்தால் உதவுதற் குரித்தன்றாயிற்
பெற்றவிவ் வுடம்புதன்னாற் பெறு பயனில்லை மன்னே

ஒருவன திரண்டியாக்கை யூன்பயி னரம்பின் யாத்த
உருவமும் புகழு மென்றாங் கவற்றினூழ் காத்துவந்த
மருவிய வுருவ மிங்கே மறைந்துபோ மற்றயாக்கை
திருவமர்ந் துலகமேத்தச் சிறந்து பின்னிற்கு மன்றே'

என்ற செய்யுட்களின்படி கற்றறிவுடையோர், பக்தியிற் சிறந்த பெரியோர், ஆதரவற்றவர்கள், துறவியர், பிராமணர் இன்னு மிவர் போன்றவர்க்கும் இடுக்கண் வருமிடத்து, அவைகளைப் போக்குவதற்கு இவ்வுடம்பு உபயோகமில்லா

மற்போமாயின், இதனுல் நாம் அடையும் பயன் வேறென்று மில்லை. ஒருவனுக்கு மாமிசத்தாலாகிய யாக்கை, புகழி னுலாகிய யாக்கை என இரண்டு உடல்களிருக்கின்றன. அவைகளில் புலால் யாக்கை அழிந்துபோகும். மற்றயதாகிய கீர்த்தியா லுண்டான யாக்கை உலகத்தார் போற்றும்படி என்று மழியாது சிறந்து நிற்பதாகும். மேலும் மானிடர் படும் வருத்தங் கண்டும் அதை யொழிக்காது தன் வாழ் வையே பெரிதாக ஒருவன் கருதுவானுனல் அவன் பெற்ற ஆண்மையானது அலி பெற்ற அழகைப் போன்றதாகும். என துயிரைக் கொடுத்தாயினும் மன்னுயிரின் துன்பங் களை யொழித்திடுவேன் எனக்கூறி, அவ்வாறே செய்கின்ற நின்னைப் போலும் உத்தமர் இவ்வுலகி லிருக்கின்றனரோ?'' எனப் பெருமை தோன்றச் சில வார்த்தைகளைப் பேசிக் கொண்டே அஸ்தமன சமயத்தில் தன் நகரை வந்தடைந் தனர்.

அப்போது மந்திரியர், சேனைத் தலைவர் முதலியோர் மங்கள வாத்தியங்களுடன் இராஜகுமாரர்களை எதிர் கொண்டுபசரித்து, அவர்களை நகர் வலம்வரச் செய்து, அரண்மனையிற் சேர்த்தனர். அங்கு விஜய திவிட்டர் தந்தை யைக்கண்டு, தாங்க ளிருவரும் அரசனது ஆணையின்றிச் சென்றமை பொருட்டுத் தங்கள்மீது யாது குற்றம் விளை யுமோ எனச் சிறிது அச்சத்தோடு பணிந்து நின்றனர். அர சன் இருமக்களையும் வாரி யெடுத்து மார்புறத் தழுவி ஆசி கூறி, அவர்கள் சிகையில் தூசு படிந்திருப்பதைக் கண்டு, ''செல்வர்களே! நறுமலர் சூடுகின்ற உங்களது குடுமியில் இன்று வனத்துகள் செறிந்திருப்பதென்ன?'' எனக்கேட் டான். அதற்கு விஜயகுமாரன் தந்தையைப் பணிந்து, ''ஐயனே! நமது நாட்டின் காட்டகத்தில் ஒரு வலிய கண்டீ

வரம் தோன்றிப் பாழாக்கியது. அதன் வரவை அசுவ கண்டனது தூதுவர்களா லறிந்து, நமது திவிட்டன் அங்குச்சென்று அச்சியத்துடன் போரிட்டு, அதன் வாயைப் பிளந்து கொன்ருன். அவனுடன் யானும் சென்றிருந்தேன். யாங்கள் அங்குச் சென்று வந்தமையால் சிகையில் வனத்துகள் படிந்தன" என மொழிந்தான். தன் மக்களின் வீரச் செயலைக் கேட்டு, வேந்தன் தேவாமுதம் உண்டவனைப் போலச் சந்தோஷித்து, இரு குமாரர்களுக்கும் விடை கொடுத்து, அவரது மாளிகைக் கனுப்பினன்.

---

6. கலியாணச் சருக்கம்

இரத நூபுர மன்னனு லனுப்பப்பட்ட தூதன் திரும்பி வந்து, திவிட்ட குமாரன் சிங்கத்தைப் பிளந்து கொன்ற செய்தியை அறிவித்தான். அரசன் அதைக்கேட்டு மிக்க களிப்படைந்து, தனது புதல்வியாகிய சுயம்பிரபையை அத்திவிட்ட குமாரனுக்கே மணம் செய்துகொடுப்பேன் என்று தீர்மானித்து, அதற்காக வேண்டுவனவற்றைத் தன்சுற்றத்தாரோடும் ஆலோசிக்கத் தொடங்கினன். பிறகு அவ்விவாகத்தை நிறைவேற்றும் பொருட்டுப் பூலோகம் செல்ல நினைந்து, வருத்தமான புரத்து மன்னன் பிரீதிவர்த்தனன் முதலிய அரசர் எண்மரையு மழைத்து, நான் போதனமாநகரம் சென்று வருமளவும், இந்நகரைக் காவல் செய்திருமென்று நிறுத்தி விட்டுப் பூலோகம் செல்ல ஆயத்தமாயினன். வேந்தனது புதல்வனுகிய அருக்க கீர்த்தியும் தன் சேனையோடு புறப்பட்டனன்.

அப்போது தன் மகள் சுயம்பிரபை ஊர்ந்து வருவதற்காகப் பொன்னுலும், நவமணிகளாலும் அலங்கரிக்கப்பட்ட ஒரு திவ்ய விமானத்தை நிர்மித்து, சுயம்பிர

பையை அங்கு அழைத்து வரும்படி ஏவலாளரை யனுப்பினன். ஏவலாளரும் விரைந்து சென்று, கன்னிமாடத்தைக் காவல் செய்யும் சேடியர்க்கறிவிக்க, அவர்கள் சென்று அரசன் கட்டளையைச் சுயம்பிரபைக்கு அறிவித்தனர். இராஜகுமாரியும் உடனே தானிருந்த பஞ்சணையினின்று மிறங்கித் தாதியர் பலர் தன்னைச் சூழ்ந்துவரக் கன்னிமாடத்தின் பல வாயில்களையுங் கடந்து, தன் தாயாகிய வாயுவேகை வசிக்கும் அந்தப்புரஞ் சென்று, அன்னையைப் பணிந்தனள். வாயுவேகை புதல்வியை வாரியெடுத்து மார்புறத் தழுவி இனிய பல வசனங்களைப் புகன்று, அவள் வந்த காரிய முணர்ந்து, கன்னிகையைப் பல ஆடையணிகளா லலங்கரித்து வைத்தனள். புறப்படுதற்குரிய சுபமுகூர்த்தம் வந்தமையை நிமித்திகனுரைக்க, உடனே அரசன் சுயம்பிரபையை அங்கு அழைத்துவரச் செய்து, விமானத்தில் ஏறி யமரும்படி கூறினன். அப்போது சுயம்பிரபையும் தந்தை யடிகளைப் பணிந்து, தன் தோழியரும், வாளைக் கையிற் கொண்ட காவற் பெண்டிர் பலரும் தன்னைச் சூழ்ந்துவர, மங்களவாத்தியம் முழங்க, அச் சிவிகையில் ஏறியிருந்தனள். பரிசாரகப் பெண்கள், அரசகுமாரி விளையாடுகின்ற கழங்கு, பந்து முதலியவைகள், கிளி நாகணவாய் முதலிய இன்னிசைப் பறவைகள், பூந்தட்டு, அணிகலச் செப்பு, பட்டாடைப் பெட்டகம், சந்தனக் கும்பம், மைப் பொற் சிமிழ், கண்ணாடி முதலிய வஸ்துக்களைக் கொண்டு வந்து விமானத்தில் வைத்தனர். விஞ்சை வேந்தனாகிய சுவலனசடி சேனை சூழ வாத்தியம் முழங்க, அரச யானையின் மீது அமர்ந்து புறப்பட்டான்.

இவ்வாறு அனைவரும் தங்கள் தங்கள் வாகனங்களில் அமர்ந்து அரசனைச்சூழ்ந்து பூமியை நோக்கி வந்தனர். அவ்

வேளையில் சுயம்பிரபையின் தோழியாகிய அமிர்தபிரபை என்பவள் செல்லும் மார்க்கத்திலுள்ள அதிசயங்களைக் காட்டிச் சொல்லத் தொடங்கினள்.

"அன்னாய்! அங்கே தெரிகின்ற நதியானது நமது மலைக்கு மேலுள்ள தமனிய கிரியினின்றும் உற்பத்தியாகி மிக்க வெள்ளத்தோடும் பெருகி வருகின்ற புண்ணிய நதியாகிய கங்கையாகும். அதன் கரை இருபுறமும் கற்பகச் சோலைக ளிருப்பதைக் காண்பாய். நாம் ஆகாயத்தில் வெகு உயரத்தில் செல்லுவதால் அக்கங்கை நமது கண்களுக்கு மிகச் சிறியதாய்த் தோற்றுகிறது. அருகில் போவார்க்கு மிக்க பரப்பை யுடையதாய், ஆழ்ந்தமைந்து செல்வது மிக்க வியப்பை யளிக்கும். அம்மலையிடத்தே பிறந்து, அகிலும் சந்தனமும் பெயர்த்து தம்முடன் அலைத்துச் சென்று குடகடல் புகும் சிந்துநதி அங்குத் தெரிகின்றதைப் பார்ப்பாயாக. பாவாய்! நமது சேனையானது முகிற் கூட்டங்களிடையே செல்லுவதால் அம்மேகங்கள் குமுற, அதினால் கன்றுகளைக் காவல் புரிந்திருக்கும் களிறுகள் கோபித்துப் பிளிறுவதைக் கேட்பாயாக. நம் சேனைகள் செய்யும் ஆரவாரத்தைக் கேட்டுப் பொறுதவைகளாய் அவைகள் மலைத் தடக்களைத் தமது வலிய கோட்டினால் முட்டிப் பெயர்த்து வீழ்த்துவதைப் பார்க்கக்கடவாய். மான்கள் தம்மினத்தோடு அமைதியாய் மேய்ந்து கொண்டிருப்பதை விட்டுச் சேனைகளின் ஆரவாரத்தினால் தலைகளைத் தூக்கிப்பார்த்து, அவ்விடத்தை விட்டு ஓடுவதற்கு எத்தனிப்பதைக் காணுவாய். புதர்களின் நிழலில் துயில்கின்ற புலியானது இச் சப்தத்தினால் விழித்துக் கொண்டு, கோபத்துடன் உருமுகின்ற தொனியைக் கேட்பாயாக. சிறிய கண்களும், பரந்த காதுகளும், நீண்ட தந்தங்களுமுடைய யானைப் பகடுகள்

தம் பிடிகளோடு மலையருவிகளிலே யிறங்கி, நீரை வாரி இறைத்துக்கொண்டு விளையாடுவதைப் பாருங்கள்'' என இவ்வாறு அமிர்தபிரபை வழியிலுள்ள பல விநோதங்களைக் காட்டி இனிமையாகப் பொழுது போக்கினள்.

சில நாளில் சடியரசனும் அவனது சுற்றத்தாரும் மற்று அரச வர்க்கத்தினரும் பல நாடுகளையுங் காடுகளையுங்கடந்து சுரமைநாடடைந்து, போதனமாநகரைச் சேர்ந்தனர். அங்கு இடமகன்ற திருநிலையகம் என்னுஞ் சோலையிலிறங்கி யானை, தேர், குதிரை, காலாட்படை முதலியவைகட்குத் தக்க இடங்களை யமைத்து, தாம் உறைவதற்கு வசதியான பல சாலைகளையும், அரசன் தங்குவதற்கோர் வட்ட மண்டபமும் நிர்மித்து, சுயம்பிரபை இருப்பதற்கோர் அழகிய கன்னி மாடமும் அமைத்தனர். அரசனும் மற்றையோரும் அவரவர்களுக்குரிய விடுதிகளிற் போயிருந்தனர். இராஜ கன்னிகையும் அரசனனுமதிப்படி அம்மாடத்திற் புகுந்து ஆங்கோர் பொற் கட்டிலில் வீற்றிருந்தனள்.

ஈங்கிவர்கள் இவ்வாறிருப்ப, முன்னர் மணத்தின் பொருட்டுத் தூதாக இந்நகருக்கு வந்த மரீசிப் பெரியோன் பயாபதியின் கொலு மண்டபத்தை யடைந்து கொற்றவனை வணங்கி வாழ்த்தி, சடியரசனது வருகையைத் தெரிவித்தனன். அதைக் கேட்ட பயாபதி வேந்தன் மிக்க வியப்பும் சந்தோஷமுங் கொண்டு, அருகில் நின்றோரையேவி நகரை யலங்கரிக்கச் செய்து, வேற்றரசர்களை யழைத்தற்கு ஒற்றர்களை விடுத்து, திருநிலையகம் சென்று சடியரசனை வரவேற்பதற்கு ஏற்றவாறு சேனைகளை ஒழுங்குபடுத்தக் கட்டளை யிட்டனன். பின்னர் திருநிலை யகத்திருக்கும் இராஜ குமாரியைக்கண்டு உபசரித்து, நகருக்கு அழைத்து வருவதற்குரிய அந்தப்புர மகளிர் அலங்கரித்துக் கொள்ளு

மாறு செய்தி யனுப்பினான். பின்னர் வேந்தன் மரீசியுடன் மாளிகை புக்கு, அவனுக்குயரிய ஆடை யணிகளீந்து, சிறப்புச் செய்தனன். மந்திரிகளை நோக்கி, "விஞ்சையர் கோமானுக்கு, நானியற்றுதற்குரிய மரியாதைகள் யாவை" எனக் கேட்டான். அமைச்சர்கள், "வேந்தே! குணத்தினாலும் குலத்தினாலும் மற்ற நலத்தினாலும் அவர் உம்மோடு ஒரு தன்மை வாய்ந்தவர். வலிமையிலும் பெரியர். ஆகையால் அவர்பால் யாது சிறப்புச் செய்யினும் தவறு ஒன்று மில்லை. உமது திருவுள்ளம் போறச் செய்திடுக" என உரைத்திட்டனர். மந்திரிகள் கூறியவை கேட்டு, மன்னன் மன மகிழ்ந்து, "வித்யாதர வேந்தன் தம் புதல்விக்கு மணம் செய்வான் வேண்டி இங்கு வந்தமையாலும், அறிவிற் சிறந்த உங்களை யான் மந்திரிகளாகப் பெற்றிருத்தலாலும், என்னைப் போன்ற பாக்கியவான்கள் இவ்வுலகில் யாருளர்?" எனச் சொல்லி மகிழ்ந்தான்.

பின்னர் அரசனிட்ட கட்டளையால் பாகர்கள் யானைகளைக் கால் கயிறு நீக்கிக் கட்டுத்தறிகளினின்றும் அகற்றி, வரிபுரிக்கச்சை வீக்கி, தவிசிட்டு, இருபுறமும் மணி மாலைகள் தூக்கி, முகபடாம் போர்த்து, அலங்கரித்துக்கொண்டு வந்தனர். தேர் வலாளர்கள் சட்டப்பலகைகள் கோத்து, புடைப்புப் பொருத்தி, பரந்த தட்டுக்களை அணிபெற வமைத்து, கொடிஞ்சியில் பலவிதக் கொடிகள் காற்றிலசையும்படி தேர்களைக் கொண்டுவந்தனர். குதிரைச் சேவகர்கள் செம்பொன்னாற் செய்த முகனணி சேர்த்து, மாலை யணிந்து, மணிக்கோவை புனைந்து, கவரி பிணைத்துக் காற்றினுங் கடிய வேகப்பரிகளைக் கொண்டுவந்து நிறுத்தினர். பதாதி வீரரும் காலிற் கழலை வீக்கி, கச்சையை அரைக்கிசைத்து, வாளைக் கையிற் கொண்டு அங்கு வந்து சூழ்வா

ராயினர். இவ்வாறு நால்வகைச் சேனைகளும் வந்து குழுமி ஆரவாரித்தன. தான் புறப்படுவதற்கு முன் பயாபதி மன்னன் தனது பரிவாரத்தலைவனை யழைத்துச் சோலையில் வித்யாதர வேந்தன் தங்கியிருக்கும் பாடி வீட்டிற்கு வேண்டுவனவாகிய உணவுப் பொருள்கள், கனிவர்க்கம், வாசனைத் திரவியம், மலர் மாலைகள் முதலியவற்றை உபசாரத்தின் பொருட்டு அங்குக் கொண்டு செல்லப் பணித்திட்டான்.

பயாபதி வேந்தன் மந்திரிகளுடன் மரீசியையும் வருகென வழைத்து யானைமீதேற்றிப் பின்னர் புதல்வர்களிருவரையும் ஒரு யானையின்மீது தன்னுடன் வரும்படி பணித்துத் தானும்தனது பட்டத்து யானைமீது ஏறி வெண்கொற்றக்குடை நிழலிலமர்ந்து, நகர் வீதிவழிச் சென்றான். இவ்வாறு மிக்க ஆடம்பரத்தோடு அரசன் வரு[illegible] பரசன் கிளை [illegible] தெரிந்து [illegible] பயாபதி வேந்தனை யெதிர் கொள்ளும் பொருட்டுத் தன் சேனைகளோடு [illegible] படைத்திரளும் கங்கையும் யமுனையும் கலக்க வருவதுபோல வந்து நெருங்க, மண்ணரசன் பயாபதியும் விண்ணரசன் சுவலன சடியும் ஒருவரை யொருவர் கண்டனர். உடனே இருவேந்தரும் யானைகளை விட்டிறங்கி யருகிற் சென்று, பயாபதியரசன் வணங்கும் பொருட்டுக் கைகூப்பு முன்னமே விண்ணுலக வேந்தன் அவனதுகரங்களைப்பற்றித் தழுவிக் கொண்டான். அரசிளங் குமரர்களாகிய விஜய திவிட்டர்கள் வித்யாதர வேந்தனை வணங்கினர். உடனே அரசன் அவர்களை மார் புறத்தழுவி, ஆசி கூறினன். அவ்வேளையில் விஞ்சையர் கோமான் மகன் அருக்க கீர்த்தி பயாபதியின் பாதங்களை வணங்கினான். பயாபதி அவனைத் தழுவித் தன் யானையின் மீது ஏற்றிக்கொண்டனன். இவ்வாறிருதிறத்தாரும் பெரி

யோர் சிறியோர் முறைப்படி வணங்கி, குசலப் பிரசனம் பல வினவி, யாவரும் இரதநூபுர மன்னனிறங்கியிருக்கும் திருநிலையகத்தை யடைந்து, அவர்கள் பொருட்டு அலங் கரித்த புது மண்டபத்தை யடைந்தனர். அங்கு அரச னாணையால் வந்திருந்த நாடக மகளிரது ஆடல் பாடல்களைக் கேட்டுச் சந்தோஷித்திருந்தனர்.

சிறிது நேரம் இவ்வாறு பொழுது போக்கிய பின்னர், பயாபதி வேந்தன் சடியரசனை நோக்கி, "பெரியோய்! தங் கட்கு ஒரு சிறிதும் ஒவ்வாத அடியேனை ஒரு பொருளாக மதித்து ஈங்கெழுந்தருளியது நான் செய்த தவமன்று. இந்நகர் செய்த தவமன்று. மற்றை என் முன்னோர் செய்த தவமாகும்" எனக் கூறினன். அதற்கு விஞ்சையர் [illegible]வேந்தே! விண்ணுலகத்தா ராயினும் அவர்கள் மண்ணுல[illegible]ய தீர்த்தங்களையே பெரிதாக மதித்து, அதில்நீராட விரும்புகின்றனர். மேலும் யானிங்கு வருவதற்கு முன்னம மரீசியால் உமது பெருமை முழுதுங் கேட்டிருக்கின்றேன். புராணங்களை நன்குணர்ந்த பெரியோர் எனது புதல்வி சுயம்பிரபை உமதிளைய குமாரன் திவிட்டனுக்கே உரியவளென உறுதி மொழிந்தாராகலின், அக் கன்னியை உமதிளைய காளைக்கே மணம் செய்து கொடுக்க நிச்சயித்து இங்குவந்துள்ளேன்" எனக் கூறினன். பயாபதி மிக்க களிப்புடன், "உங்கள் விருப்பத்துக்குத் தடை செய்வாரும் உண்டோ?" என்றுரைத்து, இரு வேந் தரும் மனக்களிப்புடன் சிறிது உரையாடி யிருந்தனர். அவ் வேளையில் மலையரசன் தன் புதல்வனாகிய அருக்க கீர்த்தி விஜய திவிட்டர்களுடன் நகரம் செல்லுமாறு அநுமதி யளித்தனன். அவ்வாறே அம்மூவரும் மலைபோலு முயர்ந்த களிற்று யானைகளின்மீது ஏறி, நகர் நோக்கிப்புறப்பட்டனர்.

அப்போது அமிர்தபிரபை என்னும் உயிர்த் தோழி சுயம்பிரபையை யழைத்து வந்து, விமானத்தின் கவாடந் திறந்து, நகர்வளங் காட்டுவதுபோல அங்கு யானைமீதேறிச் செல்கின்ற அரசிளங் குமரர் மூவரையும் காட்டினள். சுயம்பிரபை அம்மூவரில் ஒருவன் தன் தமயன் அருக்க கீர்த்தி யென்ப துணர்ந்து, மற்றவர் யாவரென வினவினள். அவ்விருவரும் இவ்வூர்ப் பயாபதி வேந்தன் குமாரர்களென்றும், அவர்களில் மூத்தவன் பெயர் விஜயனென்றும், இளையவன் பெயர் திவிட்டனென்றும் சேடி கூறினள். தலைவி அப்பெயரைக் கேட்டலும் சிறிது குறுநகை கொண்டு, முகங் கவிழ்ந்தனள். நீலமணி போன்று விளங்குகின்ற அவனது மேனியைக் கண்ணுற்றவளவிலே அவனது அதிசுந்தர வடிவிலீடுபட்டு, அவனைப் பார்த்த கண்களை மீட்டும் திருப்ப முடியாதவளாய்க் காதலினால் மனம் வருந்தினள்.

இவ்வாறு சுயம்பிரபை கன்னி மாடத்திருக்கும்போது சடியரசன் அழைத்துவரச் சொன்னானென்று பணியாளர்கள் வந்து கூறினர். சுயம்பிரபை கூந்தலையும் ஆடையணிகளையும் திருத்திக்கொண்டு, தன் மனத்திலெழுந்த காதல் பிறர்க்குத் தெரியாவண்ணம் நாணம் என்னும் திரையினால் மறைத்துக் கொண்டு, அன்னம் போலும் மெல்ல நடந்து பிதாவை யணுகி வணங்கி நின்றாள். அரசனும் அவளை யெடுத்து முத்தமிட்டு ஆசிகூறிப் பின்னர் மாமனடிகளை வணங்கும் பொருட்டுச் சுயம்பிரபையைத் தனது வலிய கரங்களினால் பற்றி அழைத்துச் சென்று, பயாபதி யரசனது பாதங்களில் விட்டனன்.

அக்கன்னியும் மிக்க பயபக்தியுடன் தனது மாமனது பாதங்களை வணங்கினாள். உடனே பயாபதி மன்னன் அக்கன்னியை எடுத்து, மிக்க அருமையுடன் தனது வலது

துடையில் வைத்துக்கொண்டு, அவளுக்குப் பல ஆசிமொழி களைக் கூறினன். பிறகு அவளது அற்புத அழகைநோக்கி வியந்து, "திருமகள் போன்ற இவளை மணம் செய்யும் பாக்கியவான் இப்பூமி முழுவதும் ஒருகுடை நிழலில் ஆளுவான் என்பதில் சிறிதும் ஐயமில்லை" என்று கூறினன். பின்னும் சடி அரசனை நோக்கி, "பெரியோய்! இப்பூவுலகில் யானே மிக்க தவத்தைச் செய்தவனானேன். அவ்வாறில்லையாயின், இலக்குமி போன்ற உமது கன்னிகையை மணம் செய்த நன் மகனைப் பெற்ற தந்தை இவன் என உலகத்தார் புகழ்ந்து கூறும் ஒரு வார்த்தையும், தெய்வச் செல்வமும், யார்க்குங் கிட்டுதற்கரிய உமது சுற்றத்தொடர்பும் எவ்வாறெய்தப் பெறுவேன்? பூவினால் நாரும் மணம்பெற்றது போல உம்மால் நானும் சிறிது மேம்பாடடைந்தேன்" எனக் கூறினன். அதற்குச் சடியரசன், "வேந்தே! வீணாக நீர் என்னைப் பெருமைப் படுத்துகின்றீர். பெருந் தவம் செய்து திவிட்டனை உத்தமப் புதல்வனாகப் பெற்ற உம்மாலன்றோ யானும் எனது புதல்வி சுயம்பிரபையும் நல் வாழ்வை யடைந்தோம். ஆகையால் பெருமை உம்மதே யன்றி எமதன்று" என இருவரசரும் இனிமையாய்ப் பல உபசார வார்த்தைகளைப் பேசியிருந்தனர். பின்னர் நேரம் செல்வது கண்டு, சடியரசன் தன் புதல்வியைக் கன்னி மாடத்திற்குச் செல்ல விடைகொடுத்தனுப்ப, சுயம்பிரபை தோழிகளோடும் சிவிகையூர்ந்து, தன் மாடம் புகுந்திருந் தனள். அது நிற்க.

அரசனது மனைவியாகிய சசிதேவியார் தனது அந்தப் புர மகளிரை நோக்கி, "நீங்கள் மங்களத் திரவியங்க ளோடும் சென்று, சுயம்பிரபையைக் கண்டுவாருங்கள்" எனப் பணித்திட்டாள். அவ்வார்த்தைகளைக் கேட்டு,

மதுகரி, வசந்த சேனை முதலிய அந்தப்புர மாதர் பலர் ஆடையணிகளால் அலங்கரித்துக் கொண்டு, மங்கலப் பொருள்களை எடுத்துச் சென்றார்கள். மாதவ சேனையை முன்னிட்டுச் சில மாதவக்குல மகளிர் மலர் மாலைகள், காதணி, முத்துமாலை முதலிய உபசார மங்கலங்களை யெடுத்துச் சென்றனர். இவ்வாறு இவர்களும் திவிட்டனது செவிலித் தாயாரும் அங்குச் சென்று முதலில் சடியரசனைக்கண்டு வணங்கிப் பின்னர் அவனது அநுமதி பெற்றுக் கன்னிமாடம் புகுந்தனர். அங்குப் பொன் மஞ்சத்தில் தாதியர் உபசரிக்க வீற்றிருக்கும் சுயம்பிரபை யைக்கண்டு வணங்கித் தங்கள் வரலாறு கூறினர். இவர்கள் தம் காதலனாகிய திவிட்ட குமாரனது பணிப்பெண்கள் என்னுமன்பினால் உண்டாகிய குறுநகை வெளியே தோன்றாதபடி ஒரு மலரை நெரித்து மோந்துகொண்டிருந்தாள். அரச கன்னியின் அழகையும் அவளது மேனியின் ஒளியையும், இயற்கையான காம்பீர்யத்தையுங் கண்டு, வந்த பணிமகளிர் சிறிது நேரம் பிரமித்து நின்றனர். அவர்களில் சித்திரம் வரைவதில் வல்லவளாகிய மாதவ சேனை யென்பவள் அங்குள்ள பளிங்குக் கண்ணாடியில் சுயம்பிரபையின் உருவம் பிரதிபலிக்கக் கண்டு, அதைத் தன் மனத்துள் நன்றாய்ப் பதிய வைத்துக்கொண்டு, பிறகு அதைச் சாவதானமாய் ஒரு பளிங்குப் பலகையிற் சித்தி ரித்துக் கொண்டனள்.

மதுகரி முதலியோர் தாம் கொண்டுவந்த மங்கலப் பொருள்களை யெல்லாம் அரசகுமாரியினிடம் சேர்த்துப் பின் அவளை நோக்கி, "இன்சொற்பாவாய்! எமது அரசியாகிய உமது மாமியார் எங்கண்களைத் தங்கண்களாகப் பாவித்து உம்மைக்கண்டு, இனிய மொழிகள் பல கூறி

வாருங்கள் என அருளிச் செய்தனர். ஆதலால் அவர் களுக்கு நாங்கள் திரும்பிச் சென்று கூறும் வாசகம் அருளிச் செய்யுங்கள்" எனச் சொன்னுர்கள். மேலும் நாங்கள் அரசியின் அந்தப்புரச் சேடியர்களாகையால் எங்கள் முன்பு நீங்கள் யாது சொல்லினும் அதனுல் ஏதும் குற்றமுண்டாகாது என்றும் தெரிவித்துக் கொண்டனர். அதற்குச் சுயம்பிரபை மறுமொழி யொன்றுங் கூருது குறுநகை செய்து, தன் தோழி அமிர்தபிரபையை நோக்கினள். அக்குறிப்பினே யுணர்ந்த அமிர்தபிரபை அரண்மனைத் தோழியரை நோக்கி, "நீங்கள் உம்முடலே நம்முடலாகப் பாவித்து, மாமியார் திருவடிகளே நாங்கள் நிலம்படிய வணங்கியதாக வணங்குங்கள்" என்றுரைத்தாள். அதைக் கேட்டு மதுகரி முதலியோர், "யாங்கள் அவ்வாறே சென்று வணங்கி, உங்களது தேவாமுதம் போன்ற இனிய மொழிகளாகிய சர்க்கரைப் பண்ணிகாரத்தை எம்மரசன் தேவி யுண்ணும்படி செய்வோம்" எனக் கூறி விடைபெற்று, அரசிளமங்கை கொடுத்த பரிசுகளேப் பெற்று, நகர்க்குத் திரும்பிச் சென்றனர்.

மாதவசேனே தான் எழுதிய சுயம்பிரபையின் உருவப் பலகையை ஒரு மெல்லிய வஸ்திரத்திருற் பொதிந்து மறைத்துக்கொண்டு, காயாம்பூ வண்ணனைப் பெற்ற சசிதேவியாரிடம் சென்று வணங்கி நின்ருள். சசிதேவியார் அவளே நோக்கி, "நீங்கள் போன காரியத்தை எவ்வாறு முடித்து வந்தீர்கள்?" என விசாரித்தனள். அதற்கு மாதவசேனே தாங்கள் மங்கல வரிசையுடன் சுயம்பிரபையிடம் சென்றதையும், அப்பொருள்களே யெல்லாம் அக்கன்னியிடம் சேர்ப்பித்ததையும் சொல்லிப் பின்னும் அவ்விளவரசி தங்களே நோக்கி, "நும் வாயை எங்கள் வாயாகக்

கொண்டு வணக்கங் கூறி, உம் உடலை எம் உடலாகக் கொண்டு, மாமியாரடிகளை மிக்க பணிவோடு வணங்கிய தாக நீங்கள் வணங்குக" என்று குயிலினுமினிய மழலைச் சொற்களால் தன் தோழி வாயிலாக வேண்டிக் கொண்டனள் என்பதையுங் கூறினள். சசிதேவியார் தனது மருமகளின் புத்தி நுட்பத்தினை வியந்து சந்தோஷித்துப் பின்னர், அவளது ஆடையிலே மறைத்து வைத்திருப்பது யாதெனக் கேட்டனள்.

"எம்பெருமாட்டி! இது உமது மருமகளாகவரும் சுயம்பிரபையின் உருவப்படம்" என மொழிந்தனள். சசிதேவியாரும் அப்படத்தைக்காண மிக்க விருப்பங்கொண்டு அதைக் கொடுவெனக் கேட்டு வாங்கி, உற்றுப் பார்த்தனள். "அழகே பிறந்துவந்த இக்கன்னியின் உருவம் யாவராலும் எழுதுவதற்கரியது. அவ்வாறிருக்க இதைப் பூரணமாய்ச் சித்திரித்த உனது எழுதுகோலின் திறமே திறம். இவ்வுருவத்தில் விளங்கும் ஜோதி அணிகளாலுண்டாயதோ அல்லது மேனி யொளிதானோ அறியேன்" எனப் பலவாறு கூறிப் புகழ்ந்து, "நீ இதைச் சித்திரிக்கக் காரணம் யாது?" என விசாரித்தனள். "அன்னாய்! அப்பெண்மணியின் உருவம் இம்மண்ணுலகில் இதுவரை யாருங் கண்டிராத பேரழகையுடையது. மேலும் தாங்கள் எங்களை நோக்கி, நமக்கு மருமகளாக வரும் அவ்வித்தியாதர கன்னியின் வடிவழகை யுரைத்திடுங்கள் எனக் கட்டளை யிடுவீராயின் நாங்கள் ஒரு சிறிதும் எங்கள் வாயால் விவரிக்க முடியாதாகையால் இதை அப்போதே தங்களருளினால் சித்திரித்து வைத்துக்கொண்டேன்" எனச் சாதுரியமாய் விடை பகர்ந்தனள். சசிதேவியார் அப்படத்தின் பொருட்டுப் பெரியதோர் பரிசளித்து, இவ்வரிய திரு

வுருவப் படத்தை மார்புறவணைத்துத் தோழி கையிற் கொடுத்து, "இதை நமது திவிட்டச் செல்வனுக்குக் காட்டவல்லையோ" எனக் கூறினள்.

அப்பணியைச் சிரமேற்கொண்டு மாதவசேனை படத்துடன் திவிட்டன் வசிக்கும் அரண்மனை யடைந்து, தன் வரவுணர்த்தி, உள்ளே சென்று, அரச குமாரனை வணங்கி வாழ்த்தி நின்றனள். திவிட்டன் நீ யிங்குவந்த காரணம் யாதென வினவினன். மாதவசேனை "ஐயனே! உலகத்தில் அருங்கலம் எப்போதும் அரசர்க்குரியதேயன்றி மற்றயார்க்கும் அது உரித்தாகாது. அதனால் நானும் அரசர்க்குரிய பொருள் ஒன்று இப்போது கொண்டு வந்துள்ளேன். இப்பலகையில் எழுதப்பெற்ற ஒப்பரிய பேரழகு வாய்ந்த ஒரு கன்னியின் உருவத்தைத் தாம்பார்த்தருள்க" எனச்சொல்லி அவன் முன்பு அப்பலகையை நீட்டினாள். "அதை யாம் இப்போதே காண்போம்" எனச் சொல்லி அப்படத்தை வாங்கிக் கையிற்கொண்டு, அங்கிருந்தாரை யப்புற மகற்றி, பலகையிற் சித்திரித்த உருவத்தைக் கண்டனன். அவ்வுருவத்தைக் கண்டதும் திவிட்டகுமாரன் அதன் ரூபலாவண்யத்தை வியந்து, "இம்மாது வானுலகிலுள்ள அப்சரசுக்களி லொருத்தியோ! அல்லது விஞ்சையர் மகளோ! கந்தர்வ வனிதையோ! மண்ணுலக மாதோ! யாரோ!" என ஐயுற்று வினவினன். அதற்குச் சேடி "அரசே! இவள் விண்ணுலக மகளுமல்லள். மண்ணுலக மகளுமல்லள். ஆதலால் தேவரீரே நன்காலோசித்து இம்மடந்தை யார் எனச் சொல்லுங்கள்" எனக் கேட்டனள். திவிட்ட குமாரன் மற்றுமொருமுறை அவ்வுருவத்தின் செவ்வி நோக்கி, "இது விண்ணுறைகின்ற தேவமாதின் உருவம் அன்றெனின் மண்ணிலுறைகின்ற மாதர்களில் இவ்வடிவுடைய

வர்களில்லை. ஆதலால் இப்பெண்மணி வித்யாதரவேந்தன் மகளா யிருக்கவேண்டும்'' எனக் கூறினான். அப்போது அவனை யறியாமலே ஒரு புன்முறுவல் அவனது முகத்திலே பூத்தது. மாதவசேனையும் நீங்கள் உண்மையை உரைத் திட்டீர்கள் எனப் புகன்று, திவிட்டனளித்த பரிசுகளைப் பெற்று விடைகொண்டு, தன்னிருக்கை யடைந்தாள்.

இவ்வாறு சுயம்பிரபை திவிட்டகுமாரனை நேரிற் கண்டும், திவிட்டன் சுயம்பிரபையைச் சித்திரத்திற் கண்டும், ஒருவர்மே லொருவர் கொண்டுள்ள பெருங்காதலால் அவ்விருவரும் அன்றிரவு மிக்க வருந்தியிருந்தனர். விஞ்சை வேந்தனும் அவனுடன் வந்த வேற்றரசர் பரிவாரத்தார் யாவரும் அங்கு நடந்த ஆடல் பாடல் விநோதங்களைக்கண்டும் கேட்டும் சந்தோஷத்துடன் பொழுது போக்கினர்.

சூரியனும் உதயமாயினன். பயாபதி வேந்தனும் துயிலெழுந்து, நித்யகர்மம் முடித்து, அருகக்கடவுளைத் தரிசிக்க விரும்பி, "இன்று நமது அறக்கடவுளுக்கு உற்சவங் காண்க" எனப் பறையறைவித்தான். அம்முரசொலி கேட்ட நகரவாசிகள், அரண்மனை வாசிகள் யாவரும் பூப்பலியும், வாசனைத் திரவியங்களும், நன்மணங்கமழும் தூபங்களும் எடுத்துச் சென்று பல வீதிகளையுங் கடந்து, அருக சினகரத்தை யடைந்து, பூசைகளை வெகு விமரிசையாக நடத்தினர்.

பின்னர் சுயம்பிரபைக்கும் திவிட்ட குமாரனுக்கும் இன்று மணமுடிக்கும் நாளென்று நகர் முழுவதும் பறை சாற்றினர். அவ்வூரிலுள்ளார் அனைவரும் தங்கள் தங்கள் வீடுகளை யலங்கரித்து, ஆடல் பாடல் முதலிய விநோதங்கள்

இயற்றி, நண்பர்களோடுஞ் சுற்றத்தாரோடும் உண்டாட்டயர்ந்து, திருவிழாக் கொண்டாடினர். நகர வாசிகளில் முதன்மையோரும், வேற்றரசர் பலரும் ஆடையணிகளால் அலங்கரித்துக்கொண்டு, கல்யாணமண்டபம் எய்தி ஒரு புறம் வீற்றிருந்தனர். விஞ்சை வேந்தனும் அவனது பரிவாரத்தாரும் மறுபக்கம் அமர்ந்திருந்தனர். அப்போது குலமுதியோர் யானைகளின்மீது பொற் குடங்களில் கங்கை யமுனை முதலிய புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டுவந்து, மணமகனை நீராட்டி, ஆடையணிகளால் மணக்கோலம் செய்வித்து, மணவறையில் ஒரு பொன்னாசனத்தில் அமரச் செய்தனர். அவ்வாறே மணமகளையும் புண்ணிய தீர்த்தங்களால் மங்கள ஸ்நானம் செய்வித்து, ஆடையணிகளாலும், மலர் மாலைகளினாலும் மணக்கோலம் சிறக்கச்செய்து மணமக னருகில் அவ்வாசனத்தி லமர்த்தினர்.

பிறகு வேதியர்கள் வேதவிதிப்படி அக்கினி காரியங்களைச்செய்ய ஆரம்பித்தனர். சந்தனத்தில் மெழுகிய சுத்த நிலத்தில் மாவினால் கோலமிட்டு, ஓமாசாரியன் பரிசுத்தமாகிய வெண்மணலைச் சதுரமாகப் பரப்பி, தருப்பை நுனிகளை வடக்குங் கிழக்குமாக வைத்து, பின்னர் அவைகளைச் சுற்றிலும் தேவர்களைக் காவலாக நிறுத்தி, சமித்துகளையிட்டு ஓமாக்கினி வளர்த்தான். அப்போது ஜோதிடர் விவாக முகூர்த்தம் நெருங்கியதை யுரைக்கவும், மங்கள வாத்யம் முழங்க, தேவர்கள் பூமாரி பொழிய, வயோதிக சுமங்கலிகள் மங்கள வாழ்த்துக்கூற, விஞ்சை வேந்தன் சடியரசன் தன் புதல்வியாகிய சுயம்பிரபையைத் திவிட்டகுமாரனுக்கு நீருடனே தத்தம் செய்து கொடுத்தான். பின்னர் அச்சுப முகூர்த்தத்தில் மாங்கல்ய தாரணமாயிற்று. தம்பதிகளிருவரும் அதன் பின்னால் நடத்தற்குரிய நற்கிரியை

களைச் செய்து, அக்கினிவலம் வந்து அருந்ததி கண்டனர். எல்லாக் காரியங்களும் நிர்விக்கினமாக நிறைவேறிய பின்னர் அங்கிருந்தார் யாவர்க்கும் சந்தன தாம்பூலாதிகளளித்து, உபசாரம் செய்தனர். வேதியர் முதலானவர்க்கு மணமகள் வகையினரும் மணமகன் வகையினரும் பொன் முதலிய பல தானங்களை வழங்கினர். பின்னர் திவிட்ட குமாரனும் சுயம்பிரபையும் மணியும் ஒளியும்போலும், மலரும் மணமும்போலும் மன மொருப்பட்டு, இல்வாழ்க்கையை நல் வாழ்க்கையாக்கி இனிது நடத்தி வந்தனர்.

---

7. அரசியற் சருக்கம்.

சுவலன சடியாசன் பூலோகத்திற்கு வந்து பயாபதியின் மகன் திவிட்டனுக்குத் தன் மகளை மிக்க சிறப்புடன் மணம் செய்வித்து, அங்கு அனைவருடன் அதிக சந்தோஷமாயிருந்தனன். அப்போது வித்யாதர லோகத்தினின்றும் ஒரு தூதுவன் வந்து சடியரசனைக் கண்டு வணங்கி, அம்மகிழ்ச்சியாகிய பாற்கடலில் சில விஷத்துளிகளைச் சிந்தினாற்போல இனிமையற்ற சில வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினன். "வேந்தர் பெருமானே! விஞ்சையர் உலகத்தையாளும் அசுவகண்டனும் அவனை யுள்ளிட்ட அரசர் பலரும் நம்மீது படைகொண்டு போருக்குவர ஆலோசித்திருக்கின்றனர்" என்றான். அச்செய்தியைக் கேட்ட சடியரசன் சிறிதும் பொருள் செய்யாது, "அவர்கள் நம்மீது போருக்கு வரினும் வருக. வராது ஒழியினும் ஒழிக. அதை நாம் முன்னமே அறிவோம். அது நிற்க. எமது மருமகன் திவிட்டன் சிங்கத்தை வதைத்த நாளில் அசுவகண்டனூரில் நடந்த செய்தியைக் கூறுக" எனக் கேட்டனன்.

"வேந்தர் வேந்தே! திவிட்டகுமாரன் சிங்கத்தைக் கொன்ற செய்தியை அரிகேது என்பவன் வந்து சொல்ல, அதைக்கேட்ட வித்யாதரர் யாவரும் அதிக அச்சமும் ஆச்சரியமுமடைந்து மெய்ந் நடுங்கினர். அரிமஞ்சு என்னும் மந்திரி வித்யாதரர் உலகமெங்கும் அச்சமுண்டாம்படி பரவிய இச்செய்தியை, அரசர்க்கு அறிவியாது சிலநாள் மறைத்துவைத்தும், பின்னர் அவ்வாறு மறைத்தல் சரியன்றெனக் கொண்டு, மாயச் சிங்கமாய்ச் சென்ற அரிகேதுவையே யழைத்து, இச்செய்தியை அரசனுக்கு அறிவிக்கும் பொருட்டு அனுப்பினன். அனேக அரசர்கள் சூழ அசுவகண்டன் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கும் பொழுது அரிகேது சென்று, மிக்க பணிவுடன் அரசனை வணங்கி, "வேந்தர் பெருமானே! தங்கள் வெற்றி என்றும் பெருகுவதாக" என்று வாழ்த்தி, "தங்கட்கு யான் அரியதொரு செய்தியைச் சொல்ல வந்தேன். அநுமதியளிக்க வேண்டும்" எனக்கூற, அசுவகண்டன் அதிசயித்து அஃதென்னவென வினவினன். பயாபதி யரசனிடம் திறை வாங்கிவர அனுப்பியதும், அவ்வாறே அவ்வரசன் கொடுத்த திறையைக் கொண்டு செல்லவொட்டாது தூதுவரைத் திவிட்டன் மறித்து ஓட்டியதும், பின்னர் அரிமஞ்சு மந்திரியினேவலால் தான் ஒரு மாயச் சிங்கமாகச் சென்றதும், திவிட்டன் தன்னைக் கொல்லவரத் தான் பயந்து, உண்மைச்சீயம் வசிக்கும் ஓர் குகைக்குள் பிரவேசித்து ஒளிந்து கொண்டதும், அக்குகையின் வெளியே நின்று திவிட்டன் ஆர்ப்பரிக்க, உண்மைக் கேசரி விழித்துக் கொண்டு அவன்மீது பாய, அவ்விளவரசன் மடங்கலை வாய் பிளந்து கொன்றதும், தான் உயிர் தப்பி வந்ததும் ஒன்றும் ஒளியாமற் கூறினன்.

இதைக் கேட்டதும் கருநிறமுடையவனும், வெண்மையாக வளைந்த கோரைப் பற்களை யுடையவனுமான அசுவக் கிரீவன் தன் கண்களினின்றும் நெருப்புப் பொறிகள் பறக்க, மடித்தவாயைப் பற்களால் கடித்துக்கொண்டு கோபாவேசம் மேலிட்டவனாய், பக்கத்திருந்ததோர் கற்றூணைத் தனது கையாலோங்கிப் புடைத்தான். அக்கற்றூணனது இடிவிழுந்து நொருங்கிய பெரிய மலையைப் போலப் பொடிப்பொடியாய் உதிர்ந்துவிட்டது. அதைக் கண்டு சபையிலுள்ளார் அனைவரும் நடுநடுங்கி யிருக்க, அசுவகண்டன் அரிகேதுவை நோக்கி, "அடா! வஞ்சக மனத்தை யுடையவராகிய மனிதர்களை மிக்க வலிமை யுடையவர்களென்று புகழ்ந்து பேசுகின்றாய். நீ அவர்களைக் கண்டு பயந்து நடுங்கினாய்போலும். கீழ்நிலத்திலுள்ள மனிதர்களது வலிமை உன்னைப்போன்ற எளிதில் அஞ்சுபவர்க்கே மலைபோலப் பெரிதாய்த் தோற்றும். எம்போன்ற அஞ்சா நெஞ்சர்க்கு அது அணுவளவாகவும் தோற்றாது" என்று மிக்க இறுமாப்புடன் கூறி யதட்டினன். அரிகேது "கொடிய கேசரியை ஓர் அல்லித் தண்டைக் கிழிப்பதுபோல், ஒரு நொடியில் வாய்பிளந்து கொன்ற திவிட்டனது வலிமையை நேரிற் கண்டவனானதால், அரசனது அறியாமைக்காக மனத்துள்ளே சிரித்துக் கொண்டு, இப்போது இவனுடன் மறுத்துப்பேசி இவனது கோபத்தைப் பெருக்குவதினால் யாதும் பயனில்லை. இவனே நேரிற் சென்று அத்திவிட்ட சிங்கத்துடன் போரிட்டு, அவனது வலிமையை யறிந்து தெளியட்டும்" என்று நினைத்து, ஒன்றுங் கூறாது தலைவணங்கி நின்றிருந்தான்.

அவ்வேளையில் வேறோர் விஞ்சைய ஒற்றன் அங்கே வந்து அரசனைக் கண்டு வணங்கி, மிக்க பயத்துடன்,

"ஐயனே! இரதநூபுரத்துச் சடியரசன் பூலோகம் சென்று, தனது புத்திரியாகிய சுயம்பிரபை என்னும் கன்னிகா ரத்தினத்தைப் போதனத்திறைவன் பயாபதி வேந்தனின் புதல்வன் திவிட்ட குமாரனுக்கு மணமுடித்து, அங்கே இப்போதிருக்கிறான்" என்று கூறினான். அதைக் கேட்டதும் அசுவகண்டன் அச் சுடு சொற்கள் தன் காதுகளிற் புகாவண்ணம் இரண்டு செவிகளையும் மூடிக்கொண்டு சிறிது தலையசைத்தான். அப்போது அவன் கண்களினின்றும் ஜொலிக்கின்ற சிவந்த நெருப்புண்டாயிற்று. அவனதுடல் உருகுவதுபோல மயிர்த்துவாரங்கள் தோறும் வேர்வை நீர் வழிந்தது. பற்களை நெறநெறவெனக் கடித்தான். துடிக்கின்ற வாயை மடித்துக்கொண்டு, எல்லாத் திசைகளும், அருகிலுள்ளோரும் அஞ்சும்படி பார்த்து, தீயுடன் கூடிய சிரிப்பை யுடையவனாய், வெகுளிமேல் வெகுளி கொண்டான்.

பின்னர் அசுவக்கிரீவன் சடியரசன் செய்த தீங்கினைப் பொறுக்கலாற்றாது, அவனைத் தண்டிக்க நினைந்து, ஒற்றர்களின் மூலமாய்த் தனக்காட்பட்ட சிற்றரசர்கள் அனைவரும் உடனே தங்கள் தங்கள் சேனைகளுடன் புறப்பட்டு வரவேண்டுமெனக் கட்டளை யிட்டனுப்பினன். அவர்கள் வந்து அரசனைக்கண்டு வணங்கி, அவனது கோபத்திற்குக் காரணம் யாதென அறியாது மனங்கலங்கினார்கள். அவர்களில் ஒருவன், "இவ்வலியோனுடைய கோபத்திலகப்பட்டு இறக்கப் போகிறவன் யாரோ அறியேன்" என்றான். மற்றொருவன், "நாள்தோறும் எங்குந் திரிந்து பிராணிகளை யழிக்கின்ற யமன்மீது கொண்ட கோபமோ? அல்லது தேவர்கள் அரக்கர்கள் இவர்கள்மீது கொண்ட கோபமோ?" என்றான். இன்னொருவன், "உலகங்களை

நிலை பெயர்த்து வேறு விதமாக மாற்றி, அதில் வாழுமுயிர்களை ஒருங்கு திரட்டி நடுக்கடலில் எறிவதற்குத்தான் நினைக்கின்றானோ?" என்றான். மற்றொருவன், "அமரர்களும் இராட்சதர்களும் முன்னமேயே இவனைச் சரணடைந்து விட்டனர். ஊனுடம்புபெற்ற மானிடரோ இவனுக்கு ஒரு தூசு போன்ற தன்மையுடையவர்கள். தேவர்களில் இவனை எதிர்ப்பார் ஒருவருமில்லை. ஆகையாலிவனது விருப்பத்திற்கு மாறுபட்டு, இவனது கோபத்துக்குப் பாத்திரமானவர் யார் இருக்கின்றார்கள்? சொல்லுங்கள்" என்று கூறினான். பின்னொருவன், "உலகம் இன்றோடழிந்தது. திக்குக்கள் எரிந்தன. கடல்கள் உலர்ந்து ஒழிந்தன. ஆகையால் இதைப்பற்றி வேறொன்றும் சொல்லவேண்டுவதில்லை. பின்னால் வருவது முன்னாலறிய முடியாது. ஆகையால் வந்தபின் அதனை யறிந்துகொள்வோம்" என்றான். இவ்வாறு வேந்தர் பலரும் தமக்குத் தோற்றியவாறு பேசி யிருந்தனர்.

அப்போது அசுவகண்டன் அவர்களை நோக்கி, "வேந்தர்களே! இரதநூபுரத்தரசன் சடி யென்பவன் தன் புதல்வியை எனக்குக் கொடுக்காது வஞ்சித்து, தன்னிலும் தாழ்ந்த பூலோகத்து மனிதன் ஒருவனுக்கு மணம் செய்யும்படி அங்குத் தேடிச் சென்றானாம். நமது அரசும் நன்றாயிருக்கின்றது" என்றான். மேக முழக்கம்போலும் பெருத்த குரலால் அரசன் கோபத்தோடு சொன்ன இம்மொழிகளைக்கேட்டு, அங்குள்ள அரசர்கள் "சுவாமி! இந்த அற்ப காரியத்திற்குத்தானோ இவ்வளவு பெருங்கோபம் கொண்டீர்!" என்று ஒன்று சேர்ந்துரைத்தார்கள். அப்போது ஒல்லென்னும் ஒலியுண்டாயிற்று. அவ்வரசர்கள் "நந்தலைவர் இவ்வாறு கடுங்கோபங் கொள்ளக்கண்டும்,

அது தணிவதற்கேதுவாகிய காரியத்தைச் செய்யாமல் பருத்து நீண்ட புயங்களை வீணே சுமந்திருப்பதில் யாது பயன்? இப்போதே சென்று போரைச் செய்து சடியரசனைக் கொல்வோம். அது இயலாதாயின் போர்க்களத்திற் புறமுதுகிடாது நின்று எதிரிகளா லிறந்துபட்டு, வீர சொர்க்கமடைவோம்" என வீரவாதம் பேசினார்கள். சிலர் "இவ்வரசன் ஏவிய தொழிலைச் செய்து வாழ்ந்திருக்கின்ற யாம் ஜீவித்திருக்கையில் நமது தலைவற்குத் துயரிழைத்தவர் இறவாது இன்னமும் பிழைத்திருப்பாரெனின் நாம் நம் நாட்டைவிட்டு, காட்டிற் சென்று வாழ்நாள் முழுவதும் காய் கனிகளைத்தின்று, தவத்தைச் செய்திருத்தல்வேண்டும், அல்லது இப்போதே அவமானம் பொறுது உயிரை விட்டிடுதல்வேண்டும். இவ்விரண்டிலொன்றே நாம் செய்யத்தக்கது" என்று சொன்னார்கள். பலர் "நாம் யாதொரு துன்பமும் அடையாதபடி நம்மைப் பாதுகாத்து வந்த அரசனது புகழ் வடுப்பட, நமது திரண்ட புயத்தில் வடுப்படாதிருத்தல் தகுமோ? சுயம்பிரபையை மணந்து மகிழ்ந்த திவிட்டனும் அவன் சுற்றத்தாரும் மாளும்படியான பெரிய போரை நாளையே செய்யக்கடவோம். இதனை நீங்கள் காண்பீர்கள்" என்று வஞ்சினங் கூறினர்.

அங்குள்ள அரசர்களிவ்வாறு வீரம் பேசுவது கண்டு, கனகசித்திரன் என்பவன் கோபத்தினின்றுந் தோன்றி, செருக்கை நிரம்ப உட்கொண்டு, மானத்தை ஆதரவாகப் பற்றி, பகைமையாகிய கூரிய வாள் ஒன்று அகத்திலே சீறிக்கொண்டிருக்க, புறத்திலே கையில் நின்றும் சீறுகின்ற ஒள்ளிய வாளினைக் கடைக்கண்களால் நோக்கிக்கொண்டு சொல்லத் தொடங்கினன். "எந்தாய்! மிக்க ஆரவாரஞ்

செய்து போர்க்குச் செல்வேன் என்று சொல்வது யார்க்கு மெளிது. கூரிய வாளாயுதங்கள் ஒன்றோடொன்று தாக்கி நெருப்புப்பொறி சிதறும்படி போர் செய்தல் யார்க்கு மரிது.

'சொல்லுத லார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்'

என்பதினாலறியக் கிடக்கின்றது. நம்மவர்கள் வாயினால் வீரமுரசு அறைவார்களே யொழியச் சொன்னவண்ணம் செய்யார்கள். ஆகையால் தங்களை யெதிர்த்தவர் அரசராயினும் அமரராயினும் ஆகுக. நான் பூலோகம் சென்று அங்குப் போரைச் செய்து, எல்லா உலகங்களும் அழியும் ஊழிக்கால மாக்குவேன். அல்லது விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் தங்கள் வலிமையிழந்து, உமது தலைவாயிலில் பணிவோடும் வணங்கிக்கிடக்கச் செய்வேன். அது மாத்திரமோ அக்கன்னியையும் அவளை மணந்த திவிட்டனையும் பிடித்து வந்து, உமது பாதங்களில் விழச் செய்வேன். அச்சடியரசனிடத்தில் செய்யும் போரில் எங்களால் ஆவதொன்று மில்லையாயின், பிறகு தாமே நேரிற் சென்று போர் செய்வது தக்கதாகும். ஆகையால் முதலில் என்னை அங்கு அனுப்பி எனது வீரத்தைக் காண்பீராக" என்று கூறினான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அச்சுவக்கிரீவன் சினம் சிறிது தணிந்தான். கனகசித்திரனிவ்வாறு பேசியதைக் கேட்டு, அசுவகண்டனது தம்பியாகிய வச்சிரகண்டன் என்பானெழுந்து நின்று, "அண்ணா! எங்கள் ஆண்மை யழிந்ததுபோலும். நாங்கள் தாழ்வடையும்படி எங்களை வெல்லத் தக்கதொரு படை நூதனமாகத் தோன்றியுள்ளதோ? பெரிய மரக்கலமானது ஆழ்ந்த கடலிலன்றிச் சிறிய குளத்-

தில் ஓடாததுபோலத் தாங்கள் கொடிய அரக்கர்களோடு போரிடப் போகலாமேயொழியத் தாழ்ந்த மனிதரோடு செய்யும் போருக்குச் செல்லுவது தகுதியன்று" என்ருன். அசுவகண்டன் கோடை வெப்பத்தால் கொதித்துக் கொண்டிருக்கும் ஒரு மலையானது பெரிய மழை பெய்யக் குளிர்ச்சி யடைவதுபோலத் தனது சினம் முற்றும் தணிந்தான்.

பின்னர் அச்சுவக்கிரீவன் இனிச்செய்ய வேண்டுவதி யாதென ஆராயும் பொருட்டு, மற்ற அரசர்களோடும் அரிமஞ்சு முதலிய அமைச்சர்களோடும் தன் தம்பியர் முதலிய சுற்றத்தாரோடும் ஆலோசனை மண்டபம் புக்கிருந்தான். அங்கு அரசனுக்கு அறிவும், கண்ணும், சொல்லும், வலிமையும், புயமும் போன்றவனுகிய அரிமஞ்சுப் பெரியோன் எழுந்து, "பெரியோர்களே! இன்று நமதரசன் ஒரு கன்னிகையின் பொருட்டு வெகுண் டெழுந்ததைக் கண்டீரன்ரே? அதற்காக யாம் செய்யத்தகுவதை யோசித்துக் கூறுங்கள்" என உசாவினுன்.

உடனே சுவலனபுரத் தரசனுகிய அங்காரவேகன் என்பான் எழுந்து, பெரியோர்களே! இரத நூபுரத்தை யாளும் சடியரசன் தனது செய்கையினுல் நம்மெவரையும் பெரிதும் அவமதித்தான். ஆகையால் அவன்மேற் போருக்குச் சென்று, கிளைகளுடன் அவனை யழித்து, கடலைச் சிறிது தூர்த்து விடுவோம்" என்ருன். அங்காரவேகனிவ்வாறு பேசி அமரவும், அசுவகண்டன் தோழனுகிய அரிசேனன் எழுந்து நின்று, "சபையோர்களே! போருக்குச் செல்லாது இங்கு மறைவாக இருந்துகொண்டு மனம்போனபடி பேசவல்ல பேச்சுக்களைப் பேசிப் பகைவெல்லலாம்படியிருந்தால் இன்னமும் பேசிக்கொண்டிருங்கள். அவ்வாறின்றிப் போரில் வீரத்தோடு பகைவர்களைப் பொருது

வெல்லுதல் கூடுமென்றால், அத்திறம்படைத்த என்னை இப்போதே அங்கு அனுப்புங்கள். மேலும் இவ்வுலகத்தில் வழங்கும் நீதிநூலிற் கூறியுள்ள சாம தான பேத தந்திரங்கள் அங்குப் போரில் விடும் பாணங்களுக்கு அஞ்சுபவர்களுக்கும், பகைவரை வெல்லும் வலியிலார்க்குமே உபயோகப்படும் பொருட்டு எழுதிவைத்த கற்பனையாகும். அவ்வுபாயங்கள் அஞ்சாமையும் ஆற்றலும் படைத்த வீரர்க்குரியன வாகா. ஆதலால் போரைச் செய்வதே நம்போன்றவர்க் கழகு" என்று மொழிந்தான். இதைக்கேட்ட அசுவகண்டன் அரிசேனனைச் சந்தோஷத்துடன் பார்த்து, பின்னர்ச் சபையோரை நோக்கி, "மித்திரர்களே! இப்படைவீரன் நமக்கு நேர்ந்துள்ள பெரும்பழி நீங்குமாறு நன்காராய்ந்து கூறியுள்ளான்" என்று அவனைக் கொண்டாடினன்.

அப்போது அங்கிருந்த கருடத்துவசன் என்பானெழுந்து "பெரியோர்களே! இப்போது சடியரசனுடனும் அவனுக்குதவியாய் வரும் மற்ற அரசர்களுடனும் போரைச் செய்யவேண்டுமென்பது தீர்மானமாயிற்று. ஆயினும் அவர்களோடு போரிடுவது மனிதப்போரா? தேவப்போரா? அல்லது இவ்விரண்டுங் கலந்த போரா? நாம் செய்யவேண்டுவ தெதுவென முதலில் நிச்சயித்துக் கூறுங்கள்" என்றான். அதற்கு ஸ்ரீபாலன் என்னும் வேந்தன் "நாம் செய்யும் போர்வகையில் உங்களுக்குச் சந்தேகம் நிகழ்வதனால், பெரியோர்கள் வகுத்துள்ள வகையை நான் கூறுகின்றேன் கேளுங்கள். போரிலுபயோகிக்கின்ற படைகள் மூவகைப்படும். அவை மானிடம், தெய்வம், சங்கீரணம் என்பனவாம். அப்படைக்கலம் பயிலும் தொழிலும் அத்திரவித்தை, வாள்வித்தை, மாயவித்தை என மூவகைப்

படும். அவற்றில் அத்திரவித்தை நான்கு வகைப்படும். அவைகளையெல்லாம் இங்கு விரித்துரைப்பது மிகையாகும். முப்போரில் மனிதர்களுடன் செய்வதற்கு மனிதப்போரே தகுதியானது. ஆயினும் அவர்களுடன் வித்யாதரர்களும் கலந்து நிற்பதால், இருவகைப் போரையும் செய்தல்வேண்டும். இல்லையாயின் நமக்கதினுற் சிறுமை வரக்கூடும். விஞ்சையர் மட்டும் நம்மை யெதிர்ப்பாராயின் மாயவித்தையோடுங்கூடிய தெய்வப் போரைச் செய்வோம். மானிடர் வருவாராயின் மனிதப்போரைச் செய்வோம். மேலும் போர்க்களத்தில் அவ்வப்போது நிகழும் சந்தர்ப்பங்களுக் கேற்றவாறு போரை மாற்றிக்கொள்வோம்'' என்று விரித்துரைத்தான். அசுவகண்டன் இவனது வார்த்தைகளைக் கேட்டு, ''இவை மிகவும் பொருந்தி யிருக்கின்றன. இவ்வாறே செய்யுங்கள்'' எனப்பேசி, சபையைக் கலைத்து, வந்தவர் யாவர்க்கும் விடைகொடுத்துத் தன் கோயிலையடைந்தான். அதன் பின்னர் அங்கிருந்த மன்னர்களிற் சிலர் தக்ஷிண சேடியிலுள்ள நமது நகரைத் தீக்கிரையாக்குவோ மென்று போனுர்கள். மற்றையோர் இங்குப் போதனமா நகரின்மேற் படையெடுத்து அதி விரைவிலே வருகின்றூர்கள்'' இவ்வாறு போதனமா நகரத்திற்கு வந்த சடியரசனது வித்யாதரத் தூதன் கூறி முடித்தான்.

தூதுவனுடைய வார்த்தைகளைக் கேட்ட சடியரசன் தன்புதல்வன் அருக்ககீர்த்தியையும், மருமக்களாகிய விஜய திவிட்டர்களையும், பயாபதி வேந்தனையும் ஒன்றுகூட்டி, அசுவக்கிரீவன் தன்மீது போர்க்கெழும் செய்தியைத் தெரிவித்து இதற்குச் செய்யத்தக்க முயற்சி யாதெனக் கேட்டனன். அப்போது அங்கிருந்த வீரர்கள் பலரும் மனங்கொதித்துப் பல வீர வார்த்தைகளைச் சொன்னுர்கள்.

சடியரசன் புதல்வனுகிய அருக்ககீர்த்தி எழுந்து "பெரியோர்களே! முதலில் அறியானுகிய யான் எழுந்து பேசுவதற்கு மன்னியுங்கள். எந்தாய்! என் கையிலுள்ள வில்லை வளைத்து நாணைப்பூட்டிப் பாணப்பிரயோகம் செய்து பகைவர்களுடைய இரத்தம் வெள்ளமாகப் பெருகும்படி போரைச் செய்யும் போது, என் வீரம் வெளிப்படும். அதைவிட்டு இப்போது வாயினுற் சொல்வதிற் பயனில்லை" என்று கூறினுன். உடனே விஜயன் எழுந்து, "பெரியோய்! தேவர்களும் நம்மை எதிர்க்கும் ஆற்றலுள்ளவர்களல்லர். அவ்வாறிருக்க, விஞ்சையர் பருவதத்தில் வசிக்கும் மலைக்கிருமிகளோ நம்மோடு பொருதவல்லார்? தேவர்களும் மருளும்படி பகைவர்களுடைய மார்பாகிய வயலில் எனது படையாகிய கலப்பையைப் பாய்ச்சி யுழுது, வெற்றியாகிய வித்தை விதைத்து, உலகத்தார் செவிகளாகிய குதிர்கள் நிறையும்படி புகழாகிய தானியத்தை விளைவிப்பேன்" என்று கூறினுன். தன் தமையன் பேசியதைக்கேட்டு, திவிட்டகுமாரன் எழுந்து, சடியரசனை வணங்கி! "எந்தாய்! தெய்வானுக் கிரகத்தால் போர் இங்கே நிகழ்வதற்குப் பெரிதும் சந்தோஷிக்கின்றேன். அதனுல் தங்கட்கு இது விஷயத்தில் ஒரு சிறிதும் சிரமம் இல்லாமற் செய்திடுவேன். இப்போரைப்பற்றிச் செய்யக்கூடிய ஆலோசனை ஒன்றும் வேண்டுவதில்லை. போருக்கு வரும் வித்யாதரர் கூட்டம் முழுவதும் என் ஒருவன் போர்க்குச் சரிக்கட்டுமோ? அவைகள் என்னுலழிக்கப்படாது மிகுந்தாலன்றோ மற்றவர்கள் போர்க்குச் செல்லவேண்டும்? என் பாணங்களுக்கு அது சிறிதும் போதாது. ஆகையால் அதைப்பற்றிச் சிந்திக்கவேண்டிய அவசியமே யில்லை" என்று கேட்டோர் வியக்கும்படி மிக்க கம்பீரத்தோ டுரைத்தான். இவ்வீர வார்த்தைகளைச் செவியிலேற்று, சடியரசன் மிகவும்

சந்தோஷித்து, "குழந்தாய்! நீ இப்போது கூறிய வார்த்தைகள் உன் வலிமைக் கேற்றவைகளே. இதிற் குற்றமொன்றுமில்லை. ஆயினும் நான் சொல்லவேண்டுவதொன்றுண்டு. வித்யாதரர்கள் மாயவித்தையில் வல்லவர்கள். அவர்களோடு பொருதற்கு நீயும் மாயவித்தைகளை யுணரவேண்டுவது மிக்க அவசியமாகும். ஆகையால் அம்மந்திரங்களைப் பெற்றுக் கொள்வாயாக" எனக் கூறி, அவ்வித்தைகளுக்குரிய மந்திரதந்திரங்களைத் திவிட்ட நம்பிக்குபதேசித்தனன். திவிட்டனும் மிக்க பக்திவிசுவாசத்துடன் கற்றுக்கொண்டு மனனம் செய்ய, அம்மந்திரங்களின் அதிதேவதைகள் அவனுக்கு முன் தோன்றி, வேண்டும்போது வந்து உதவுவதாகச் சொல்லிப் போயின.

இவ்வாறு மாயவித்தைகள் முழுவதும் கற்றுணர்ந்த பின, திவிட்டகுமாரன் பூலோகத்தில் ஒரு கற்பக விருக்ஷம்போல விளங்கினன். அப்போது அசுவக்கிரீவனிடமிருந்து இரண்டு வித்யாதரத் தூதுவர் ஆகாயத்தினின்றும் இறங்கி வந்து, சபையோரது காதுகளில் பழுக்கக் காய்ச்சிய இருப்பு நாராசத்தைச் செருகுவது போலச் சில வார்த்தைகளைக் கூறினார்கள். "அரசர்களே! யாங்கள் வெள்ளிமலைக் கிறைவனாகிய அச்சுவக்கிரீவன் அனுப்பவந்த தூதர்கள். சடியரசன் தன் புதல்வியை ஒரு மனிதனுக்கு மணம் செய்ததினால் எம் அரசர் மிக்க கோபங் கொண்டுள்ளார். அதன்பொருட்டு அவர் கூறிய வாய்மொழியைக் கேட்பீராக. 'சடியரசனது சுயம்பிரபை என்னும் கன்னியைத் தருகின்றீர்களா? அல்லது அக்கன்னியை மணந்தவன் சென்னியைத் தருகின்றீர்களா?' இவையிரண்டி லொன்றுக்கு விரைவில் விடைகூறுங்கள்" என்றனர். கன்னி சென்னி என்னும் சொற்கள் தன்

செவியில் நுழைந்த மாத்திரத்தில் திவிட்ட குமாரனுக்கு அளவுகடந்த கோபம் பொங்கியது. கண்களிரண்டினும் தீப்பொறி சிந்தின. உரோமக் கால்கள்தோறும் வேர்வை யரும்பின. திவிட்டன் சாதாரண மனிதனல்லன். மகா விஷ்ணுவின் அம்சம் பெற்றவன் என்பது அங்குள்ளார் யாவர்க்கும் தெரியும்பொருட்டு, அப்போது அவனது தேகத்தில் இதற்கு முன்பில்லாத ஒளியும், வளர்ச்சியும், தோற்றமும் உண்டாயின. உடனே இளையநம்பி அத்தூது வர்களை நோக்கி, "நீங்கள் தூதுவர்களாக இங்கே வந்தமை யால் உயிர் பிழைத்தீர்கள். ஆகையால் உடனே ஓடி உயிர் பிழையுங்கள்" எனக் கட்டளையிட்டான்.

அப்போது அங்கிருந்த அரசர்கள் கோபித்துத் தூது வர்களை நோக்கி, "உங்கள் அரசன் எமக்குச் செல்வி யனுப்பியது தான் வசிக்கும் பெரிய மலையின் அரணை நினைந்துபோலும்! உமதரசனது அரசையும் செல்வத்தை யும் பறித்து எங்கள் திவிட்ட குமாரனுக்கு உரிமையாக்கின பின்னரே அப்பேதை நமது திறமறிவானேயன்றி அதற்கு முன்னர்ச் சிறிதுமுணரான். அக்கன்னிகை திவிட்ட நம் பியை மணம்புரிந்தாளென்று முன்னம் அறிந்திருந்தும் எதிர்வந்து போரைச் செய்யாமல் காணுதவிடத்து மறைந் திருந்து இவ்வாறு பேசுவது அவனுக்குள்ள வீரம் போலும்! எங்கள் எதிரில் நின்று இவ்வாறு கூறித் தன் னுயிரைப் பாதுகாத்துக்கொள்ள முடியுமோ? அவன் வலி மையை யாங்கள் அறிவோம்" என்றனர். பின்னும் அத் தூதுவர்களை நோக்கி, "நீங்கள் போய் உங்கள் அரசன் தன்னுயிரை விரும்புவானுனல் இவ்வரச குமாரனது பாதங் களில் விழுந்து வணங்கட்டும். அவ்வாறு செய்யானுகில் அவனுயிர் அவனதன்று. மானம் வேண்டுமாயின் இங்கு

வந்து போரைச் செய்யட்டும். இவைகளில் உங்களரசன் தன் உயிரை விரும்புகின்றானா? அல்லது மானத்தை விரும்புகின்றானா? இவ்விரண்டில் அவன் விரும்புவது யாதெனக் கேட்டு வாருங்கள்" எனக்கூறி யோட்டினர். தூதுவர்களும் இவைகளைக் கேட்டுப் பயந்து திரும்பிச் சென்றனர்.

அவ்வேளையில் "திவிட்டகுமாரனே வெற்றி பெறுவான்" எனத் தெய்வ வாக்கு ஒன்று அசரீரியாக ஆகாயத்திலெழுந்தது. பூமிதேவி துன்பம் நீங்கினள். தேவதுந்துபி முழங்கியது. திவிட்டனது தேகத்தில் ஒரு தெய்வவொளி விளங்கியது. மகளிரது இடது தோள்கள் துடித்தன. வீரர்களின் கைவாள்கள் ஒளி பெற்றன. அந்நகரத்தார் அனைவருள்ளங்களும் இன்புற்றன. இவ்வாறு பல நற்சகுனங்கள் இங்குத் தோன்றின. இதற்குமாறாக இரத்தின பல்லவத்தில் அரசனது வெற்றி முரசில் கருநாகப் பாம்பு குடிகொண்டது. சந்திரவட்டக் குடையினுள்ளே தேன் கூடுகள் கட்டப்பட்டிருந்தன. நெடிய தேர்ச்சிகரங்களில் காக்கைகள் ஏறியிருந்து பலவகையாய்க் கத்தின. ஆகாயத்தினின்றும் உதிரமழை பெய்தது. அப்பகையரசர்களின் கிரீட சிகரங்கள் வளைந்து தோன்றின. வெற்றியைத் தருகின்ற ஆயுதங்கள் ஒளியும் கூர்மையும் மழுங்கின. மார்பிலணிந்துள்ள மாலை கருகியது. வானத்தினின்றும் நக்ஷத்திரங்கள் உதிர்ந்தன. இவை போன்ற இன்னம் பல உற்பாதங்களுண்டாயின.

இவ்வாறு பல தீ நிமித்தங்கள் தோன்றக் கண்டு, இவைகளினாலே தங்கட்குக் கேடு வரும் என்பதை யுணர்ந்தும், அசுவக்கிரீவன் முதலியோர் 'கெடுமதி கண்ணுக்குத் தோற்றாது' என்பதினால் சிறிதும் அடங்காமல் வீண் அகங்காரத்தினால் போரைச் செய்யத் துணிந்தனர். அப்

போது போதனத்துக்குச் சென்று பயாபதி யரசனைக் கண்டு திரும்பிய தூதர்கள் இரத்தினபல்லவமடைந்து, அரசனைக் கண்டு பணிந்து ஆங்கு நிகழ்ந்த செய்தியை விண்ணப்பஞ் செய்தார்கள். அசுவகண்டன் அவ்வார்த்தைகளைக் கேட்டு, படப் பொறிகளையுடைய நல்ல பாம்பைப் போலச் சீறிச் சிரித்தான். பின்னர்த் தன்னைச் சூழ்ந்து நிற்கின்ற அரசர்களை நோக்கி, "மித்திரர்களே! நீங்கள் பூலோகம் சென்று அங்குள்ள வேந்தர்களையும் சடியையுங் கொன்று, நம்மை மதியாது வீரம்பேசிய இளைஞன் திவிட்டனைச் சிறைபிடித்து விரைவிலே வாருங்கள்" என்றனுப்பினன். உடனே அரசர்கள் தங்கள் தங்கள் சேனைகளோடும் போர்முரசம் முழங்கப் புறப்பட்டுப் பூலோகம் வந்து, மணத்தின் பொருட்டுச் செய்த அலங்காரங்கள் இன்னமுங் கலையாத போதனமா நகரத்தை யடைந்தனர்.

இவர்கள் வருகையை யுணர்ந்த பயாபதியின உடை பதிகள் தங்கள் நால்வகைப் படைகளையு முடனே ஆயத்தம் செய்து போருக்கெழுந்தனர். இரண்டு பெரிய கடல்கள் பொங்கி ஒன்றோடொன்று கலப்பதுபோல இருதிறத்தார் சேனைகளும் கைகலந்து போரைத் தொடங்கின. தேரொடு தேரும், கரியொடு கரியும், பரியொடு பரியும் போரைச் செய்தன. படைவீரர்களும் வில், வாள், வேல் முதலிய ஆயுதங்களைக்கொண்டு ஒருவர்மீதொருவர் பாய்ந்து வெட்டியும் குத்தியும் கொடும் போர் விளைத்தனர். அப்போது அருக்க கீர்த்தி வில்லை வளைத்து நாணேற்றிக் குணத்தொனி செய்து, பல பாணங்களை விடுத்துப் பகைவர்களைப் பலவாறு நாசமாக்கினன். உதிர வெள்ளம் பெருகியது. பகைவரது வில்லில் அம்புகளைத் தொடுத்தபோது அம்புடனே அவ்வில் நாணறுபட, மீன் பிடிப்பவனுடைய

தூண்டிற்கோல் மிக்க விரைவுடன் மேலெழுவதுபோல நிமிர்ந்து நின்றது. கொடிய போரைச் செய்கிற அருக்க கீர்த்தியுடன் தனிப்போர் செய்யவல்லார் ஒருவருமின்மையால் பகைவர் எல்லாரும் ஒன்றுசேர்ந்து அவ்வொருவனை எதிர்ப்பாராயினர். அப்போது அருக்க கீர்த்தி அம்பறாத் தூணியினின்றும் பாணங்கள் எடுப்பதும் வில்லிற்றொடுத்து விடுப்பதும் யாவர்க்கும் புலப்படாவண்ணம் அதிவிரைவில் அம்புகளை யெய்து பகைவர்களைச் சிதறவடித்தான். மேலும், அவன் தான் விடுத்த கணைகள் ஒன்றுக்கு நூறாகப் பெருகி, எங்கும் பரவி இருள் கவ்விக் கொள்ள, பகைவர் படைகளைக் கால்வேறு, கரம்வேறு, சிரம் வேறாகச் சிதைத்துக் கொன்றொழித்தான். எஞ்சியுள்ளோர் ஓடியொளித்தனர்.

இவ்வாறு அசுவகண்டனது சேனைகள் அழிந்து பட்டது கண்டு உடைமைக் கையிற்கொண்ட வித்யாதரத் தூதனொருவன் ஓடோடியும் சென்று அசுவக்கிரீவனைக் கண்டு பணிந்து, "தலைவனே! பெருங்காற்றி லகப்பட்டுக் கடலலைகள் சிதறுவதுபோல நமது படைகள் பகைவர் கையிற் சிக்கித் தோற்றொழிந்தன" என்று கூறினான். அப்போதே வேறு சில தூதுவர்கள் அங்கு வந்து, "ஐயனே! இரதநூபுரத்தை எரிக்கும்பொருட்டுச் சென்ற வித்யாதர வேந்தர்கள் அங்குச் சடியாசனால் நகர்க்குப் பாதுகாவலாக வைக்கப்பட்டிருந்த பிரீதி வர்த்தனன் முதலிய எண்மரால் எதிர்க்கப்பட்டு, தோல்வியுற்று ஓடிப்போனார்கள். அங்குச் சென்ற படைத்திரளும் முற்றிலும் அழிந்திட்டது" என்று சொன்னார்கள். இவ்விருவர் வார்த்தைகளும் அசுவகண்டனுக்குப் புண்ணில் கோலையிட்டதுபோல வருத்தின. ஆயினும், அஞ்சா நெஞ்சம்படைத்த அவ்வரசன் பெருங் கோபங்

கொண்டு மிக்க வலிமை படைத்த படை யொன்றினைத் திரட்டிக்கொண்டு வெள்ளி மலையைவிட்டுப் பூலோகத்திற் குப் புறப்பட்டான். அப்போது அவன் தம்பியர்களாகிய நீலகண்டன், நீலரதன், வஜ்ரகண்டன், சுகண்டன் என் கின்ற நால்வரும் அரசன் முன்பு வந்து, பல வீரவாதம் பேசித் தமயனை யாற்றினார்கள். அசுவகண்டனும் மனங் குளிர்ந்து, "துணைவர்களே! 'தம்பியுள்ளான் படைக்கஞ் சான்' என்னுஞ் சொல் உங்களிடத்தே கண்டேன். இப் போதே நீங்கள் முன்னதாகச் சென்று, பயாபதி முதலி யோருடன் போரைச் செய்து உங்களது பெயரை நிலை நிறுத்துங்கள்" எனச் சொல்லி அவர்களை யனுப்பிவைத் தனன். அத்தம்பியர் நால்வரும் பெருஞ் சேனையுடன் பூமியை நோக்கிப் புறப்பட்டனர்.

இவ்வாறு வந்த வித்யாதர சேனை வானத்தளவின தாகும், திவிட்டனதுசேனை பூமியளவினதாகும் என்று ஒரு வாறு தொகுத்துக் கூறக்கூடிய அவ்விரு சேனைகளும் கை கலந்து போரைச் செய்தன. யுத்த வீரர்கள் தம் கையிற் கொண்ட வாளினாலும், வேலினாலும் ஒருவரை யொருவர் எதிர்த்துப் போரைச் செய்தனர். அப்போது அவர்கள் உடல்கள் பல கூறுகளாய் வெட்டுண்டு போர்க்களத்தை நிறைத்தன. இவ்வாறு வெற்றிகொண்ட வீரர்கள் தங்களை வெகுண்டு நோக்கிய பகைவர்கள் தாங்கள் படைக்கலம் கொண்டெறியும்போது, சிறிது கண் கூசி யிமைப்பாராயி னும் அவர்களையும், போர்செய்யத் திறமின்றி ஆயுதத் தைக் கீழேஎறிந்திட்டு முதுகிட்டோடுபவரையும் தோற்றவ ராகவேகொண்டு, அவர்களைக் கண்ணெடுத்தும் பாராமல் கம்பீரமாய் நடந்து போரில் வீரர்களைத் தேடிச் சண்டை யிட்டனர். பின்னும் சிலர் தூரத்தினின்றும் அம்புகளைத்

தொடுத்தபோது அவைகள் நெடுந்தூரம் சென்று பல வீரர்களின் மார்பிற் படுதலால், அவ்வாறு தைத்த கணை களை அவர்கள் வலிதிற் பறித்தெடுத்து, அவற்றில் அவ்வம் புக்குரியவனது பெயர் வரையப்பட் டிருப்பதைக்கண்டு அவற்றை யெய்தவர் இன்னார் என்பது தெரிந்தவராகி, நேரிலவருடன் போர்செய்வோமென்று தேடித்திரிந்தனர்.

படைவீரர்கள் போர்த்திறம் இவ்வாருக, அசுவகண்ட னது தோழனுகிய அரிசேனன் என்பவன் வலது கையில் வாளும் இடது கையிற்கேடகமுங்கொண்டு போர்க்களத்தே புகுந்தான். அவன் வருகையைக் கண்ட அருக்ககீர்த்தி அவனை யெதிர்க்க எதிர் சென்று நின்ருன். அப்போது சடியரசனுடைய மருமகனுகிய வியாக்கிரரதன் குறுக்கிட்டு அவனைத் தடுத்து, "அருகனே! நினக்கு இவன் நிகரா வானே? யானே இவனேடு பொருது வருவேன்" எனச் சொல்லித் தானே அரிசேனனிடம் சென்று, போரிட வரு வாய் என வழைத்தான். அதற்கு அரிசேனன் மற்றவனை நோக்கி, "அடா வியாக்கிரரதா! உன் செய்தி யானறி யேனு? விஞ்சையர் குலமகளை ஓர் எளிய மனிதனுக்கு மணம் புரிவித்து, விருந்துச் சோறு வயிறுவீங்க உண்டவ னென்று நன்கறிவேன். உன்னிடம் வீரம் என்பது ஒன்றிருக்கின்றதோ?" என்று நகைத்தான். வியாக் கிரரதன், "அடா அற்பனே! மணச்செய்கை ஊழ் வினைப்படி நடக்குமென்பதறியாயோ? கல்யாண வீட் டில் விருந்துண்டேன் என்பது மெய்யே. அதுபோன்று, உனக்கும் எனது கூரிய பாணங்களால் நல்ல விருந் திடுகின்றேன். உண்டு களிப்பாயாக. வீண் வார்த்தை பேசிக் காலம் கழிப்பதற்கு இடமும் சமயமும் இது வன்று. போரைச் செய்யத் தொடங்குவாய்" என

இகழ்ந்து கூறினன். பின்னர் இருவரும் நெடு நேரம் வாட் போர் செய்து, கடைசியில் வியாக்கிராதன் முன்னேறிச் சென்று அரிசேனன் உடல் இரண்டு படத் துணித்து வீழ்த்தினன். அப்போது அசுவகண்டனது சேனபதி குணசேனன் வந்தெதிர்க்க, அவனை இப்படையின் சேனபதி இந்திரகாமன் என்பவன் தன் வாளுக்கிரையாக்கினன். பின்னர் அசுவக்கிரீவனது சுற்றத்தாரிலொருவனுகிய அரி கேதனன் வந்தெதிர்க்க, அவனை வியாக்கிராதன் கொன் றிட்டான். அது கண்ட வித்யாதரசேனை கலைந்தோடியது. உடனே தூமகேது தன் படைகளை யொழுங்குபடுத்திக் கொண்டு முன்னே வந்து வீரம் பேசினன். அவனைச் சுவலனரதன் எதிர்த்துப் போர்புரிந்து தனது கதையினல் அவன் சிரத்தில் மோதிப் பூமியில் வீழ்த்தினன். உடனே அசுவகண்டனைச் சேர்ந்த அங்காரவேகன் என்பவன் அதி வேகமாயோடி வந்து போருக்கறை கூவ, தேவசேனன் எதிர்த்தான். அப்போரில் அங்காரவேகன் விடுத்த வேலி னைத் தடுத்து, அதைப் பிடித்திருந்த கையை முதலிலே வெட்டியெறிந்து, உயிர் பிழைத்தோடும்படி சொன்னன். அதற்கு அவனிணங்காது பின்னும் போர்க்கு வர, அவ னது சிரத்தைக் கொய்தெறிந்தான்.

பிறகு விஞ்சையர் பொருட்டுச் சுவணகேது எதிர்த்து வந்தான். அவன் வருகையைக் கடல்வண்ணன் மாமனுகிய சடியரசன் கண்டு எதிரில் சென்று தடுத்திட்டான். அப் போது சுவணகேது சடியரசனை நோக்கி, “ஐயா! நீவிர் வயதில் முதிர்ந்த குரவராதலால் என்னேடு போர்புரிய நுமக்கியலாது. ஆதலால் என்னைப் போன்ற இளமையும் வலிமையும் படைத்த ஒரு வீரன் வருவானுக. தாங்கள் இவ்விடத்தினின்றும் விலகுவதே நன்மையாகும்” எனச்

சொன்னான். அதைக் கேட்டுச் சடி அரசன் சிறிது நகைத்து, "சூரவர் என்கிற உபசாரம் ஒருபுற மிருக்கட்டும். போர்க் களத்தி லிவ்வாறு முறைகொள்வது தவறு. போரை விரும்புகிறவர்கள் எதிர்த்தவர்கள் யாவராயினும் அவர்க ளுடன் பொருதல் வேண்டும். அதைவிட்டு இவ்வாறு வார்த்தைகளைச் சொல்லி நழுவப் பார்ப்பது வீரத்தன்மைக் கழகாமோ? ஆதலால், நழுவுங்குணம் நம்மிருவரில் யாரிடத் துள்ள தென்பதை அறியக்கடவோம்" எனக் கூறினான். உடனே சுவணகேதுவும் சடியரசனும் போரைத் தொடங் கினர். சடியரசன் பகைவனது வில் நாணையறுத்து, அவன் மீது பல அம்புகளைத் தொடுத்து, அவன் ஏறிவந்த யானை யையும் வதைத்தான். உடனே சுவணகேது கீழே குதித் துக் கையில் வாளும் பலகையுங்கொண்டு சடியரசன்மீது பாய்ந்தான். சடியரசன் விரைவிலே சில பாணங்களை விடுத்து அவனது மார்பைத் துளைத்து, மற்றுமொரு கணை யினால் அவனுயிரைப் போக்கினான். சுவணகேது போர்க் களத்தில் விழுந்து உயிர் நீங்கியது கண்டு, அசுவகண்ட னது சேனைகள் நிலைகுலைந்து சிதறியோடின.

இவ்வாறு சிதறியோடுகின்ற சேனைகளைத் தடுத்து, ஸ்ரீசேனன் என்பவன் ஒருங்கு திரட்டி அவர்களை நோக்கி, "வீரர்களே! நீங்களிவ்வாறு புறமுதுகிட்டு ஓடுவீர்க ளானால், நாளை யுங்கள் மனைவிகளின் முகத்தில் எவ்வாறு வெட்கமின்றி விழிக்கப்போகின்றீர்கள்? இவ்வுடலோ இன்றைக்கிருந்து நாளை யழியக்கூடியது. புகழோ என் றும் நிலைத்து நிற்பது. கீர்த்தியை விரும்பாது உயிரை விரும்பி மானமிழந்து பகைவர்க்குப் பயந்து ஒளித்தோடுவ தழகோ? தன் மயிரில் ஒன்றை யிழப்பினும் உயிர் வைத் திராத கவரிமானை நினைந்தாவது உங்கள் மானத்தைக்

காப்பாற்றிக்கொள்ளுங்கள்" என்றிடித்துரைத்தான். விஞ்சையர்களும் மனந்துணிந்து போர்க்களம் குறுகினர். ஸ்ரீசேனனும் அவர்களுக்குத் தலைவனாக நின்று, பகைவர்மீது பாணமழையைப் பொழிந்து மிக்க சேதம் விளைத்தனன். சடியரசன் பக்கத்தவனாகிய ஸ்ரீபாலன் எதிரில் வந்து ஸ்ரீசேனனைப் போருக் கழைத்தான். இருவரும் போர் செய்கையில் ஸ்ரீபாலன் ஸ்ரீசேனனது வில்லை முறித்து அவன் மீது பாணங்களை விடுத்து வருத்தினான். ஸ்ரீசேனன் வில்லைக் கீழே யெறிந்துவிட்டு, வாளையுருவிக் கையிற் கொண்டு பகைவனது தோளில் வீசினான். ஸ்ரீபாலன் அவ்வாளின் போக்கைத் தன் பரிசையாற் றடுத்துத் தனது வாளை உருவி அவனைச் சிரசிலே மோதினான். அப்போது ஸ்ரீசேனன் தன் குதிரையோடும் ஆகாயத்திலெழும்பி மறைந்தான். அப்போது ஸ்ரீபாலனும் அவனைத் தொடர்ந் தெழுந்து, அவனது சிரத்தைக் கண்டித்துப் பூமியில் வீழ்த்தினான். ஸ்ரீசேனனிவ்வாறு பூமியில் விழுந்து மடியவே அவனது சேனை மீண்டும் ஓடியது. தனது நண்பனான ஸ்ரீசேனன் மாண்டதைக் கண்டு, மனம் பொறாதவனாய் அசுவகண்டன் புதல்வன் கனகசித்திரன் என்பவன் வாளைக் கையிலேந்திக் கொண்டு ஒருவனாய்ப் பகைவர் படைக்குள் புகுந்து கடும்போர் புரிந்தான். அவன் சென்ற திசைதோறும் யானைகளும் குதிரைகளும் பதாதிகளும் கணக்கின்றி மாய்ந்தன. கனகசித்திரன் இவ்வாறு தனிமையாய்ப் போர் புரிவதைக் கேள்வியுற்று, அசுவகண்டன் தம்பியர் நால்வரும் அங்கு விரைந்து சென்று அவனுடன் கூடிக்கொண்டு பகைவரை மாய்த்தனர்.

இவ்வாறு சேனைகள் அழிவதைக் கண்டு, விஜயகுமாரன் உடனே அங்குத் தோன்றி, தனது அலப்படையால்

பகைவரையழித்துத் தன் சேனையைக் காத்திட்டான். இவனது திண்மைப் புயத்தையும் வெண்மை நிறத்தையும் கண்டு, இவன் யாரென அசுவக்கிரீவன் தம்பியர் விசாரித்தனர். அப்போது அங்குள்ளார் சிலர் இவன் பயாபதி வேந்தன் புதல்வரிருவரில் முதல்வன். இவன் பெயர் விஜயன் என்றார்கள். அந்நால்வரும் இதையுணர்ந்து மிக்க கோபங் கொண்டவர்களாய் விஜயன் ஒருவன்மீது தமது யானைகளை ஒருங்கே ஏவினார்கள். அப்போது விஜயன் வித்யாதரர்களால் தோற்கடிக்கப் பட்டானென்று ஒரு பொய் வதந்தி போர்க்களம் முழுவதும் பரவியது. அதை உண்மையெனக் கொண்டு, பயாபதிப் படைகள் சிறிது கலக்கமடைந்து ஓடத் தொடங்கின. அவ்வேளை விஜயகுமாரனுக்கு வாகனமாக ஓர் ஆண் சிங்கமும், ஒரு புதிய கலப்பைப் படையுந் தெவானுக்கிரகத்தால் வந்து சேர்ந்தன. உடனே மூத்த நம்பி அம்மடங்கல் மீதமர்ந்து, கலப்பைப் படையைக் கையிலேந்தி வந்தனன். அப்போது கேசரி கோடியிடி இடித்தாற்போல ஒருதரம் கர்ஜித்தது. அதன் ஒலியைக் கேட்ட அசுவகண்டன் படைகளின் ஆற்றல் பெரிதும் அழிந்தது. அப்போது விஜயன் அந்நால்வரையும் கொன்றிட்டான். கனகசித்திரன் தன் தந்தையின் பகைவர்களில் முதல்வனை முதலிலே கொன்று, பின் திவிட்டனையும் கொல்வேனெனச் சொல்லி வாளை யுருவித் துடைத்து, அதன் கூர்மையை யுணர்ந்துகொண்டு விஜயன்மீது பாய்ந்தான். அப்போது விஜயகுமாரனது அலாயுதம் அவன் தோளில் அழுந்த வூன்றியது. விட்டிலானது விளக்கின்மீது பாய்ந்து உயிர் விடுவதுபோலக் கனகசித்திரன் மாய்ந்தான்.

இரத்தினகண்டன் என்பவன் கனகசித்திரனிறந்ததைக் கண்டு மிக்க கோபங்கொண்டவனாய், மானிடரது

போரையும் அவர்களது ஆண்மையையும் ஒருங்கேயொழிப்பேனென வீரவாதம் பேசி, ஒரு பெரிய பாறையைத் தன் கரத்திலேந்திக்கொண்டு பகைவர் நடுவில் புகுந்தான். அப்போது கச்சுவரிந்த இடையும், நீண்டு வளர்ந்த தாடியும், முரிந்து மேலெழுந்த புருவமும், பெரிய உருவமுமாய் வருகின்ற இப்பயங்கர ரூபத்தைக் கண்டு பயாபதியின் சேனைகள் பயந்தோடின. அப்போது சடியரசன் புதல்வனாகிய அருக்ககீர்த்தி தன் படைக்கு நேர்வதாகிய இப்பெரிய ஆபத்தைக் கண்டு, நொடிப்பொழுதிலே தனது வில்லை வளைத்துக் கூரிய அம்பொன்றைத் தொடுத்து அதற்குரிய மந்திரத்தை உச்சாடனம் செய்து, இரத்தின கண்டனது மார்புக்குக் குறிவைத்து ஏவினான். அவ்வம்பானது பல அம்புகளாகப் பெருகி, இரத்தினகண்டன் கரத்திருந்த கற்குன்றைத் தூளாக்கி, அவனது மார்பிற் பாய்ந்து பின்னாலுருவி யோடியது. இரத்தினகண்டன் அடியற்ற மரம் போலப் பூமியிலே சாய்ந்து மாய்ந்தான். இச்சம்பவங்களைக் கண்ணுற்ற ஒற்றர்கள் அசுவக்கிரீவனைக் கண்டு போர்க்களத்தில் நடந்த செய்தி யாவற்றையுங் கூறினர். தம்பியரும் புதல்வரும் இறந்தமை கேட்டு, மிக்க வருத்தமுங் கோபமுங்கொண்டு, இனி வாளாயிருத்தலில் ஆபத்தே மிகுமென அறிந்துகொண்டான். இதை யொழிக்கும் பொருட்டு நிலவுலகத்துள்ள உயிர்களையெல்லாம் ஒருமுறையில் வாரிச்சென்று கூற்றுவன் வாயிலிடும் மாயாதேவியை மனதில் தியானம் செய்தான். அப்போது சண்டவேகை என்னும் மாயா தேவதை அரசன்முன் தோன்றி எனக்கிடும் பணி யாதெனக் கேட்டது.

அசுவகண்டன் வந்தனை செய்து, "தேவி! இப்பூமியில் என்னுடன் பகைத்துப் போரைச் செய்கின்றவர்கள்

எல்லோரையும் சம்ஹரித்து என்னைக் காக்கவேண்டும்'' என வேண்டிக்கொண்டான். அம்மாயாதேவதையும் அவன் வேண்டுகோளுக் கிணங்கி, தனது பரிவாரங்கள் ஊனைத் தின்று இன்றுதான் எங்கள் வயிறு நிரம்பப் போகிற தென்று சந்தோஷித்துக் கைகொட்டிக் கூத்தாடிக்கொண்டு பின்னே தொடர, யமனைக் கூவியழைத்து, "இன்று இவ் வுலகத் துயிர்களையெல்லாம் ஒருங்கழிக்கப் போகின்றேன். ஆகையாலுனது கிங்கிரர்ப் படைமுழுவதும் இவ்விடத்திற் கனுப்புவாயாக'' என்று கூறிவிட்டு, பயாபதியின் சேனையை நோக்கிச் சென்றது.

பின்னி நடக்குந் தாள்களும், உயர்ந்த பாடுகளும், உலர்ந்த வுடலும், அகன்ற வாயும், செம்பட்டை மயிரும், பேழை வயிறும், மயிற்பீலிகைகளைச் சூடிய தலையும், கழற் காய் போன்று வட்டமாய்ச் சுழலும் கண்களுமுடையன வாய்க் கூளிச் சேனைகள் அலறியார்த்தன. அவ்வேளையில் மலைகளும் அசையும்படி ஒரு பிரசண்ட மாருதம் எழுந் தது. கடல் கொதித்து எங்கும் அக்கினிச்சுவாலை படர்ந் தது. இவைகளுமன்றி, சண்டவேகை தன் மாய்கையினால் உலகத்தையே ஒரு மூடியிட்டு மறைத்தாற்போல இருள் கவ்வச் செய்தது. போர்க்களத்திலே நின்ற பயாபதியின் சேனைகள் பயங்கரமான கூச்சலைக்கேட்டும், இருளினால் கண்ணொளி யிழந்தும், திகிலடைந்து திசைதெரியாது ஒருவரோடொருவர் முட்டித் தள்ளிக்கொண்டு அலங்கோல மாய் ஓடி ஒளித்தனர்.

இப்பயங்கரமான தோற்றத்தின் காரணமறியாது, திவிட்டநம்பி தன் மைத்துனனாகிய அருக்ககீர்த்தியை நோக்கி, இவ்விபரீத தோற்றத்துடன் வருவது யாதென வினவினான். அருக்ககீர்த்தி "இது சண்டவேகை யென்

னும் மாயாதேவதை. நம்முயிரனைத்தும் உண்ணும்படி அசுவகண்டனு லனுப்பப்பட்டது போலும். அங்ஙன மாயின் அது நம்மனேரை மாய்த்தன்றித் திரும்பிப் போகாது. அதை மறித்துத் தடுக்க வல்லார் ஒருவரு மில்லை" என்ருன். திவிட்டகுமாரன் இதைக் கேட்டுச் சிரமசைத்து, "மைத்துன! இதைக்கண்டு நீரும் பய மடைந்து விட்டீர்போலும். ஒரு பேயானது இவ்வளவு பயங்கரத்துடன் நம்மேல் வருகின்றது எனச் சொன் னீரே. இது நன்ருயிருக்கிறது" எனச் சொல்லி, மிக்க கோபத்தோடும் வானுலகமும் அஞ்சும்படி ஆகாயமளாவிய ஒரு நெடிய உருவங்கொண்டான். அப்போது இளமையிற் கொண்ட நட்பாளர்போலப் பாஞ்ச ஜன்யம் வலக்கரத்தி லும் சாரங்கம் என்னும் தனுசு இடது கரத்திலும் வந் தமைந்தன. உடனே திவிட்டன் சங்கத்தை வாயில் வைத்து முழக்கி, வில்லை வளைத்து நாணேற்றிக் குணத் தொனி செய்தான். சப்த மேகங்களும் ஒன்று சேர்ந்து இடித்ததுபோன்ற இப்பெரு முழக்கத்தைக் கேட்ட சண்ட வேகை திகிலடைந்து பயந்து, தன் பழய வுருவத்துடன் பரிவாரங்கள் பின்தொடர, அந்தரத்தி லெழுந்து மறைந்து போயிற்று.

அசுவகண்டன் தானேவிய மாயாதேவதை பரிவாரத் தோடு உயிர்பிழைக்க வோடுவதைக்கண்டு கைகொடுகை புடைத்து, இதன் வலிமை யிவ்வளவுதானே? என நகைத்து, கண்களில் நெருப்பெழக் கனன்று, தனது களிற்று யானையைக் கொண்டுவரும்படி கூறினான். அரச யானை அவனெதிரில் வந்து நின்றதும், அதிலாரோக ணித்து யுத்த சன்னத்தனாய்ப் புறப்பட்டான். அவன் வரவைக்கண்ட திவிட்ட நம்பி மிக்க உற்சாகத்துடன்

எதிரே சென்று தனது சாரங்கவில்லைக் கையில் எடுக்கவும், விசும்பினின்றும் வயிரத்துண்டம் போன்ற வளைந்த மூக்கும், ஒளிரும் சிறு கண்களும், திசையினை யளாவுகின்ற சிறகுகளையு முடையதாய், கருடன் பெரிய செம்மலை போலக் கீழே யிறங்கிவந்து, திவிட்டனை அணுகியது. உடனே இளயநம்பி கருடனை வலம்வந்து, அதன்மீதமர்ந்து, அசுவகண்டன் எதிரில் நின்று வில்லை வளைத்து நாணேற்றிப் போருக்குச் சித்தமானான். அப்போது வித்யாதர வேந்தன் திவிட்டனைநோக்கி நகைத்து, "வீரனே! உன்னைப்போல அறிவில்லாத அரக்கர்கள் பலவிதமான மாய்கைகளுடன் வந்து என்னுடன் பொருது இறந்தனர். மற்றையோர் பலர் என்னை வணங்கி உயிர்பிழைத்து வாழ்கின்றனர். வானவர்களும் எனக்கஞ்சி மறைந்து திரிகின்றனர். நீ ஒருவன் உனது மடமையினால் உயிரிழக்க வந்தாய் போலும். அசுவகண்டன் அற்ப மனிதர்களுடன் போருக்குச் சென்றான் என்னும் இழிசொல்லுக் கஞ்சி, இதுகாறும் உன் பழிச்சொற்களைக்கேட்டும் பொறுத்திருந்தேன். அதனை யறியாது எனது கோபத்திற கிலக்காகி, இன்று உன்னுயிரைப் பலிகொடுக்க வலிய வந்தாய். உனது மடமையை என்னென்று சொல்வது" என்று கூறினான். திவிட்ட குமாரன் அவனை நோக்கி, "அடா அசுவகண்டா! நீ உனது மலையின்மேலிருந்துகொண்டு மனம் போலப் பேசுவதன்றி இங்கு என் முன்னும் இவ்வாறு சொல்லத் துணிந்தாயோ? இதை ஒரு கணமும் இனிப்பொறேன். உனது உயிர் இன்று ஒழிந்தது என்று எண்ணிக்கொள்" என்றான். வித்யாதர வேந்தன் வெகுண்டு "நீ சிறுவனென்று இதுவரையும் எண்ணி யிருந்தேன். இப்போது பெரியோரை மதியாது பேசும் துஷ்டனெனக் கண்டுகொண்டேன். மண்ணில் வாழ்கின்ற சிதலைபோன்ற

வனே! அவைகளுக்கு வாழ்நாள் அழியும்போது இறகு முளைத்துப் பறந்தொழிவதுபோல இன்றுனக்கு முடிவு காலம் கிட்டியதால் கருடன்மீதமர்ந்து வந்தாய். ஆகையால் இனியுன் பெயரும் உலகிலில்லாமல் அழிந்துபோம்படி செய்கின்றேன் பார்" எனச் சொல்லி வில்லை வளைத்து, டங்காரம் செய்து, பல கணைகளை மாரிபோலச் சொரிந்தான்.

அசுவகண்டன் விடுத்த பாணக் கூட்டங்களையெல்லாம் கருடன் தனது வலிய சிறகுகளால் உதறியொழித்திட்டது. அசுவகண்டன் தனது பாணங்கள் வீணானது கண்டு, தேவாஸ்திரங்களைப் பிரயோகிக்க நினைந்து முதவில் நாகாஸ்திரத்தை விடுத்தான். அது கொடிய விஷத்தைக் கக்கிக்கொண்டு சீறி வரவும், திவிட்டன் கருடாஸ்திரத்தைவிட்டுத் துண்டித் தெறிந்தான். உடனே வித்யாதரன் அக்கினியாஸ்திரத்தைவிட, அது தீயையுமிழ்ந்துகொண்டு எதிர்ப்படுவாரை யெல்லாம் எரித்துக்கொண்டு வந்தது. இளையநம்பி வருணாஸ்திரத்தைவிட்டு, அதன் செருக்கை யடக்கித் தீயை யவித்தொழித்தான். பின்னும் அசுவகண்டன் யாவரையும் மயக்கித் தூங்கச்செய்யும் மோகனாஸ்திரத்தைவிட, அரச குமாரன் ஞானாஸ்திரத்தை விட்டு அதை யழித்தான். பிறகு அசுவக்கிரீவன் தனது தெய்வப்படைகள் முற்றும் வீணானது கண்டு, திவிட்டனது ஆண்மையைச் சிறிது சிந்தித்துப் பின் சக்கராயுதத்தைக் கையிலேந்திக்கொண்டு, "அடா சிறுவனே! இதோ சக்கரத்தை விடப் போகின்றேன். வலிமை யிருந்தாற் பாதுகாத்துக்கொள். இனியும் நீ என் எதிரில் நின்று போரைச் செய்ய நினைக்கின்றாயோ?" எனச் சிரித்தான். சுரமை நாட்டு இளங்கோவும், "அடா மூடா! நீ விட்ட தெய்வப் படை

கள் எல்லாம் பயனற்றதுகண்டு வெட்கி 'விழுந்தான் சிரித் தான் வெட்கத்திற்கஞ்சி' என்றபடி உனது சக்கரத்தைக் கொண்டு என்னை வெருட்டுகின்றாயோ? ஐயோ பாவம்! நீ மிகவும் துன்பப்படுகின்றாய்" என்று ஏசினான். அசுவ கண்டன் உடனே தனது திகிரிப் படையைத் தன் முழுப் பலத்தோடும் சுழற்றி வீசினான். அப்படையானது திரு திருவென எரிந்துகொண்டு வந்து திவிட்டனை யணுகித் தன் சுவாலைகளால் அவனைப் பிறர் காணாவண்ணம் மறைத் திட்டது. அதைக் கண்டு தேவர்களும் மனிதர்களும் மிக வும் வருந்தினார்கள். ஆயினும் அப்படையானது மறு நிமிடத்தில் திவிட்டன் எதிரிற்சென்று வலம் வந்து வணங்கி, அவனது வலப்பக்கத்தில் நின்றது. அப் போது திவிட்டன் அச்சக்கரத்தை ஏந்துவதற்குத் தன் கையை நீட்டவும், அது அவன் கரத்தில் வந்தமைந்தது. பின்னர் திவிட்டநம்பி அச்சக்கரத்தையே அசுவகண்டன் மீது திருப்பிச் செலுத்தினன். சக்கரமானது திவிட்டனது கையினின்றும் விடுபட்டு, முன்னிலும் பதின்மடங்கு மிக்க ஒளியுடன் சென்று, அசுவகண்டன் மீதுபாய்ந்தது. அப்போது அவன் அனேக பாணங்களை விடுத்துச் சக்க ரத்தை அழிக்க முயன்றும் பிரயோசனப் படவில்லை. உடனே தனது வாளையுருவி அச்சக்கரத்தைப் பிளக்கும் படி வீசினான். அச்சக்கரம் வாளை முறித்து அவன் ஏறி யிருந்த யானையைக் கொன்று, பின் அவன் சிரத்தை யறுத்து அப்பாற்சென்று திவிட்டன் கையில் வந்தமர்ந் தது. அசுவக்கிரீவன் சக்கரத்தாலுயிர் ஒழிந்து, கரியமேக மானது தான் படிந்திருந்த பெரிய மலையினின்றும் புரண்டு விழுவதுபோல யானையினின்றும் சரிந்து பூமியில் வீழ்ந் தான்.

'நெறிதலை திரிவிலான்மேல் நினைவிலான் மொழியப்பட்ட
மறுதலை முடிக்குமேது வாய்வழி யழிப்பதே போற்
பொறிதலை மணந்தகாளை மேல்வாப் புணர்த்தநேமி
செறிதலை யிலாதமன்னன் தன்னையே செகுத்த தன்றே'

நன்னெறியினின்றும் தவறுதலில்லாப் பெரியோர் ஒருவர்க்கு அறிவில்லான் ஒருவன் செய்த தீமை திரும்பிச் சென்று செய்தவனையே யழிக்குமாறுபோல, அசுவகண்டன் திவிட்டனைக் கொல்லும் பொருட்டு அனுப்பிய நேமிப் படையானது விடுத்தவனையே முடித்துவிட்டது. அசுவ கண்டன் நிலத்திலே வீழ்ந்துபட்ட செய்தி போர்க்கள மெங்கும் பரவவும், இருதிறத்துச் சேனைவீரர்களும் உடனே போர் செய்வதை நிறுத்தினர். அவர்கள் தம் பகைமையை மறந்து, அசுவகண்டனது பெருமையையும் வலிமையையும் நினைந்து செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை, ஆற்றல் நிலையாமை முதலியவைகளை மனத்தில் நினைந்து,

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்'

என்பது முற்றிலும் உண்மை என்று கூறி மிகவும் வருந்தினர்.

அசுவகண்டனது படைவீட்டிலிருந்த அவனது தேவிமார்கள் தம் கணவன் இறந்ததறிந்து, தலைவிரி கோலமாய் யுத்தகளத்துக்கு வந்தார்கள். அவர்களில் பட்டத்துத் தேவி தனது நாயகன் மண்மீது விழுந்துகிடக்கும் நிலைமையைக் கண்டு, ஆறாத்துயரோடு அவன்மேல் விழுந்து அழுது மூர்ச்சித்தாள். மற்ற மனைவியரும் தங்காதலனைக் கண்டு, மயிற் குழாங்கள் நிலத்தில் வீழ்ந்து புரளுவது போல வீழ்ந்து, அரற்றி யழுது புலம்பினார்கள். பின்னர் அசுவ கண்டனைப் பஞ்சும் துகிலும் பூம்பட்டும் பரப்பிய பள்ளி

யிற்கிடத்திச் செந்தீ வளர்த்தித் தகனம்செய்தனர். அவ்வாறே இறந்த சுற்றத்தார்க்கும் தீக்கடன் செய்து முடித்து, அசுவகண்டனது தேவியர் இரத்தினபல்லவ மடைந்து, அங்குத் தங்கள் மாங்கல்ய சூத்திரங்களைக் களைந்து கைம்மை விரதம் நோற்றிருந்தனர். இது நிற்க.

நெருப்பைப்போலு மொளிவீசுகிற சக்கராயுதத்தைக் கையிற் பெற்ற திவிட்ட குமாரன்மீது வானவர் அவன் கொண்ட வெற்றியின் பொருட்டு, தேவதுந்துபி முழக்கிப் பூமாரி பொழிந்து வாழ்த்தினர். அப்போது "திவிட்ட குமாரன் அசுவகண்டன் விடுத்த தெய்வப் படைகளை யழித்து, அவன்விட்ட சக்கராயுதத்தைத் தன்கையிற் பற்றிக் கொண்ட அவனது திறம் மிக்க வியப்புடையது" என்னும் பேரொலி வானினின்று மெழுந்தது. இறவாது நின்ற மற்ற விஞ்சையர்கள் திவிட்டன் பாதங்களில் வணங்கி அபய மிரந்தனர். இளைய நம்பியும் தன்னைப் பணிந்த வித்யாதரர்களை நோக்கி, "நீங்கள் அஞ்சாது உங்கள் நாட்டிற்குச் சென்று சுகமே வாழ்ந்திருங்கள்" எனச் சொல்லி, விடை கொடுத்ததுமன்றி, மற்றைப் பகைவராகிய விஞ்சையர் யாவரும் இதை அறியும்படி முரசறைவித்தான்.

பிறகு திவிட்டன் கருடனைவிட் டிறங்கித் தன் முன்னோனாகிய விஜயனுடன் பாடிவீடடைந்து, அங்குத் தன் பிதாவாகிய பயாபதி வேந்தன் பாதங்களில் வணங்கினான். அரசனிருவரையும் தழுவிக்கொண்டு ஆசி கூறி மகிழ்ந்தான். அப்போது பயாபதி வேந்தன் அருகிருந்த மற்ற அரசர்களின் முகநோக்கி, "நேசர்களே! குறைவில்லாத வீரம் நிறைந்த இக்காளையரின் தந்தையென்று யாவரும்சொல்லும் படியான ஒரு பெரும் புகழை முன்செய்த தவத்தால் பெற்றுள்ளேன். ஆகையால் இவர்களது மணக்கோலங் கண்ட

223'47

யான் முடிக்கோலமும் காண விரும்புகின்றேன்" என்று மொழிந்தான். சடியரசன் முதலிய [illegible] அதுவும் செய்யத் தக்கதே யென்று கூற, அப்புதல்வர்களுக்குக் கிரீடாபிஷேகமெனக் கூறி, நகரை அலங்கரிக்கும் பொருட்டு முரசறைவித்து, வேற்றரசர்களுக்குத் திருமுகம் அனுப்பி வைத்தான்.

போதனமா நகரில் முடி சூட்டுவதற்கென்று அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் அந்நகரின் தலைவர்களும் வேற்றரசர்களும் வந்து குழுமினர். அவ்வேளையில் குலமுதல்வர்கள் கங்கை யமுனை சிந்து முதலிய புண்ணிய தீர்த்தங்களைப் பொற்குடங்களில் கொண்டுவந்து, மங்களவாத்யம் முழங்க விஜய திவிட்டர் இருவருக்கும் மஞ்சனமாட்டினர். பிறகு வேதியர் அக்கினி வளர்த்தி, வேதவிதிப்படி ஓமகாரியங்களைச் செய்தனர். திருமகள் சேர்தற்குரிய திவிட்ட குமாரனையே பட்டத்தரசனாகக் காப்பிட்டு, "உத்தரசேடிக்கரசனாகிய அசுவகண்டனைக் கொன்று அவனாழியைக் கைக் கொண்டதால் இவனே வசுதேவன் புதல்வனாகிய கிருஷ்ண மூர்த்தியின் அம்சம் பெற்றுச் சக்கரவர்த்தியாயினன்" என்றுரைத்து, ஒரு திவ்விய இரத்தினகிரீடத்தை அவன் சிரசில் சூட்டினர். விஜய குமாரனுக்கும் அவனது உருவத்தாலும் படைக்கலத் திறத்தாலும் அவனே பலராமனம்சம் பெற்றவனெனக்கூறி, வயிரமுடியொன்று அணிவித்தனர். அங்கு வந்துள்ள மறையவரும் பெரியோரும் ஆசி வழங்கினர். அவ்வேளையில் முன்னிருந்த சங்கு, சக்கரம், வில்லோடு வாளும் கதையும் வந்துற்றன. ஆகவே பாஞ்சஜன்யம், சுதரிசனம், சாரங்கம், நாந்தகம், கௌமோதகி என்னும் ஐம்படைகளையும் தரித்துக் கொண்டு, திவிட்டன் உண்மைக் கிருஷ்ண மூர்த்தியாகவே விளங்கினன். அவைகளுடன்

சங்கநிதி பதுமநிதி முதலிய தெய்வ நிதிகளும் வந்தடைந் தன. முடிசூட்டுற்சவம் நடந்தேறிய பின்னர் திவிட்ட நம்பி பஞ்சாயுத தெய்வங்கட்கும் தனித்தனிக் கோயில்கள் நிர்மித்து, அங்கு அத்தெய்வங்களை வீற்றிருக்கச் செய் தான். கருடபகவானும் தனக்கென்று அமைத்த கோயி லில் போய் அமர்ந்திருந்தான்.

இவ்வாறு செய்வனவெல்லாம் செய்த பின்னர்த் திவிட்ட குமாரன் தனது மந்திரி முதலியோர் புடைசூழத் திருவோலக்கத்தில் வீற்றிருக்கும் பொழுது, புராண நூல் களை முழுதுங் கற்றுணர்ந்த புலவர்கள் அரசனுக்கு வாழ்த் துக் கூறத் தொடங்கினர். "வேந்தர் பெருமானே! தொன்று தொட் டின்றுவரையும் அரசுபுரிந்த பெருவேந்தர்கள் சரித் திரங்கள் நமது புராண நூலிற் கூறப்பட்டுள்ளன. அதில் பலதேவன் அம்சம்பெற்ற விஜயனென்பவனுடன் பிறந்து, எல்லாப் பகைவர்களையு மொழித்து அரசேற்று, அருங் கலமும், சங்கநிதி பதுமநிதி என்னுமிரு நிதியும், பதினயி ரம் ஜனத்திரளும், பல நகரங்களும் வேந்தர் கூட்டமும் பெற்று, திவிட்டகுமாரன் ஒரு பெருங்குன்றத்தைப் பறித் துக் கையிலேந்துவான் என்று கூறியிருக்கிறது" என்று உரைத்தார்கள். இளையநம்பி அவ்வார்த்தைகளைக் கேட்டு, "இப்பூமியை எனக்கு முன்னம் அரசு செய்த வேந்தர்கள் சமுத்திரக்கரையின் மணலினும் பலராவர். எளியேனும் அவர்களில் ஒருவன் தானே! எனக்குப் பின் இன்னம் எத் தனை யரசர்களை இவ்வுலகம் காணப்போகின்றதோ!" என அவர்கள் மனமகிழும்படி மொழிந்திட்டு, சிம்மாசனத் தினின்றுமிறங்கி, சிற்றரசரும் பரிவாரத்தாரும் சூழ்ந்து வரக் **கோடிமாசிலை** என்னும் குன்றினை யடைந்தான். அங்கு இரத்தின கிரீடத்தையணிந்த திவிட்ட குமாரன் முழங்

தாள் மடித்து, இருகாங்களையும் நிலம் குழியும்படி அழுத்தி யூன்றி, எல்லாருங் கண்டு அச்சமும் வியப்புங் கொள்ளு மாறு அம்மலையை வேரோடும் பெயர்த்துக் கையிலேந்திச் செம்மாந்து நின்றான்.

இவ்வற்புதச் செய்தியைக் கண்ட அங்குள்ளார் யாவ ரும் இவ்விளையநம்பியே அன்று கோவர்த்தனத்தைப் பறித் தெடுத்த வாசுதேவனெனக் கூறித் தலைசாய்த்து வணங் கினார்கள். பின்னர்த் திவிட்டநம்பி அக்கோடிக் குன் றத்தை மீளவும் அது இருந்தவிடத்தில் ஊன்றிவிட்டுத் தனது களிற்றியானையின்மீ திவர்ந்து, மங்கல வாத்தியங் கள் முழங்க நகரிற் பிரவேசித்து வலமாகச்சென்று, வாழை கமுகு முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட தெருக்கள் வழியாய் வந்து அரண்மனையிற் புகுந்தான். அங்குக் கன் னிப் பெண்கள் திவிட்டன்மீது மலர்களும் பொற் சுண்ண முந்தூவி வாழ்த்தினர். அப்போது சூரியன் அஸ்தமித்தது. அரசர்களும் மற்றுள்ளாரும் தத்தம் மனை புக்கிருந்தனர்.

மறுநாள் தினகரன் தோன்றியதும், இன்று சுயம்பிர பைக்குப் பட்டத்துத் தேவி என்னும் நாமம் சூட்டுவதென நகரெங்கும் முரசறைவித்தனர். மிக்க வைபவத்துடன் சுயம்பிரபைக்கு அப்பட்டம் சூட்டப்பட்டது. பின்னர்த் திவிட்ட வேந்தன் தனது மாமனாகிய சடியரசனுக்கு வேண் டும் சிறப்புச் செய்து, வெள்ளிமலை மீதுள்ள வித்யாதர உலக முழுவதையும் அவனே யாளும்படி கொடுத்துப் பிறகு அச்சடியரசனை அரசமரியாதையுடன் பின் சென்று வழி யனுப்பி வந்தனன். வேற்றரசர்கள் வந்து வணங்கவும், தேவர்கள் நாற்றிசையும் காவல்புரியவும், இருநிதியும் ஏவல் செய்யவும் திவிட்ட குமாரன் சுயம்பிரபையோடு இனிது வாழ்ந்திருந்தான்.

8. சுயம்வரச் சருக்கம்.

திவிட்டகுமாரன் சுயம்பிரபையுடன் சந்தோஷமாய்க் காலம் கழித்து வருநாளில், அவள் தனது பிறந்த அகத்தினின்றும் கொண்டுவந்து வைத்து வளர்த்த பாரிஜாதம் மலரரும்பியது. அதையுணர்ந்து சுயம்பிரபை அப் பாரிஜாதப் புதல்வனுக்குக் காமவல்லியாகிய கொடிக் கன்னிகையை வதுவை செய்து அவ்வுற்சவங் காண விருப்புற்ருள். அதன் பொருட்டுத் தனது தோழி ஒருத்தியை நோக்கி, "நாம் வளர்த்த பாரிஜாதம் அரும்பிய செய்தியை நமது தலைவருக்கு விண்ணப்பம் செய்து, அவர் பூங்காவனத்துக்கு எழுந்தருளுமாறு வேண்டினேன் எனச் சொல்லுவாய்" எனக்கூறி விடுத்தனள். அச்சேடியும் தனது தலைவியின் கட்டளைப்படி அரசனைக்கண்டு வணங்கி வாழ்த்தி, "ஐயனே! முன்னம் அடியேங்கள் நீரூற்றிப் புதல்வனைப் போல வளர்த்துவந்த பாரிஜாத விருக்ஷம் இப்போது அரும்பி மலர் நிறையப் பூத்தது; அதற்குக் காமவல்லிக் கொடியை மணம் முடித்தலாகிய விழாவினைச் செய்து களிக்கும் பொருட்டுத் தாங்கள் அங்கு எழுந்தருள வேண்டுமென்று தேவியார் விண்ணப்பம் செய்து கொண்டனர்" என்றுரைத்தாள். பொழில் வளங் காணுதற்குரிய அவ்வுரை கேட்ட இளையநம்பி குறுநகை செய்து, "நல்லது தேவியாரின் விருப்பப் படியே அவளது மக்களைக் காண அங்கு வருவோம்" எனச் சொல்லி யனுப்பினன். தோழியும் தன் தலைவியிடம் சென்று அரசர் விழாக்காண வருவதைத் தெரிவித்தனள்.

திவிட்டகுமாரன் தனது பத்தினியின் விருப்பை நிறைவேற்றும் பொருட்டுப் பூங்காவனத்தை நோக்கிப் புறப்படவும், ஒரு விதூஷக வேதியன் எதிர்ப்பட்டான்.

இருசெவிகளிலும் அணிந்த குண்டலங்கள் ஒளி வீசவும், சிகையிலே இறுகப் பிணித்த பூமாலை நறுமணங் கமழவும், இடையில் ஒரு கையையூன்றி, மற்றொரு கையால் தனது மேலாடையின் ஒரு நுனியை சற்றுயர்த்திப் பிடித்து, வெண்ணகைதோன்ற நகைத்து, தனது சரீரத்தைச் சிறிது வளைத்து, அரசன் மகிழ்வுகொள்ளும்படி இசையும் தாளமும் ஒன்று படும்படி பாடி நர்த்தனம் செய்துகொண்டும், அசதியாடலாகிய நகைச் சொற்களைப் பொழிந்து கொண்டும் ஆடிவந்து அரசன் எதிரில் நின்ருன். இராஜகுமாரன் இவனைக் கண்ணுற்று, நன்றுநன்றெனச் சொல்லி நகைத்து மகிழ்ந்தான். அப்போது அந்தணன் தனது வயிற்றைப் பிசைந்து கொண்டு பூமியில் விழுந்து, தேகமெலாம் தூசு படியும்படி புரண்டு புரண்டு பெருமூச்செறிந்தான். அரசன் அதைக் கண்டு, அவன்மீது மிக்க இரக்கங்கொண்டு, “ஏனிவ்வாறு வயிற்றைப் பிசைந்து கொண்டு வருந்துகின்ருய் ?” என்று வினவ, அதற்கு விதூஷகன், “ஐயா! மோதக வாதையினல் வயிறு உள்ளிடமெலாம் ஊதியூதி மோதுகின்றது” என்ருன். “மோதகங்கள் எப்போது தின்றனை?” என்று வேந்தன் வினவவும், வேதியன் “மோதகம் தின்றது என்றுமில்லை. இன்று அரசியாரியற்றும் பாரிஜாத விவாக மகோற்சவத்தில் நிறையப் புசிக்கப் போகின்றேன். அதனை நினைந்து நினைந்து என் வயிறு குமுறுகின்றது” என்ருன். திவிட்டன் குலுங்க நகைத்துச் சிரமசைத்து, “அந்தணனே! மோதகங்கள் வேதாத்தியயனம் செய்த பிராமணர்க்கேயன்றி மற்றையோர்க்குக் கொடுக்க மாட்டார்களே” என்று சொல்ல, விதூஷகன், “நான் அவர்களையெல்லாம் வென்றுவிடுவேன்” என வீரம் பேசினன். அரசன் “உனக்கு வேதத்தில் ஒரு அக்ஷரமும் தெரியாதே! நீ எவ்வாறு அவர்களை வெல்லப்

போகின்றாய் ?'' எனக்கேட்டனன். விதூஷகன் "ஐய ! அவர்கள் வாயினின்று மோதினால் நான் கையினின்று மோதுவேன். ஆகையால் அவர்கள் என்னோடு எதிர்த்து நிற்கமாட்டார்கள்'' என்று சொல்லி நகைத்தான். இவ்வாறு விதூஷகன் பல விகடங்களைச் செய்துகொண்டு உடன்வர, திவிட்டன் அப்பூங்காவில் புகுந்து நடந்தான்.

அச் சோலையில் பல மரங்களினின்றும் பழுத்து வீழ்கின்ற கனிகளைக் கண்டு விதூஷகன் அவைகளை யெடுத்துத் தின்பதற்கு மிக்க ஆசைகொண்டவனாய், இக்கனிகளைத் தின்று எனது வயிறு நிரம்பேனா? கண்ணிற் கண்டதனால் தின்றதைப் போலாமா? என்று வாயில் நீரூற அங்கங்குக் கனிகளைக் குவித்துக் கொண்டான். பிறகு அரசனைத் தொடர்ந்தோடிச் சென்று, "வேந்தர் வேந்தே! நல்ல நல்ல கனிகள் கொள்ளை கொள்ளையாக இருக்கின்றன. அவைகளை ஒல்லை ஒல்லை தின்று மெல்லமெல்லப் போவோம். இரும் இரும்'' என்று வேண்டிக்கொண்டான். அப்போது அரசன், "இங்கு வேண்டாம். இன்னும் நல்லகனிகள் முன்னுளிருக்கின்றன. அங்குப் போய் உண்போம் வா'' என்று கூற, அந்தணனும் ஆடிப்பாடி யரசன்பின் சென்றான். ஒருபுறத்தில் மரங்களினடியில் காய்களும் கனிகளும் கடியுண்டு பலவாறு சிதறிக்கிடப்பது கண்டு, மனம் பதைத்து, அரசனை நோக்கி "வேந்தர் பெருமானே! இவ்வநியாயம் எங்கேனும் உண்டோ? இச்சோலையின் காவலாளர்கள் இங்கு நன்றாகக் காவல் புரிவதில்லை. சோரர்களின் செய்கையைப் பாருங்கள்'' என்று அக்காய் கனிகளைக் காட்டினன். பின்னர் மரங்களின் மீது இருந்து உரத்துக் கீச்சிடுகின்ற பல கருங்குரங்குகளைக் கண்டு வேந்தனிடம் மெதுவாகச் சென்று, "அதோ கள்வர்கள்! கள்வர்கள்!!'' என்று சமிக்

கையால் தெரிவித்தான். அரசன் அக் குரங்குக் கூட்டத்தைக்கண்டு சிரித்து, "ஐயரே! அவர்கள் பலர்; நாமிருவர். ஆகையால் நாம் இப்போது அவர்களை ஒன்றும் செய்யாமல் விடுத்துச் சென்றுவிடுவோம். தேவியாரிருக்குமிடம் சீக்கிரம் செல்ல வேண்டும் வாரும்" என அழைத்துக்கொண்டு சென்றான்.

வழியில் அங்கோர் மகிழ மரம் கரிய நிறத்தோடிருப்பதைக் கண்டு, "இம்மரம் தாள்முதல் இடைவரையும் கரிய இருப்புக் கவசம் தரித்திருக்கின்றதே! இவ்வனத்தில் மரங்களும் போரைச்செய்யுமோ? அதைக் காண எனது உடல் நடுங்குகின்றது. என்னைக் காப்பாற்றும்" எனச் சொல்லிக்கொண்டு அரசன் பக்கலில் ஓடினான். அப்போது அரசன், "இங்குப் போர் ஒன்றுமில்லை, அஞ்சற்க. இம்மகிழ மரம் மலரும் பொருட்டுப் பஞ்சைப்போன்ற மிருதுவான அடிகளையுடைய வஞ்சியர் தமது பவளவாயால் தம்பல வமுதை அதன்மீது உமிழ, அதன் வாசனையாற் கவரப்பட்டு, சுரும்பினங்கள் அம்மரத்தை நிறைய மொய்த்துக்கொண்டிருக்கின்றன. இதுவே யன்றி அம்மரம் போர்க்கவசம் பூண்டிலது" என்றுரைத்தான். பின்னும் அங்குள்ள ஓர் அசோக மரத்தினைக் கண்டு விதூஷகன், "ஐயா! இங்கு ஒரு விநோதம் காண்கிறேன். அசோகு நுனியிலன்றோ துளிர்களை விடக் கண்டிருக்கிறோம். இங்கு இம்மரத்தினடியிலும் செந்துளிர்விடக் காரணம் என்னோ?" என வினவினான். அதற்கு அரசன், "இம்மரம் மலரெடுக்கும் பொருட்டு ஓர் உத்தம ஸ்திரீ செம்பஞ்சு ஊட்டிய தனது பாதங்களினால் உதைத்துத் தோகதம் கொடுத்திருக்கின்றாள். அது அவளது செவ்விய அடிச்சுவட்டின் குறியே யன்றி அசோகம் துளிர்த்த துளிரன்று. இதை நீ அருகில்சென்று காண்பாய்"

எனச் சொல்லி அவன் கொண்ட சந்தேகத்தைத் தெளிவித்தான். உடனே சிறிது யோசிப்பவனைப்போல நடித்து, "ஐயா! உமது காதன் மனைவியார் பாதம் பட்ட மாத்திரத்தில் நிறைய மலர்ந்த அஃறிணைப் பொருளாகிய இவ்வசோகின் செய்கை அவரை மேவியபோது மலருகின்ற உமது முகத்தின் செய்கையை வென்றது. ஆகையால் அசோகமே மிக்க ஏற்றமுடையது" என்று புகழ்ந்தான். அதைக்கேட்டு அரசன் ஒரு பூவினால் அந்தணனை யடித்தான். அவ்வாறு புடையுண்ட அந்தணன், "நன்று நன்று! உமக்கு வேறொரு மங்கை உரியவளா யிருத்தலைக் கூற அதன் பொருட்டு நீவிர் என்னைத் தண்டித்தீரன்றோ? இதைத் தேவியார்க்குரைத்து உமக்குத் துயர் விளைவிக்கின்றேன்; பாரும்" எனச் சொல்லிப் பயமுறுத்தினன். அரசன் நகைத்து, அவனது கரங்களைப் பிடித்துக்கொண்டு, "ஐயரே! அவ்வாறு செய்ய வேண்டாம். இனி இவ்வாறு உம்மைப் புடைக்கேன்" என மொழிந்தான்.

பின்னர் இருவரும் சிறிது தூரம் சென்று, மன்னன் சிறிதிளைப்பாறும் பொருட்டு அங்கொரு சிலாதலத்தில் வீற்றிருந்தான். அந்தணனும் அருகில் நின்றிருந்தான். ஒரு நிமிட மிவ்வாறு அசையாமல் நின்றிருந்து, பின்னர் விதூஷகன் எதையோ கண்டு மருண்டவனைப்போல உடல் நடுங்கியோடினன். "யாது கண்டாய்? ஏன் ஓடுகிறாய்?" என அரசன் வினவ, வேதியன் "இம்மேடையில் ஒரு பூதம் குடியிருக்கின்றது. அது நம்மைப் புடைத்துத் தின்றுவிடும். ஆகையா லிந்த இடத்தைவிட்டுப் போய்விடுவோம், சீக்கிரம் எழும்" என்றான். மன்னன் "நீ கண்ட பூதத்தினுருவைக் கூறுவாய்" எனக்கேட்க, விதூஷகன், "வேந்தே! காதிலே குண்டலங்களை யணிந்துகொண்டு, தலையிலே மாலை

யைச் சூடிக்கொண்டு, ஒரு கையை இடையிலே வைத்துக் கொண்டு மற்றொரு கையைத்தூக்கி யசைத்து உன்னை வா, வா என்கின்றது" எனச் சொன்னான். அரசனிதைக் கேட்டதும் ஓசைப்பட நகைத்து, "அந்தண! அது பேயு மன்று, பூதமுமன்று, உமது நிழலேயாகும். அதையேகண்டு நீ பயங் கொண்டாய்" என்றான். விதூஷகன் ஒப்பாது, "அது என் நிழலானால் என்னிடத்திலன்றோ யிருக்கும்? மேடையின் மீதேறி யிருக்குமோ?" எனக்கேட்டான். வேந்தன் பின்னும் நகைத்து, "ஐயரே! இது நின்னிழல் என்பதற்குச் சந்தேகமில்லை. நீவிர் செய்யும் செயல்களை யெல்லாம் இந்நிழலும் செய்கின்றது. அதனால் அறிந்து கொள்ளும்" என்றான். பிராமணனும் அவ்வாறே தனது கரம், கால், சிரம் முதலியவைகளை யசைத்துக் கோாணி களைச் செய்ய, அந்நிழலு மவ்வாறே செய்வதைக் கண்டு நிழல்தானெனத் தெளிந்து, அரசனருகி லமர்ந்திருந்தான்.

அவ்வேளையில் சுயம்பிரபை அந்தப்புரத்தினின்றும் புறப்பட்டுச் சேடியர்களும் காவற் பெண்டிரும் தன்னைச் சூழ்ந்து வர, அன்னம்போல மெல்ல நடந்து பூங்காவி னுள்ளே பிரவேசித்தனள். அங்கு உலாவி வரும்பொழுது அரசன் வந்திருப்பதை யுணர்ந்து, அவரறியாமல் விளை யாட நினைந்தவளாய், ஒரு விஞ்சையினால் தன்னுருவை மறைத்துக்கொண்டு, நூபுரவொலியை யடக்கி மெதுவாய் நடந்து, அரசன் பக்கலில் வந்து நின்றாள். அவள் வரவை யறியாத விதூஷகன், "அரசே! அவ்வசோக மரம் மலரும் பொருட்டு அதன்மீது தன் காலை வைத்த வனிதையை யறி வையோ?" என வினவினன். அரசனும் "ஆம் அறிவேன். பவளத்துண்டம் போன்று சிவந்து, செறிந்து, திரண்டுள்ள விரல்களைப் பெற்றனவாய், செவ்விய தசைப்பற்றுள்ளன

வாய் அமைந்த அடிச் சுவட்டைத்தீட்டிய அடிகளின் அழகினால் அவள் மேனியையு மறிவேன். அம்மங்கை யரசனுக்குரியவள்'' என்றான். இவ்வார்த்தைகளை மறைந்து கேட்டிருந்த சுயம்பிரபை தன்னை யன்றி அரசனுக்கு வேறோர் காதலியு மிருக்கின்றாளென நினைத்து, வெகுண்டு, உண்மை வடிவத்தோடும் அரசனுக் கெதிரில் தோன்றிக் கண் சிவக்க, நெற்றி வியர்க்க, உதடு துடிக்க நின்றாள். இவ்வாறு தேவியார் திடீரென அங்குத் தோன்றியதையும் அவள் முகத்திற்கொண்ட கோபக் குறிகளையும் கண்டு பயந்து, அந்தணன் அங்குச் சோலையுட் புகுந்தொளிந்தான்.

திவிட்ட நம்பியும் தன் வார்த்தைகளை நிறுத்திக் கொண்டு அரசியை நயமொழிகளால், "இங்கு உனக்கு நேர்ந்த வருத்தம் யாது?" என வினவினான். கோபத்தின் மிகுதியால் மொழிகுழற அரசனை நோக்கி, "தலைவ! யாதும் வருத்தமில்லை. 'பவளத்துண்டம் போன்று சிவந்து செறிந்து திரண்டுள்ள விரல்களைப் பெற்றனவாய், செவ்விய தசைப்பற் றுள்ளனவாய் அமைந்த அடிச் சுவட்டைத் தீட்டிய அவளது மேனியையும் அறிவேன். அம்மங்கை யரசனுக்குரியவள்' என்று உரைத்தீ ரன்றோ? அவ்வனிதையுடன் கூடி விளையாடி யிருங்கள். யான் எனது அந்தப்புரம் செல்கின்றேன்'' எனச் சொல்லிப் புறப்பட்டனள். அப்போது அரசன் அவள் எதிரில் சென்று, இரு கரங்களையும் பிடித்து வணங்கினான். சுயம்பிரபை "தலைவ! இவ்வஞ்சகம் எங்கு கற்றீர்? என்னிடத்தில் உமது மாயம் பலியாது. போய்வாரும்'' என்று சொல்ல, அரசன் "என் அன்பே! அவ்வாறு என்னைப் பழித்துக் கூறுவது தகுதியோ? ஏதோ விதூஷகன் கேட்க வேடிக்கையாகப்ப தில் சொன்னேனேயொழிய வேறொன்றுமன்று.

இதை நன்றாக ஆலோசித்துப் பார். பின் என்மீது குற்ற முள்ளதாயின் நீ விதிக்குந் தண்டனையை ஏற்றுக் கொள்ளு கின்றேன்" என்று இனிமையாகப் பேசினான். பிறகு சுயம்பிரபை சினம் ஒருவாறு தணிந்து நடந்ததை யறிந்து, இது அரசன் குற்றமன்று, அந்தணன் செய்த விஷமமென் றுணர்ந்து, அவ்வேதியனைப் பிடித்து வரும்படி சேடியர் களை யனுப்பினாள். அந்தப்புரப் பெண்கள் அவ்வாறே சென்று ஒளிந்து நிற்கும் விதூஷகனைக் கண்டு, அவனை மடி பிடித்திழுத்து வந்தனர். வேதியன் மெய்ந்நடுங்க, கண்கள் மருள, பயந்து ஒடுங்கி நிற்கின்ற கோலத்தைக் கண்டு அரசி முதலாயினோர் உடல் குலுங்க நகைத்து, "இவனை மலர்கள் நிறையத் தொடுத்த மாலைகளினால் பிணித்துச் சிறை செய்யுங்கள்" எனக் கட்டளை யிட்டு, பூஞ்சோலையி னுள்ளே சென்றாள். அவ்வேளையில், அரசன் தேவியை நோக்கி, "காதலி! இவ்விதூஷகன் குற்றமற்றவன். ஆகை யால் தயை செய்து இவன் விலங்கைத் தறித்து விடுதலை செய்வாயாக" என வேண்டினன். சுயம்பிரபை முற்றும் சினம் தவிர்ந்து குறு முறுவல் பூத்து அவ்வாறே செய்வித் தனள். பின்னர் வலையினின்றும் விடுபட்ட மானைப்போல, மாலைத் தளையினின்றும் விடுபட்ட விதூஷகன் துள்ளிக் குதித்துக் குதூகலித்து, அரசியிடம் வந்து பல வேடிக் கைகளைச் செய்திருந்தான்.

ஆயினும், விதூஷகன் வாயும் கையும் ஒரு நிமிஷமே னும் செயலற்று ஒழிந்திருக்குமோ? அவ்வேதியன் அங்கு மரங்களில் கனிந்து காற்றிலசைகின்ற இன்சுவைப் பழங் களைக் கண்டு அவைகளை யுண்ண விரும்பி,

'ஓடுமே மன மோடுமே
கூடு மேதனி கோதையாய்!

காடு சேர்கனி காண்டொறும்
ஓடு மேமன மோடுமே'

எனத் தாளத்துடன் பாடி யாடினன். உடனே தேவி யார் அவன் விரும்பிய கனிகளை யழைத்து அவனுக்கு உண்ணக் கொடுத்தனள். பின்னர் எல்லோரும் பாரிஜாத மாமிருக்கு மிடம் சென்று, அங்கு மண விழவினைச் செய்யத் தொடங்கினர்.

அரசனும் அரசியும் ஆங்கோர் பொன்மேடையி லமர்ந்தனர். பின்னர் அரசி தன்னுடன் வந்த மகளிரைக் கொண்டு பாரிஜாத விருக்ஷத்திற்கு யந்திரத்தினல் நீரைப் பொழிந்து அபிஷேகம் செய்வித்து, மலர்மாலை சந்தனம் ஆடை ஆபரணங்க ளணிவித்து மணக்கோலம் செய்வித்தாள். அவ்வாறே காமவல்லியையும் அலங்காரம் செயவித்தாள். பாரிஜாத விருக்ஷத்திற்குப் பொழிலரசு என்றும், காமவல்லிக்குப் பொழிலரசி என்றும் பட்டமளித்து, விதிப்படி இவை இரண்டிற்கும் மணம் முடித்தனர். யாவரும் இவ்வுற்சவங் கண்டபின்னர்ப் பொழில் விளையாட்டிற்குச் சென்று மலர் பறித்தல், மாலை கட்டல், கட்டிய மலர்ச் செண்டால் ஒருவரை யொருவர் எறிந்து விளையாடல் முதலியன செய்து, பிறகு மலை விளையாடலாகிய மலை யெதிர் கூவல், துள்ளிக் குதித்தல், ஒளிந்து தேடுதல் முதலியவைகளைச் செய்து மகிழ்ந்தனர். அப்போது சூரியன் உச்சியில் வரவும், எல்லோரும் சென்று பல பொய்கைகளில் நீர் விளையாடல் செய்து, ஈரம் புலர்த்தி, ஆடையணிகள் அணிந்து, பரிமளச் சாந்து பூசி, மலர்மாலை சூடி, பளிங்கு மண்டபம் எய்தி, அறுசுவை யுண்டி யருந்தி இன்புற்றிருந்தனர்.

அவ்வேளையில் சடியரசனிட மிருந்து ஒரு வித்யாதரத் தூதன் விசும்பாறாக வந்து அப்பொழுலிலிறங்கி, அரசனுத்

தரவினுல் மண்டபமடைந்து, திவிட்ட குமாரனையும் அரசியையும் பணிந்து நின்றனன். அரசன் தன் மாமனுதியர் க்ஷேமம் வினவி, பின்னர் வந்த காரியம் யாதெனவிசாரித்தான். தூதுவன் பின்னுமொருமுறை வணங்கித் தான் கொண்டுவந்த திருமுகத்தை அரசனிடம் கொடுக்க, அதைச் சுயம்பிரபையின் அருகிருந்த உயிர்த்தோழி வாங்கி வாசித்தாள். அதிற்கண்ட மணச்செய்தியை யறிந்து மிக்க களிப்படைந்து, அரசனும் தேவியும் தூதுவனுக்குப் பலபரிசுகளை யுதவி, பின்னர் அவர்கள் அவனை நோக்கி, "இம்மங்களச் செய்தியை உன்னுடைய வாக்கினுலே சொல்லக்கடவாய்" எனப் பணித்திட்டனர். தூதுவன், "செழித்த சோலைகள் சூழ்ந்த சுரேந்திரகாந்த மென்னும் நகரத்தை யாளும் மேகவாகனன் என்னும் வேந்தனது புதல்வி ஜோதிமாலையை எமதிளவரசன் அருக்ககீர்த்தி மணம்புரிந்தனன்" என்று கூறினுன். யாவரும் கேட்டு மிக்க சந்தோஷமடைந்து, தூதுவன் விடைகொண்டு சென்றபின், தத்தம் இருக்கையடைந்தனர்.

சுயம்பிரபை திவிட்ட குமாரனுடன் அமளியிலிருக்கும்பொழுது, குளிர்ந்த சந்திரன் ஆகாயத்தினின்றுமிறங்கி வந்து, தனது செவ்விய வாயினுட் புகுந்து வயிற்றில் தங்கியதாகக் கனவு கண்டு பயந்து, தன் நாயகன் தோளை யணைத்துக் கொண்டாள்.

அப்போது திவிட்டகுமாரன் அவளைத் தேற்றி, நீ இவ்வாறு அஞ்சுவதற்குக் காரணம் யாதெனவினவித் தெரிந்துகொண்டு, அதன் பயனை யுணர்ந்தவனுய், "பொற்பாவாய்! இக்கனவினுல் உனக்கோர் மங்களம் உண்டாகப் போகின்றது. ஒரு குடை நிழலில் இவ்வுலகத்தையாளும் ஒரு புத்திரன் உன் கர்ப்பத்திற் றங்கினுன். ஆகையால்

நீ அஞ்சற்க" எனக்கூறி அவள் பயத்தைப் போக்கினான். சுயம்பிரபையும் அச்சம் தீர்ந்து இனியுண்டாகும் பெரும் பேற்றினை நினைந்து சந்தோஷித்திருந்தனள். திவிட்டன் கூறியது உண்மைப்படுமாறு சந்திரன் ஆகாயத்தினின்றும் மறையச் சூரியன் அவளிடத்து இனியுதிக்கும் குழவியி னுருவங் காட்டிக் கீழ்த்திசையிற் றோன்றினான். இவ்வாறு அரசச்செல்வி கருப்பங்கொண்டு, உரிய காலத்தில் சூரியன் முதலிய கோள்கள் நற்றானங்களில் இருக்க, ஜோதி நட்சத் திரத்தில் ஒரு புத்திரனைப் பெற்றாள். அதை யுணர்ந்த பெற்றோரும் மற்ற சுற்றத்தாரும் களிகொண்டனர். பின்பு அச் சந்தோஷ சமாச்சாரம் நகரில் முரசறைந்து பரவ, நகர வாசிகள் எல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளை யலங்கரித்து விழாக் கொண்டாடினர். மங்கள வாத்தியங்கள் எங்கும் முழங்கின. அருக சினகரத்தில் உற்சவங் கண்டனர். எழுநா ளளவும் பொற்சுன்னமிறைத்து நெய்விழாக் கொண்டாடி னர். காவலிலிருந்தோர் யாவரும் சிறை நீங்கினர். அக் குழந்தைக்கு உரிய காலங்களில் நடத்தவேண்டிய நற்கரு மங்களை யெல்லாம் விதிப்படி முடித்து, **விஜயனென** நாமம் சூட்டிப் பெற்றோரும் மற்றுள்ள சுற்றத்தாரும் மிகமகிழ்ந் திருந்தனர்.

இப் புத்திரோற்பத்தியை தக்ஷிண சேடிமன்னனாகிய சடியரசனுக்குத் தெரிவிக்கும்பொருட்டுத் தூதனை யனுப்ப எண்ணியபோது, ஆகாய வழியாக வித்யாதர உலகத்தி னின்றும் ஒரு பொன்மயமான விமானம் வந்திறங்கியது. அச் செய்தியைக் கேட்டுத் திவிட்டன் தகுந்தவர்களை யனுப்பி, அதில் வந்தவர்களை அழைத்துவரக் கட்டளை யிட்டான். அவ்வாகாய ஊர்தியினின்றும் சில விஞ்சை மாதர்களும் கஞ்சுகமணிந்த காவலர்களும் இறங்கி வந்து,

திவிட்டகுமாரனைக் கண்டுவணங்கி அவன் முடிமீது "விளங்குக" என வாழ்த்தி நெய்யைச் சொரிந்தனர். அப்போது அங்கிருந்தோர்யாவரும் களிகூர்ந்தனர். பின்னர் இளையநம்பி அம்மாதர்களைச் சுயம்பிரபை யிருக்கும் அந்தப்புரம் செல்லுமாறு அனுப்பிவைத்தான். அவர்கள் அங்குச் செல்ல அவர்களுடன் வந்த ஒருவன் நம்பியை நோக்கி, "ஐயன்மீர்! உமது கொற்றம் என்றும் வாழ்க. எங்கள் தலைவனாகிய அருக்க கீர்த்தியின் தேவி ஜோதிமாலை யென்பவள் நித்திரை செய்யும்போது பூரணசந்திரன் இறங்கிவந்து, அவளது துடையின்மீதிருக்கக் கனவுகண்டு கர்ப்பவதியாகி,பின்னர் பத்துமாதமும் சென்று, நன் முகூர்த்தத்தில் ஒரு புத்திர ரத்தினத்தைப் பெற்றெடுத்தாள். அக் குழந்தைக்கு **அமிர்ததேசன்** என்னும் நாமகரணம் செய்தனர். அப்புதல்வனின் ஒப்பற்ற அழகினைத் தாங்கள் நேரிற் கண்டுகளிக்கும் பொருட்டுச் செய்தி சொல்லியனுப்பினர்கள். அதனால் நெய்யோடு தங்களைக் காணவந்தோம்" எனக்கூறினன். இவற்றைக் கேட்ட திவிட்டன் மிகவும் சந்தோஷித்து அவனுக்கும் அவனுடன் வந்தமற்றோர்க்கும் பல வெகுமானங்களைச் செய்து, அவர்களை யனுப்பிவைத்தான்.

திவிட்டகுமாரன் புதல்வனாகிய விஜயன் என்பவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து நடை கற்று, சிறுவர்களோடு சேர்ந்து சிறுதேர் உருட்டுதல் முதலிய பல விளையாடல்களைச் செய்து, பெற்றோரை மகிழ்வித்தான். ஐந்தாம் பருவம் எய்தவும் குலமுதல்வர்கள் நல்லோரையில் வித்யாரம்பம் செய்வித்தனர். விஜயன் குருகுலவாசம் செய்து கல்வி பயின்று வரும்போது, சுயம்பிரபை இரண்டாவது கர்ப்பங்கொண்டு ஒரு புத்திரியைப் பெற்றாள். திவிட்டன் முதலியோர் பேருவகை பூத்து,

அக்குழந்தைக்கு ஜோதி மாலை எனப் பெயரிட்டு, இச்சுப செய்தியைச் சடியரசனுக்குத் தூதுவர் மூலமாய்த் தெரிவித்தனர். தெய்வப் பெண்ணைப்போன்ற ஜோதிமாலையும் தினந்தோறும் வளர்ந்து வருகிற சந்திரனைப்போல மிக்க பொலிவுடன் விளைக்கு,இருத்தல், தவழ்தல், நிற்றல், நடத்தலாகிய பருவங்களைக் கடந்து வளர்ந்தாள். பின்னர்க் கழங்கு, அம்மனை, பந்து முதலிய விளையாடல்களைத் தன் பருவத்துக் கொத்த தோழியருடன் கூடி நிகழ்த்திப் பருவம் ஏற ஏற அழகுடன், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும், நல்லறிவும் பெற்று, கன்னிப் பருவமடைந்தனள். இதை யறிந்த திவிட்டன் முதலிய பெற்றோரும் மற்றப் பெரியோரும் அவள் மணத்தினைக் குறித்து நிமித்திகனை வரச்செய்து, அவனோடாராய்ந்து ஒரு சுபதினத்தை நிர்ணயித்துக்கொண்டு, அந்நாளில் அக் கன்னிகைக்குச் சுயம் வரம் நடத்தத் தீர்மானித்தனர்.

அதன் பொருட்டு ஒரு மண்டபம் நிர்மித்து, வேற்றரசர் யாவர்க்கும் மணவோலை யனுப்பினர். பிறகு மங்கல முரசினைச் சந்தனம் திமிர்த்து, மாலைசூட்டி யலங்கரித்து, களிற்றியானையின் முதுகிலேற்றிப் பறையறையும் வள்ளுவர் அந்நகரின் பல வீதிகளிலும் சென்று சுயம்வரத்தை யறிவித்தனர்.

வீதியில் அதிர்கின்ற சுயம்வர முரசொலியைக் கேட்டு, நகரமாந்தர் அனைவரும் உளமகிழ்ந்து தத்தம்வீடுகளை யலங்கரித்துக் கொண்டு, சுயம்வர நாளை எதிர்பார்த் திருந்தனர். திவிட்டநம்பியின் மைத்துனன் அருக்ககீர்த்தி தன்புதல்வனோடும் புதல்வியோடும் முதல்நாளிலேயே போதனநகரை யடைந்து, திவிட்டகுமாரனால் உபசரிக்கப் பெற்றுத் தனக் குரிய மாளிகையிற் றங்கியிருந்தான். சுபநாளில் அரசர்

குடித்தலைவர் யாவரும் சுயம்வர மண்டபத்துக்கு வரும்படி முரசறையப்பட்டது. உடனே வேந்தர்கள் பலரும் வந்து சுயம்வர மண்டபத்தமைத்த மஞ்சங்களின் மீதிருந்தனர். ஒரு பக்கத்தில் அருக்ககீர்த்தியின் குமாரனாகிய அமிர்த தேசன் முதலான விஞ்சைய அரசகுமாரர்கள் தங்கள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

சுயம்வர முகூர்த்தம் நெருங்கியதென நிமித்திகன்கூறத் திவிட்டநம்பி தனது குமாரத்தியை சுயம்வர மண்டபத்திற் கழைத்து வரும்படி கூறினான். உடனே அந்தப்புர மாதர்கள் ஜோதிமாலையைத் தூய வாசனை நீரினாலாட்டிப் பீதாம்பர முடுத்து, அன்றலர்ந்த மலர்மாலை சூட்டி, நல்லணிகளை அழகுபெறப் பூட்டி, பாதங்களிலே செம்பஞ்சூட்டி, மணக்கோலம் செய்வித்து மண்டபத்திற் கழைத்து வந்தனர். அப் பெண்ணணங்கும், வழியிற் பரப்பியுள்ள மலரின்மீது தனது மெல்லிய பாதங்களை வைத்து, அன்னம்போல மெதுவாக நடந்து தனக்காக அலங்கரித்திருக்கும் மேடையின் மீது கையிற்கொண்ட மலர்மாலையுடன் வந்து நின்றனள். அப்போது அக்கன்னிகைக்கு அவளது உயிர்த்தோழி அங்கு வீற்றிருக்கும் அரசர்கள் ஒவ்வொருவரையும் தன் கையிற் கொண்ட பொற்பிரம்பினால் சுட்டிக்காட்டி, அவர்களின் பெயரும், குலமும், நாடும், மற்ற அவர்க்குள்ள பெருமைகளையும் கூறத்தொடங்கி, முதலில் பூலோக மன்னர்களையும் அவர்களது புகழையும் விரித்துச் சொன்னாள். பிறகு வித்யாதர வேந்தர் வரிசையிற் சில அரசர்களைக் கூறிவிட்டு, நட்சத்திரங்களின் நடுவில் விளங்குகின்ற சந்திரனைப்போல அரசகுமாரர்களின் நடுவில்வீற்றிருக்கும்அருக்ககீர்த்தியின் புதல்வனைச் சுட்டிக்காட்டி, இவ்விளங்குமரன் உனது மாமன் மகனாகிய அமிர்ததேசன் என உரைத்தாள்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதும், மற்ற அரசர்களைக் கூறக் கேட்டபோது சிறிதும் கவனியாதிருந்த ஜோதிமாலைதனது அழகிய முகத்தில் குறுநகை தோன்ற, அக்காளையைத் தனது கடைக்கண்ணுற் சிறிது நோக்கினுள். அவ்வேளையில் இருவர்கண்களும் மனமும் ஒன்றுபட்டன. உடனே ஜோதிமாலை தாதியர் சூழ மெதுவாக மேடையினின்றும் இறங்கி, இளவரசன் முன்பாக வந்து, தன் கையிற்கொண்ட மாலையை அமிர்ததேசன் புயத்திலிட்டு நாணினுல் தலைகவிழ்ந்தாள். அப்போது மங்கள வாத்தியங்கள் முழங்கப் பெரியோர் வாழ்த்தினர். அம் மண்டபத்துள்ளார் யாவரும் சந்தோஷத்தா லாரவாரித்தனர்.

அவ் வேளையில் அக்கன்னிகையை மணம்செய்யக்கருதி வந்திருந்த சில வேந்தர்கள் அவள் ஒரு வித்யாதர அரச குமாரனை மணந்தது நினைந்து, அழுக்காறு கொண்டவர்களாய்ச் சிறிது முணுமுணுத்தனர். பின்னர் அவர்கள் விதியின் வலிமையை நினைந்து சினந் தணிந்திருந்தனர். இவ்வாறு தனது குமாரி தனது மைத்துனன் குமாரனையே விரும்பி மாலைசூட்டியதுகண்டு ஜ்விட்டன் மிக்க களிப்படைந்தான். பின்னர் மணமகனையும் மணமகளையும் அம்மண்டபத்தில் அழகிய மணப்பந்தரின்கீழ் அமரச்செய்து, அந்தணர்களால் வேத விதிப்படி அக்கினியில் மந்திரங்களுடன் ஓமக் கிரியைகளைச் செய்வித்து, தன் மகளை அமிர்த தேசனுக்கு நீர் வார்த்து மணஞ் செய்து கொடுத்தான். பிறகு தம்பதிகளிருவரும் பெற்றோரையும் மற்றப் பெரியோரையும் வணங்கி ஆசிபெற்றுத் தம்மாளிகை சேர்ந்தனர்.

இவ்வதுவை முற்றுப் பெற்றதும், அருக்ககீர்த்தி தன் புதல்வியாகிய **சுதாரை**க்கு ஒருநன்ஞளிற் சுயம்வரம் நாட்டினன். அன்று பல அரசர்களும் வந்து குழுமினர். முகூர்த்த

வேளை தோன்றுதலும் அருக்ககீர்த்தி தன் மகளைச் சுயம் வர மண்டபத்துக்கு அழைத்துவரச் செய்தான். அவ் விஞ்சையர் கன்னிகை இதுவரை யாருங் கண்டிராத பேரழ குடன் தோன்றி மறையாத மின்னலைப்போல் ஒளிவீச, அம்மண்டபத்தில் தோழியர் சூழ வந்து நின்றனள். அவ் வேளையில் அவள் உயிர்ப்பாங்கி ஒருத்தி, வந்திருக்கும் மன்னர்களின் பெயரும், நாடும், வளமும், குலமும், திறனுங் கூறிவந்து, திவிட்ட வேந்தனது குமாரன் விஜயனைக் கூறும் போது, தலையைச் சிறிது நிமிர்த்து நோக்கிப் புன்னகை தவழப் பிடியானைபோல நடந்துவந்து, அவனதகன்ற தோளிலே மாலை சூட்டினள். உடனே சுதாரைக்கும் திவிட்டன் மகனாகிய விஜயனுக்கும் முறைப்படி அக்கினி காரியங்களை நிறைவேற்றி மணம் முடித்தார்கள். பின்னர் அங்கு வந்திருந்த அரசர்கள் யாவரும் தங்களுக் குரிய மரியாதைகளுடன் விடை கொண்டு சென்றனர். மணமகன் விஜயனும் மணமகள் சுதாரையும் போதனமா நகரில் தங்கியிருக்க, முதற் சுயம்வரத்தின் மணமக்களாகிய ஜோதி மாலையும் அமிர்ததேசனும் வித்யாதர நாட்டில் தம தூர்க்குச் சென்றனர். பின்னர்த் திவிட்ட நம்பியும் சுயம் பிரபையும் சந்தோஷமாகக் காலம் கழித்து வந்தனர்.

---

9. துறவுச் சருக்கம்.

பயாபதி யரசன் புத்திர பௌத்திரர்களைப் பெற்று யாதொரு குறைவுமின்றி அரச பரிபாலனம் செய் திருக்கையில், ஒருநாள் திவிட்டனது வழித் தோன்றிய சிறுவர்கள் அவனை வந்தணுகினர். பயாபதி அவர்களை வாரி யெடுத்து அணைத்து, அம்மக்கட் பேற்றைத் தனக்குதவிய முன்செய்த தவத்தினை நினைந்து, பின்னும் அதைப் பெருக்

கிக்கொள்ளின் இன்னமும் நமக்குப் பெரும்பேறுண்டா மென்று நினைத்தான். "ஆயினும், இம்மையில் நாம் பெரும் பேறுபெறினும் அவை நிலைத்து நிற்குமோ? இவ்வுலகில் முன்னிருந்த அரசர் பலர் மிக்க செல்வமும் வலிமையும் படைத்துப் பகைவர் நடுங்க அரசு புரிந்தாரேனும் அவர் கள் ஒருநாள் இறந்தார்களே யன்றி, என்றுமிருந்தார் ஒரு வருமில்லையே.

'எரிபுரை யெழிலதாய இளந்தளி ரிரண்டுநாளின்
மாகத வுருவமெய்தி மற்றதுபசலை கொண்டு
கருகிலையாகி வீழ்ந்து கரிந்து மண்ணுதல்கண்டும்
வெருவிலர் வாழ்துமென்பார் வெளிற்றினை விலக்கலாமோ'

என்றபடி நெருப்பைப் போலப் பிரகாசிக்கின்ற இளந் தளிர் கள் இரண்டு நாட்களில் பசுமை நிறம் வாய்ந்து இலையாகிப் பின்னர் பழுத்துலர்ந்து சருகா யுதிர்ந்து கரிந்து மண்ணொடு மண்ணாய் மாறுதல் கண்டும், இல்வாழ்வை மெய்யென நம் புவார் பேதமையை விலக்க முடியுமோ? பிறந்தவர் பிறந்து சாலப்பெருகினர், பெருகிப் பின்னை யிறந்தனர் என்பதல் லால் யாவரும் இன்றுவரை உயிர் வாழ்ந்தாரில்லை. மேலும் நம்மால் மிக்க விரும்பப்படுகின்ற இவ்வுடலானது நாம் எண்ணியபடியன்றி, வேறாய் நரை திரை மூப்படைந்து, நாம் அதைப்பற்றப்பற்ற அது நம்மைவிட்டு நீங்குமாயின் அதைப்பற்றிச் சிந்திப்பதில் யாது பயன்? யாதுங் குறை வின்றி அன்னபானாதிகளால் போஷித்து, மலர் சூட்டி, தூநறுஞ் சாந்தம் திமிர்த்து, உடுப்பன உடுத்து, மிக்க அபி மானத்தோடும் வளர்த்துவரு மிவ்வுடல் கேவலம் ஒரு சிறு முள் தீண்டச் சிதைந்து, அழுக்கொழுகி யழுகி நாற்ற மடையு மெனில், இதன் பெருமையை யோசிக்க யோசிக்க நகையும் நாணமும் உண்டாகின்றனவே யன்றி வேறென்ன

புலப்படுகின்றது? அதுவுமன்றி இவ்வுடலைப் புறமாறிப் பார்ப்போமாஞல் அதன் அசுத்தம் அப்போது நன்கு வெளிப்படும். ஆகையால் நமது தேகத்தினுலாகும் பயன் ஒன்றுமில்லை. பின்னை மனிதனுய்ப் பிறந்தவன் செய்யத் தக்கது தவமேயாகும். அதனைக் காட்டிலும் சிறந்ததொன்றில்லை என்று இவ்வாறு சிந்தித்து, நிலையாததாகிய உடலைக் கொண்டே நிலைத்ததாகிய தவத்தைச் செய்யும்படி சுருதி கூறுகின்றது. நாம் இவ்வுடலுள்ளபோதே மறுமை பயக்கும் தவத்தைச் செய்வோம்" என உறுதிகொண்டு, அது நிறைவேறும்பொருட்டுப் பயாபதி வேந்தன் தன் மந்திரிகளுடன் ஆராயவெண்ணி அவர்களை வரவழைத்தான்.

அமைச்சர்கள் ஒருங்குகூடி, அரசனிடம் வரவும், யாவரும் மந்திரசாலையிற் சென்று, அரச னங்கோ ராசனத்தமர்ந்து, அமைச்சர்களையு மிருக்கச்செய்து, பின் வருமாறு பேசினன். "பெரியோர்காள்! பகை யரசர்களால் கவரப் படாததாய், கள்வரால் வெவ்வப்படாததாய் நிலைத்திடும் செல்வத்திற்கு ஏதேனும் ஊனம் வருமோ? வருமாயின் எவ்வாறு வரும்? அதைத் தடுத்து எவ்வாறு அமைப்பின் நாம் என்றும் அதை யனுபவிக்க முடியும்? இவைகளை ஆராய்ந்து விடைகூறுங்கள்" என்றுன். அதற்கு அமைச்சர்கள், "வேந்தர் வேந்தே! ஆண்மை, அருள் என்னு மிரண்டினுலும் அரசு செய்து, புயவலிக்குத் தக்க காவலு முளதாய், நல்வினைப் பயனும் கூடிக் கூற்றமுங் குறுகானுயின் செல்வத்தை எந்நாளும் அனுபவிக்கலாம்" என மொழிந்தனர்.

அரசன், "கூற்றுவனுற் கொள்ளப்படுவதெது?" என வினவ, அதற்கவர்கள், "கூற்றுவன் தன் தொழில் புரிந்து நம்முடைய உயிரையே கொள்ளைகொள்கின்றுன்" என்றனர்.

மீண்டும் அரசன், "அங்ஙனமாயின் கூற்றுவனிடம் தூத னுப்பி அவனது வருகையைத் தவிர்க்கலாமோ? அல்லது அவனைச் சார்ந்து பணிந்து விலகலாமோ? இவ்விரண்டு மில்லையானால் அவனோடு பொருது வெல்லலாமோ? எவ் வுபாயத்தால் அவனை யொழித்து நாம் உயிர் வாழலாம். ஆராய்ந்து சொல்லுங்கள்" என்று வினவினன். அதற் கவர்கள், "பலவகையான துன்பங்களைச் செய்து, பிணி களாகிய சேனையோடு வந்தெதிர்த்து, உயிரை வலிதிற் கவருகின்ற நமனை வெல்லு முபாயத்தை உண்மையாய் நாங்கள் அறியோம்" என்றார்கள்.

பயாபதி வேந்தன் சிறிதாலோசித்து, "ஆயின் நாம் எல்லோரும் வலிய நமன் கையி லிருக்கிறோம். நமக்குள்ள செல்வ மெல்லாம் பிறர் கைப்படுவனவாகும். ஆதலால், நாம் உலகினில் வாழும் வாழ்க்கையானது வெங்கட் புலி பொன்று தன்மீது பாய்ந்து வரும்போது ஒரு மான்கன்று இளம் புல்லைத் தேடி மேய்வதைப்போலாகும்" என்று உரைத்தான். "இயமன் உயிர் கவருவதற்கு ஓரளவு நேர மும் வேண்டுமோ? நாமெல்லோரும் யானை வாய்ப்பட்ட கவளம்போல அந்தகன் வாயிலகப்பட்டு, அவன் பற்களுக் கிரையாகின்றோம். ஆதலால் அவ்வியமன் உயிர் செகுக்கு தல் இமையளவினும் அதிவிரைவாகும்" என்றனர் அமைச் சர்கள். பின்னும் வேந்தன், தம்முயிர்க்கே ஆபத்துவரி னும் சிறிதும் கருதாது அரசனுக்குற்றது கூறும் அருங் குணவமைச்சர்களை நோக்கி, "அறிவுடையீர்! நம்முயிரைக் கொள்ளையிடும் நாளைக்கடந்து அடைக்கலம் புகுமிடம் வேறு உளதோ? கூறுங்கள்" எனக் கேட்க, அமைச்சர்கள் "அவ் வாறு பெறுதற்கு முற்றத் துறந்த முனிவரை வழிபட்டு, அவர்களது உபதேசத்தால் அருகன் திருவடியாகிய

அடைக்கலம் பெறுவதன்றி, வேறோர் உபாயம் இல்லை" என்றனர்.

எரிகின்ற விளக்கிலே நெய்யைப் பெய்து திரியைத் தூண்டினாற்போல அறிவால் மிக்க அறிஞர் கூற, வேந்தன் கேட்டு உளம் மகிழ்ந்து, இனி நான் அருகக் கடவுளின் வழிபாட்டினை எப்போதும் செய்யக்கடவேன் என்று சொல்லி ஏவலாளனை அழைத்து, "இன்று அருகக் கடவுளுக்கு விழா நாள்" என நகரெங்கும் முரசறையும்படி பணித்திட்டான். அச்செய்தியை யுணர்ந்த நகர மாந்தர்கள் அருகன் உற்சவங் கொண்டாடும்படி நீராடித் தூய வஸ்திரமுடுத்துப் பூப்பலிகொண்டு, திரள் திரளாய் அருகன் சினகரத்தை நோக்கி வந்தனர். இவ்வாறு நகரவாசிகள் புறப்படுதலும், பயாபதி வேந்தன் நீர்ப்பலி, விரைப்பலி, பூப்பலியாகிய இவற்றை யெடுத்துக்கொண்டு, யானை மீதிலமர்ந்து மங்கள வாத்தியம் முழங்கத் தனது பரிவாரத்தார் சூழ்ந்துவர, அருக சினகரத்தை யடைந்தான். அங்குக் கோபுர வாயிலில் யானையினின்றும் கீழே யிறங்கி, உள்ளே சென்று, அதனை வலமாக வந்து எதிரில் நின்றனன். அப்போது சினகரத்தின் கதவு திறக்க, அருகக் கடவுள் அரசனுக்குக் காட்சி யளித்தார். அவ்வேளை பயாபதி அரசன் தான் கொண்டுவந்த நீர்ப்பலி முதலியவற்றை முறைப்படி செலுத்தி, சன்னிதியின் முன்னின்று சிரத்திற் கரங் குவித்து; அருகக் கடவுளைத் துதிக்கத் தொடங்கினன்.

அன்பு உள்ளுருகி நிறைந்து கண் வழியே பெருகுவதுபோலக் கண்ணீர் வழிதர, ஆனந்த பரவசனாய்த் துதி செய்தான். பின்னர் அறக்கடவுளின் பாதங்களிலிட்ட பூப்பலியைத் தன் சிரத்திற் சூடிக் கொண்டு, வெளியில் வந்து சினகரத்தை வலஞ்செய்து அங்குள்ளதோர் மண்டபத்தை

படைந்தான். அவ்விடத்தில் அருந்தவப்பெருங் குன்ருகிய ஒரு முனிவர் வீற்றிருப்பதைக் கண்டு, அவருடைய பாத பத்மங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, "பிறவிப் பிணியை ஒழிப்பதற் கேதுவாகிய நல்லறத்தை எங்களுக்கு உபதேசியுங்கள்" என வேண்டிக் கொண்டான். சீலத்திற் சிறந்த அத்துறவியும் அரசனையும் அவனுள்ளிட்டாரையும் அங்கிருக்கச் செய்து, மனிதர்க் குறுதி பயக்கும் துறவறத்தைப் போதிக்கத் தொடங்கினர்.

"வேந்தனே! உலகத்தில் வாழும் ஆன்மகோடிகள் பலவாயினும், அவைகள் நரககதி, விலங்குகதி, மக்கட்கதி, தேவகதி என நான்குவகைப்படும். அவற்றுள் நரககதி யாவது பாவம் செய்தோர் சேர்தற்குரிய உலகம். அது தொகையில் ஏழாய், வகையில் நாற்பத்தொன்பதாய், விரிவில் எண்பத்து நான்காகும். அவைகள் இருள்நரகம் முதல் கும்பி நரகம் ஈருகும். அவைகளி னியற்கை, எடுத்துச் சொல்லவும் நினைக்கவும் அருவருப்பை யுண்டாக்கும். அக்கொடிய நரகங்களில் தள்ளுண்டவர்கள் படுந்துயரை ஈண்டுரைக்கிற் பெருகுவதன்றி, நம்முடலும் நடுங்கிக் கண்ணீர் பெருகும். நரக காவலாளர் அம்மனிதர்கள் பூமியிற் செய்த பாவங்களை ஒவ்வொன்ருய்ச் சொல்லி, அதற்கேற்ற கொடுந்தண்டனை விதித்து அதையடையும்படி செய்வர். செப்புக் கடாரத்தில் கொதிக்கும் எண்ணெயி விட்டுப் பொரித்தும், பழுக்கக் காய்ச்சிய இருப்புப் பாவையைத் தழுவச் செய்தும், இருப்பாணிகள் அடர்த்துச் செருகிய தண்டத்தாலடித்தும், செம்பு, ஈயம், இரும்பு முதலியவைகளை உருக்கி வாயிற்பெய்தும், நாவையும் கண்களையும் குறடுகொண்டு பிடுங்கியும், உடலைச் செக்கிலிட்டுத் திரித்தும், அக்கினியிலிட்டு வாட்டியும், கத்தியால் குத்திச்

சதைசதையாய்ப் பிய்த்தும், கழுவிலேற்றியும், தோலை யுரித்தும் இன்னம் இவைபோன்ற பல துன்பங்களைச் செய்வார்கள். அந்நரகத்தில் வசிப்பவர்கள் யாவரெனில், தன் மனைவியைவிட்டுப் பிறர் மனைவியை விரும்புகின்றவ னும், மனதில் ஈரமில்லாதவனும், உயிர்க்கொலை செய்பவ னும், தீயவழியிற் பொருளீட்டுபவனும், அறம் செய்யாத வனும், பெரியோரை நிந்திப்பவனும், கடலிலே சென்று மீன் பிடிப்பவனும், பூமியிலே வேட்டையாடிக் காட்டு மிரு கங்களைக் கொல்லுபவனும், இன்னம் இவைபோன்ற பல பாவங்களைச் செய்பவனுமாவர். இவர்கள் ஒருபொழுதும் அந்நரகங்களினின்றும் விடுதலையடையார். அவ்வாறு ஒரு வேளை விடுபட்டாராயினும், பின்னும் தங்கள் கர்மவசத் தினல் பாவங்களைச் செய்து மீண்டும் அங்கேயே வீழ்ந்து அவதிப்படுவார்கள்.

இனி விலங்குகதியாவது ஓரறிவுள்ளன முதல் ஐயறி வுள்ளனவீருக ஐந்து வகைப்படும். ஓரறிவுயிர்கள் அசை வனவும் அசைவில்லனவும் என இருவகைப்படும். பின்னு மதை விரித்துச் சொல்லுவது இங்கு மிகையாகும். ஆகை யால் விலங்குகதி எனப்பொருள் கொள்ளக்கிடப்பது ஈரறி வுடையன முதல் ஐயறிவுடையன வரையில் நான்கையு மாகும். அவைகளும் முற்செய்த பாவத்தால் மிருகங்க ளாகப் பிறந்து ஊர்ந்து செல்லுதலாலும், உழுதுழைத்தலா லும், பாரம் சுமத்தலாலும், மாமிசத்தின்பொருட்டு ஊன் தின்போரால் கொள்ளப்படுதலாலும், பின்னர் ஊனுண வின் பொருட்டுக் கொல்லப்படுதலாலும், அரசர்கள் செய் கின்ற வேட்டையாலும், வேடர்களாலும், வருந்தி இறக் கின்றன. அரசனே! கன்னியர் வேட்கையும், கடவுளின் இலக்கணமும், பிணியின் வன்மையும், விலங்கின் கொடுமை

யும் ஆகிய இவைகளைக் குற்றமற்ற ஞானிகளே யன்றி மற்றவர் அறியார். இவ்வகை விலங்குகளாகப் பிறந்து கஷ்டப்படுபவர்கள் யாரெனில் தவவேடம்பூண்டு பிறரை வஞ்சிப்பவரும், இரசவாதம் செய்து பொன்னை மிகுதியாகக் கொடுப்போம் எனச் சொல்லிப் பொருளுடையாரை ஆசை வார்த்தைகளால் மயக்கி அவரது பொருளைக் கவர்ந்து செல்பவரும், உயிர்களுக்குத் துன்பம் செய்ய அஞ்சாதவரும், ஒரு காலத்திற் சிநேகம் பூண்டு, பின்னர் குரோதத்தினல் பகைமை கொண்டு அவனுக்குத் தீங்கிழைப்பவரும், சுற்றத்தைப் பகைப்பவரும், "உயிரானது அழியத் தக்கது. பிறவி, பாவம், புண்ணியம், மோக்ஷம், நரகம் என்பன ஒன்றுமில்லை. கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" எனச் சொல்லித் திரியும் நாஸ்திகரும், இவர்போன்ற பிறரும் ஆவார்கள்.

இனி மக்கட்கதியாவது, அது ஏக கதியா யிருப்பினும் அவர்களுள்ளும் சேகர், மிலேச்சர், மனிதர், திப்பியர், போகமனிதர் என அனேக விகற்பங்கள் உள்ளன. அவைகளில் சேகர் மிலேச்சர் என்னு மிருவகையோர் மனிதப் பிறப்பாயினும், அறிவு குணம் முதலியன இல்லாமையால் விலங்குகளுடனே சேர்த்தெண்ணப்படுவார்கள். மனிதருள்ளும் நடுநிலைமை யில்லாதவரும், குணங்கெட்டுக் குதர்க்க முரைப்பாரும், கொடுந்தொழில் செய்வோரும், பெரியோரால் விலக்கப்பட்ட செய்கைகளை யுடையாரும், இவர் போன்ற மற்றவரும் விலங்கின் கதியோடு சேர்த்தற்குரியவர். இவர்களை யொழித்து, நன்னிலத்திலும் நற்குலத்திலும் பிறந்தாரேனும், செய்யத் தக்கதிது செய்யத்தகாதிது என்னும் பகுத்தறிவில்லாதவர்கள் மக்களுட் பதர் எனக் கொள்ளப்படுவர். இவ்வாறின்றி ஊழ்வினைப் பயனல்

நற்குலத்திற் பிறந்தாலும், அலி கூன் குருடு முடம் செவிடு முதலியனவாகப் பிறத்தல், மானிட சென்மத்துக்குரிய நல்விதியன்று. இக்குற்றங் குறைகள் ஒன்றுமில்லாமல் கருவிலழிதல், பிறந்தவுட னிறத்தல், யவ்வனத்திற் சாதல் முதலிய சம்பவங்களின்றி, இடையிடையே வரும் பிணித் துன்பங்களுமின்றி, நல்லொழுக்கத்திற் றலைநின்று வாழ்பவரே மானிடர் எனப் பெருமையாகச் சொல்லப் படுவாராவர்.

இனி மனிதர் இங்கு அனுபவிக்கும் இன்பமானது நிலையற்றது. அது எவ்வாறெனில்,

‘ஆனைதுரப்ப வரவுறை யாழ்குழி
நாநவிர் பற்றுபு நாலு மொருவனேர்
தேனினழிதுளி நக்குந் திறத்தது
மானுடரின்ப மதித்தனை கொண்ணீ’

ஒரு மனிதனை மதயானை துரத்த உயிர் தப்பும்படி யோடி வந்து ஒரு பாழுங்கிணற்றில் விழுந்து, அங்கு முளைத்த வொரு புல்லைப் பற்றிக்கொள்ள, கீழே படமெடுத்துப் பாம்பு ஒன்று சீற, மேலே கரையில் யானை காத்திருக்க, பற்றிய புல்லை ஒரு எலி கறிக்க, இந்நிலையில் நிற்குமவன் தனக்கு மேலே கட்டியுள்ள தேன் கூண்டினின்றும் ஒரு மதுத் துளியானது ஒழுகித் தன் வாயில் விழ, அதனைச் சுவைத்துச் சந்தோஷப்படுவதைப் போலாகும். ஆனல், என்றும் மனிதரால் அடையும் பயன் ஒன்றுமில்லையோ வெனின், அது கற்பகப் பூம்பொழில்களையுடைய போக பூமியை யடைபவர்க்குண்டு. அவணடைதற்கு ஒழுக்கம், தானம், தவம், பூசனை, என நான்கும் வேண்டும்.

ஒழுக்கமாவது நீதி நூற்களிற் கற்றவாறும், பெரியோர்வாய்க் கேட்டவாறும், அகமும் புறமும் தூயதாய்ப்

பிறர்க்குத் தீங்கின்றி நடப்பதுமே யாகும். தானமாவது ஏற்போருக்கு ஒன்றீவது. துறவு, அடக்கம், பிறர்க்கு நன்மை செய்யல், சுற்றம் விரும்புதல், உண்மைவழி நிற்றல், பெற்றதில் திருப்தியடைதல் முதலியன ஏற்பாருக்குள்ள குணங்களாம். காலத்திலீவதும், மனக்கொடுமையில்லாமையும், ஈதலில் ஆசைகொள்ளுதலும், ஏற்பவரிடத்து அன்பும், பொருளின்மேல் பற்றில்லாமையும் ஆகிய இவைகள் ஈவோர்க்குள்ள குணங்களாம். ஈவோன் ஒருவன், இரப்பான் ஒருவனைத் தன் வாயிலினிடத்துக் கண்டவுடனே எதிர் சென்று, இனிய முகத்துடன் இன்சொற் கூறி வரவேற்று, தன்னுலியன்றதை அப்போதே கொடுத்தல் வேண்டும். அவன் பின்னர் பூலோகமாளும் அரசனாகப் பிறந்திடுவான். அவ்வாறன்றி, உயிர்களைக் கொன்று தின்னும் கொடியர்களுக்குத் தானம் செய்யின் அவ்வீவோன் கதி நகைப்புக்கிடமாகும். தன் கைப் பொருள் இழப்பதுமன்றி அவன் நரகவாசமும் செய்வான். அவன் ஒரு வன்கண்ணனை வலிதிலழைத்துக் கை நிறையப் பொருள் கொடுத்து, "என்னைத் தண்டித்திடுக" எனச் சொல்பவனைப் போலாவான். இனி எல்லா நற்குணமு மமைந்த பெரியோர்களுக்குக் கொடுக்குந் தானபயன் அவனை உத்தம தேவர்களுக்குள் ஒருவனாக்கும்.

இவ்விசேஷ பலனளித்தற்குக் கூடுமான பல சாமானிய தருமங்களு முண்டு. அவை அருள், தெருள், நற்குணத்திலார்வம், புகழ்ச்சி நிகழ்வு, தவம், ஞானம், தியான நிகழ்வு என எழு வகைப்படும். அவற்றுள், அருளாவது உயிரையுடையது யாதேனுமொன்று இடர்ப்படுமாயின் அத்துன்பத்தைக் கண்டிரங்கி, உடனே அது தீரும் வழியைச் செய்வதாம். தெருளாவது ஒருவன்

தன்னை வையினும் வாழ்த்தினும் அல்லது வாளா இருப்பினும், அவனிடத்து முறையே கோபங் கொள்ளுதலும, மகிழ்தலும், வெறுததலுமன்றி நல்லறிவோடிருத்தலாம். நற்குணத்தின்கண் ஆர்வமாவது அறிவுடைய பெரியோர், முனிவர் இவரிடத்தன்பு வைத்தல், துறவியொழுக்கத்தை யுவத்தல் முதலிய நற்குணங்களை விரும்புவதாம். புகழ்ச்சி நிகழ்வாவது தன்னுலியன்றவரை விரதம் நோற்றலும், நல்லொழுக்கம் தவரு திருத்தலும், பெரியோரைப் போற்றுதலுமாம். தவமாவது ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், சுகுச்சை என்னும் அறுவகைக் குற்றங்களுமற்ற அரிய பெரிய நிலையை யடைந்து, ஒழுக்கத்தில் தலைநிற்றலாம். ஞானமாவது நூலின் உட்பொருளைக் கேட்டு நுண்ணறிவுடையோரால் ஆராய்ந்தறியப்படுவதும், மயக்கமாகிய அஞ்ஞான இருளைப் போக்குவதும், உண்மைப் பொருளை விளக்கும் சுடராகவுள்ளதுவுமாம். தியான நிகழ்வாவது வீடு பேறு விரும்புவோர்க்குக் கடவுள்மீது அகத்து நிகழும் உணர்ச்சியாம். அது ஆர்த்தம், இரௌத்திரம், சுக்கிலம், காட்சி என நான்கு வகைப்படும். அவற்றுள் முதலிரண்டு தியானங்களும் ஜனன மரணங்கட் கேதுவாகும். பின்னிரண்டும் போக மோக்ஷத்தைக் கொடுக்கும். இனிப் போக மனிதராவர் தகுதியான தான தருமங்களைச் செய்து, தமது தவப்பயனுல் போக பூமியில் வசிக்கப் பெற்றவராவார். ஞானம் சிறக்கும் அருக முதல்வனும், இனிப் பிறப்பு இறப்பின்றி வீடுபெற்ற பெரியோரும் இப் போக நிலத்தில் உத்தமராவர். அவர்கள் அனுபவிக்கும் இன்பத்தை விரித்துரைக்க யாவராலு மியலாது.

இனித் தேவகதியாவது தகுதியுள்ளதாகிய தானம், தவம் முதலியவற்ருல் புண்ணியம் மிகச் சேர்த்தவர் தேவ

இன்பம் அனுபவித்திருத்தலாம். அத்தேவர்கள் பவணர், வியந்தரர், சோதிடர், கற்பகர் என நால்வகைப்படுவர். இவர்கள் ஒவ்வொரு வகுப்பினரும் பல உட்பிரிவினை யுடையவராவர். அவற்றை இங்கு விரித்துரைப்பின் மிகை யாகும். இவர்களில் பவணர் ஆயிரம் பணிப்பணு முடி யையும் அக்கினிச் சிகையையு முடையவராயிருப்பர். வியந் தரர் என்போர் கின்னரர் கந்தர்வர் முதலியோராவர். இவர் களில் ஒரு சாரார் இந்திரலோகத்தின்கண் எங்கும் செல்பவ ராய், கின்னரத்தோடு இன்னிசைவல்லராய், எப்போதும் திருவிழாக் கொண்டாடி உவப்பவராயும், மன்னரை வழி பட்டு வாழ்பவராயும் மனமகிழ்ந்திருப்பர். மற்றொரு சாரார் குல கிரிகளிலும், பல குன்றுகளிலும், குளிர்ந்த சோலைகளிலும், தண்ணிய நீர் நிலைகளிலும், தீவுகளிலும், கடற் கரைகளிலும், பரந்த வெளிகளிலும், பெருத்த நகரங் களிலும், உருவம் மறைந்தும் வெளிப்பட்டும் வசித்திருப் பவர்கள். சோதிடர் என்போர் சூரிய சந்திரர், தாரகை கள், நாள் நட்சத்திரங்கள், கோள்கள் முதலியோராவர். இவர்கள் ஒளியுருவமாய் அந்தர வழியாய் மந்தர பரு வதத்தைச் சூழ்ந்து வலம் வருபவரும் அசையாது நிற்பவரு மாவர். கற்பகர் முன் கூறியவர்களுக்கு மேலேயுள்ள கற்பக உலகத்துள்ளோர். இவர்கள் சதாகாலமும் இன்பத்தையே யனுபவித்திருப்பர்; துன்பம் சிறிதும் அணுகப்பெறார். இவர்கள் தேகம் ஒளி விளங்குபவராய், நெடிய கிரீடம் தரித்தவராய், வாடாத கண்ணியும் மாலைகளு முடையவ ராய், மாசடையாத துகிலை உடுத்தவராய் இருப்பர். இவர்கட் குக்கண்கள் இமைத்தலில்லை. இறப்பும் பிறப்புமில்லை. இர வும் பகலுமில்லை. குளிரும் வெப்பமுமில்லை. அவர்கள் அணு வளவாய்க் குறுகித் தோன்றல், பின் மலையளவாய்ப் பெரு கித் தோன்றல், நினைத்தவரிடத்து அவர் நினைத்த உருவத்

தோடேகுதல், அவர் விரும்பிய பணியிலமைத்தல், எண்ணிய வாங்கே பல வுருவங்கொள்ளுதல் முதலிய பல குணங்களையு முடையவராவர். இவ்வாறாக அம்முனிவர் நான்கு கதிகளையுங் கூறிப் பின்னர் அக்கதிகளையடையும் வழியையும் விரித்துரைத்தார்.

இத் திவ்யோபதேசத்தைக் கேட்ட பயாபதி வேந்தன் துறவிப் பெருமானை நோக்கி, "அறிவுடையீர்! உமது நன்மொழிகளாற் பெரிதும் பயனடைந்தேன். இனி அடியேன் பேரின்பம் நுகர்தற்குரிய வீடு பெற நன்முயற்சிகளைத் தொடங்குவேன்" என்று பணிந்து விடைகொண்டு, சுற்றத்தாருடன் தன்னிருக்கை யடைந்தான்.

---

10. முத்திச் சருக்கம்

பொழுது புலர்ந்ததும், பயாபதிவேந்தன் அமைச்சர்களை யொன்று கூட்டி அவர்களை நோக்கி, "அறிவிற் சிறந்த ஐயன்மீர்! நேற்றுச் சினகரத்தில் தபோமுனிவர் உபதேசத்தைக் கேட்டுத் துறவறம் பூண உறுதி கொண்டிருக்கின்றேன். அதைக்குறித்து உங்கள் யோசனையைச் சொல்லுங்கள்" என வினவினன். மந்திரிகளில் தலைவன் எழுந்து, "வேந்தர் வேந்தே! உமது கொற்றம் என்றும் வாழ்க" என வாழ்த்தி, "தூயவர் உரைத்த நன்மொழிகள் தள்ளத் தக்கவையன்று. ஆயினும் திடீரெனத் தாங்கள் உலகங் காப்பதை விட்டுத் துறவறம் பூணுதல் நியாயமாகாது" எனக் கூறினார்கள். அரசன் அமைச்சர் வார்த்தைகளுக்குச் சிறிது மிணங்காமல் வீடுபெற முயல்வேன் என்று உறுதியாகக் கூறினன்.

அப்போது மந்திரிகள் அரசனுக்குள்ள மனவுறுதியைக் கண்டு, இனி இவன் தவத்தைச் செய்து முடித்திடுவன்

என நம்பினவர்களாய், அவனது விருப்பத்திற் கிணங்கி, அச்செய்கையைக் குறித்துப் பின்வருமாறு பேசினர். “எங்கள் தலைவனே! வெகு காலமாக இருள் நிறைந்த நரகத்தில் வீழ்ந்து வருந்திப் பின் ஒரு புண்ணியவசத்தால் அப்பாழும் நிரயத்தினின்றும் விடுபட்டு வெளிப் போந் தானை வேறொருவன் கண்டு மீண்டும் உன்னை முற்கூறிய நரகக்குழியில் உருட்டி விடுகின்றேன் வா என்று கூறுவானா யின் முன்னவன் அதற்குடன் படுவனோ? கொடிய சிறைச் சாலையிலே அகப்பட்டு, அதன் துன்பங்களை மிகுதியாக அனுபவித்து அதனின்றும் விடுபட்ட ஒருவன் மீளவும் அச்சிறைச்சாலையை விரும்பிச் செல்லத் துணிவனோ? அவர்களைப்போல எப்பொழுதும் கட்டுப் படுத்தும் இப் பிறவித் துன்பத்தை யொழித்திட்டு, வீடடைவதற்குத் தவம் செய்யத் துணிந்தவர்கள் தம்மை ஆசையாகிய பாசத் தாற் கட்டிச் சம்சாரமாகிய சாகரத்திலே யமிழ்த்துகின்ற புத்திர மித்திர களத்திராதிகளின் தொடர்பைச் சிறி தும் மதியார்கள். அவர்கள் அரசச் செல்வத்தைக் காலி லொட்டிய தூசாக எண்ணுவார்கள். ஆதலால் வேந்தே! இனி நீங்கள் சிரசிற் றரித்த கிரீடத்தை யிறக்கி, யுவராஜன் சிரத்திலே சூட்டித் தவம்புரிதல் நன்று” எனக் கூறித் தாங்களும் அதைப் பின்பற்றினர்.

பின்னர் அரசன் தனது புதல்வர்களை யழைத்துவரச் செய்து, தன்னெதிரில் வைத்துக்கொண்டு, இதமான சில வார்த்தைகளைச் சொல்வானாயினன். “புதல்வர்காள்! பொருளில்லாதார்க்கு இம்மையின்பமும், அருளில்லா தார்க்கு மறுமையின்பமும் இல்லை. கற்றறிவில்லாதார்க்கு நுண்ணறிவில்லை. அதுபோன்று புண்ணிய மில்லாரிடத் துச் செல்வமகள் நிலைத்து நிற்கமாட்டாள். மேலும் அச்

செல்வமகளின் தன்மையைச் சிறிது சொல்லுவேன் கேளுங்கள். செல்வமகள் தான் வெகு நாளாகத் தங்கியிருந்த மனிதனை விட்டுப் பிரிந்து சமயம் வந்தபோது வேறொருவனை யடைவாள். ஒருவனிடத்தும் மெய்யுறவு கொள்ளாள். பொருள் இருக்கு மளவும் அது காரணமாக விரும்பி யிருந்து, அப்பொரு ளில்லையானல் அவனைவிட்டு நீங்கும் கணிகையரைப்போல, செல்வமகளும் புண்ணிய முள்ளள வும் ஒருவன்பாலிருந்து, அப்புண்ணியம் தீரவும் அவனை விடுத்து விலகிச் செல்லுவள். ஒருவனிடம் சேர்ந்து சில நாள் தங்கியிருப்பின் அவனது நற்குணங்களைப் போக்கி, கோபம் செருக்கு முதலிய துர்க்குணங்களை யுண்டாக்கு வாள். கற்றவரென்றும் கல்லாதவரென்றும் அவள் மதிப்ப தில்லை. ஆதலால் அப்பொருள் மடந்தையை எந்நாளும் ஒரு சிறிதும் விரும்பாதீர்கள். அவளைப் புறத்தே விடுத்து விலகுங்கள். உங்கட்கு இதத்தைச் செய்கின்ற உறவினர் கற்றறிந்த மேலோரேயாகலின் அவர்களிடத்துப் பற்று வையுங்கள்.

இனி நிலமகளின் தன்மையைச் சிறிது கூறுகின்றேன். அவளும் ஒருவரை நற்குணமுடையாரென்றும் துர்க்குண முடையாரென்றும் வேறுபாடறியாள். வல்லமையும் உபாய மும் எவனிடத்துள்ளதோ அவனையே விரைவிற் போயடை வாள். மண் மடந்தையை யடைந்து வாழ்ந்து பின்னர் அது நீங்கப் பெற்றவர் கடற்கரை மணலினும் பலராவர். தன்னை நெடுங்காலம் ஆதரித்து வந்த அரசன் இவன் என்று ஒருவ னிடத்தும் உரிமைகொள்ளாள். யாரிடத்தும் பற்றுவை யாள். எவனொருவன் தன்னை வலிதிற் கைக்கொள்ளுவானே அவனிடத்தே சென்று விடுவள். முன்னுழிகைவரையும் தன்னைத் தாங்கியிருந்த அரசன் போர்க்களத்தில் மடிந்து

புழுதியிற் புரளக் கண்டு சிறிதும் இரக்கமின்றி, அவனை வதைத்தவனையே பின்னாழிகையில் அடைவாளானால், அவள் குணங்களை இன்னமும் விரிவாய்க்கூற வேண்டுமோ? அது அவளதியற்கை. ஆகையால் நிலத்தின் மீது ஒரு பொழுதும் ஆசை கொள்ளாதீர்கள். உமது பூமி பாரத்தை உங்கள் மக்கள் தாங்கும் பருவத்தை யடைவார்களானால் நீங்களும் உங்கட் குறுதி பயக்கும் நல்வழியைத் தேடி யடையுங்கள். புத்திரர்களே! இன்று முதல் இப்பூமியின் காவல் உங்களுடையதாகும். யான் இனி வேறொரு அரசாட்சியைப் பெற முயல்வேன். நீங்கள் என்னுடனிருந்து வாழ்ந்த நாட்களோ சில; இனி நீங்கள் வாழ வேண்டிய நாட்களோ பல. ஆதலால் நீங்கள் எனது பிரிவினால் வருந்துதல் வேண்டாம். யான் வீடு பெறுதற்குரிய துறவைக் கைக்கொள்வேன்" என்று கூறினான்.

அம்மொழிகளைக் கேட்ட விஜயதிவிட்டர்கள் தங்கள் பிதாவை நோக்கி, "எந்தாய்! இவ்வாறு நீங்கள் எங்களை விட்டு நீங்குவதற்கு யாங்கள் செய்த பிழை யேதேனு முண்டோ? கூறி யருளுங்கள்" என வேண்டிக்கொண்டனர். அரசன், "இல்லை, இல்லை. நீங்கள் யாதும் குற்றம் செய்யவில்லை" என்று கூறிப் பின்னர் அவர்களோடு உரையாடுவதைவிட்டு அயலானைப் போன்றிருந்தனன். பிறகு அரசன் அந்நாள்வரையும் தனக்கு அமிர்தமும் ஆவியும் போன்றிருந்த மனைவியர்களை யழைத்து, "பாவைகாள்! யான் தவத்திற்குச் செல்லுகின்றேன். உங்கள் கருத்து யாது?" எனக் கேட்டனன். அவர்கள் "தலைவ! நீங்கள் உயிரும் யாங்கள் உடலுமன்றோ? அவ்வாறிருக்க உயிர் பிரிய நேரிடுமானால் இவ்வுடலினாலாகும் பயன் என்ன? ஆகையால் நாங்களும் தவம் செய்யப் புகுந்தோம்" எனக்

கூறினார்கள். இதை யறிந்த அமைச்சர்களும் இனியொரு கணமும் தாமதித்தல் கூடாதென்று கருதி, தாங்களும் தவம் செய்யும்பொருட்டுத் தங்கள் மந்திரச் சுமையை இறக்கி வைத்திட்டுத் தவத்தில் தலைப்பட்டனர்.

அப்போது சுரமை நாட்டினை யாண்ட பயாபதி வேந்தன் தேவர்கள் கொண்டுவந்தபாற்கடல் நீரிலே முழுக முனிவரது சொற்படி அரச பூஷணங்களை யெல்லாங் களைந்திட்டான். அப்பெரு வேந்தன் இராஜ கிரீடத்தை நீக்கிய பொழுது தேவர்கள் இதனினும் பெரியதொரு முடியை அடையக் கடவாயெனப் பாற்கடல் நீரை அவனது சிரத்திற் பெய்தனர். அரசன் துறவு பெற்றதைக்கண்டு, அவன் கீழுள்ள சிற்றரசர் பலரும் தங்கள் அரசச் செல்வத்தைத் தத்தம் புதல்வர்க்கீந்து, தாமும் கிரீடங்களைக் களைந்து தவம் செய்யப் புகுந்தனர்.

தங்கள் பிதாவின் சிரத்திலிருந்து கிரீடம் நீங்கிய போது, விஜய திவிட்ட குமாரர்கள், "ஐயனே! நாங்கள் இதுகாறும் தங்கட்குப் புதல்வராயிருந்தோம். இன்று முதல் அயலாராயினோம்" என உலையிலிட்ட மெழுகைப் போலுருகிக் கண்களில் நீர் பெருக வாய்விட்டுப் புலம்பினர். "வேற்றரசர் பலர் வந்தடி பரவ, எங்களை யேந்தித் தம்மார்மீது அணைத்துக் கொண்டாடும் எமது தந்தையார் இன்று எதிலார் போலானார். மார்பிலணிந்த மாலைகள் மலர் சிந்தும்படி அகற்றி நாங்களணிந்தும், அவர் தோள்களின்மீதேறி விளையாடியும் செய்கின்ற எமது சீராடல்களை இனி யார் கொண்டாடப் போகின்றனர்? அந்தோ! இது மிகக்கொடிது, கொடிது" எனச் சொல்லிப் பெரிதும் வருந்தினர்.

அவ்வேளையில் முனிவர்கள் அப்புதல்வர்களை நோக்கி, "செல்வர்காள்! உங்கள் தந்தை பொய்யாகிய இம்மெய்யைக் கொண்டு எப்போதும் நிலையுள்ள வீட்டைப் பெறுதற்கு முயலும் இவ்வீரச் செயலுக்கோ நீங்கள் துன்புறுவது!" என்று சொல்லி அவர்களின் துன்பத்தைத் தணித்தனர். அரச குமாரர்கள், "அவ்வாறாயின் நாங்கள் வருந்துவது பெரும் பிழையாகும். எமது பிதா அவர் கருத்தின் படியே செய்யக் கடவர்" என முனிவரிட முரைத்து வருத்தந் தீர்ந்து, அங்கிருந்தாரிடம் விடை கொண்டு தம் மிருக்கை யடைந்தனர். சேனை வீரர்களும் மற்றுளோரும் இவ்வரசச் செல்வத்தையும் மற்ற இன்பங்களையும் காலிற் கொன்[illegible] துகளாகவுங் கருதாத அரசன் இனி நம்மை ஒரு பெ[illegible]ந மதிப்பனோ என நினைந்து, அரசனைத் தொ[illegible] விடை கொண்டு சென்றனர்.

[illegible]ாபதி வேந்தன் முனிவரின் அருளினால் ஐம்புலன் களையு மடக்கி, காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற் றங்களையும் ஒழித்து, வீடு பெறும் தவத்தில் நின்றான். இமையவர்கள் மனத்தில் அறவாழி யமிர்தம் பெருக வுட் கொண்டு ஒளி நிரம்பிய பயாபதி முதல்வனைப் பலவாறாகத் துதித்துப் புகழ்ந்து விழாக் கொண்டாடி, தத்தம் இருப் பிடம் சென்றார்கள். பயாபதித் தவமுதல்வன் நாற்றிசை களிலும் பேரொளி விளங்கும்படி உலகத்தின் முடிக்கு ஒரு சூ[illegible]ணி யா[illegible]ன்.

விஜய திவிட்டர்கள் [illegible] சூழ்ந்த பெரிய இவ்வுலகத் [illegible]தக் கோல்கோணாது நெ[illegible]ள் அரசாண்டு இனிது வாழ்ந் திருந்தனர்.

சுபம்.

சாந்தி அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

DMC
223147